
மாநில சுயாட்சியும் இந்தியப் பொருளாதாரமும்



வழக்கறிஞர்
கே. எஸ். ஆனந்தம்

தங்கம் வெளியீடு—2

மாநில சுயாட்சியும் இந்தியப் பொருளாதாரமும்

கே. எஸ். ஆனந்தன், பி. காம்., பி. எல்.
வழக்கறிஞர்
கோபிசெட்டிபாளையம்


தங்கம் பதிப்பகம்
கோபிசெட்டிபாளையம்

மாநில சுயாட்சியும்
இந்தியப் பொருளாதாரமும்

முதற் பதிப்பு—டிசம்பர், 1975

விலை ரூ. 5/-

மறைமலை அச்சகம்,
புன்செய்ப் புளியம்பட்டி,
கோவை மாவட்டம்.



முன்னுரை

"மாநிலத்திலே சுயாட்சி; மத்தியிலே கூட்டாட்சி." —இது தி. மு. கழகத்தின் அடிப்படை இலட்சியம் மட்டுமல்ல; "வேற்றுமைகளில் ஒற்றுமை காணுதற்குரிய" கூட்டாட்சிக் கொள்கையின் (Federalism) மூலச்சுருதியும் ஆகும். ஆயின் இந்தியத் துணைக் கண்டத்தின் இன்றைய நிலைதான் என்ன? நமது அரசமைப்புச் சட்டம் (Constitution), இந்திய நாட்டை உண்மையானதொரு கூட்டாட்சி நாடாக (Federation) உருவாக்கவில்லை; மாறாக மத்திய அரசின் பக்கமே பெரிதும் சார்ந்துள்ள ஓர் "அரைகுறைக் கூட்டாட்சியை" (Quasi Federation) உருவாக்கி வைத்துள்ளது.

அமெரிக்கா, இரஷ்யா, சுவிட்சர்லாந்து, ஆஸ்தி ரேலியா போன்ற உண்மைக் கூட்டாட்சி நாடுகளில் மாநிலங்களுக்குத் தரப்பட்டுள்ள முழுத் தன்னாட்சியினை இந்திய மாநிலங்கள் பெறவில்லை. சட்டம் இயற்றுத் துறை, நீதி, நிர்வாகம், ஆட்சி அதிகாரங்கள், மொழி இன உரிமைகள் போன்ற எல்லாத் துறைகளிலுமே இந்திய மாநிலங்கள் மத்திய அரசை அண்டிக் கிடக் கின்றன.

மாநில அரசின் உயிர்நாடி அதன் பொருள் பொரு ளாதாரமே. மாநில நிதி வாயில்களும் (Financial Resources) தொழில்களும், வரவினங்களும், மாநிலப் பொருளாதார இயக்கத்தின் அடிப்படை அம்சங்கள் ஆகும். இவற்றை இந்திய மாநிலங்கள் முழுமையாகப் பெற்றுள்ளனவா? இல்லை. இந்திய அரசமைப்பில், மாநில அரசுகள் நிதித்துறையில் செம்மையாக இயங்க இயலா அளவிற்கு மத்திய-மாநில நிதி உறவுகள் பற்றிய சட்ட விதிகள் குழறுபடியாகச் செய்து வைக்கப்பட்டுள் ளன. நிதித் துறையில் பேரதிகாரங்கள் அனைத்தையும் மத்திய அரசிற்கு வழங்கிவிட்டு மாநில நிதிவாயில்கள் முடக்கப்பட்டுவிட்டன. அதுமட்டுமல்ல; சென்ற கால் நூற்றாண்டு காலப் பகுதியில், மாநிலங்களை மேலும் அடிமை கொள்ளும் வகையில் அரசியல் சட்ட நிலையை யும் மீறிய சில புதிய நடைமுறை ஏற்பாடுகளையும் அமைப்புக்களையும் நமது காங்கிரஸ் மத்திய அரசு உரு வாக்கிச் செயல்படுத்துவதன் மூலம் தனது அடக்குமுறை ஆட்சியை நிதித்துறையிலும் நடாத்தி வருகின்றது.

இன்றைய இந்தியப் பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளையும் மத்திய - மாநில உறவுகளின் அடிப்படை யில், கட்சிக் கண்ணோட்டமின்றி, நடுநிலையில் நின்று முறையாக ஆய்ந்து இந்நூலில் சுருக்கமாக வரைந்துள் ளேன். மாநில சுயாட்சி பற்றிப் பல்வேறு கோணங்களி லும் ஆய்வு செய்து 1200 பக்கங்களில் வடிக்கப்பட்ட எனது ‘மலர்க மாநில சுயாட்சி’யைச் சென்ற ஏப்ரல் திங்க ளில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், நடமாடும் பல்கலைக் கழகமாம் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களது தலைமையில் அன்போடு பாராட்டி வெளியிட்டதற்குப் பின்னர், தமிழக மக்கள் மற்றும் அரசியற் கட்சி கடந்த அறிஞர் பெருமக்கள் அந்

நூலுக்குத் தந்த 'ஊக்கத்தால்', இச் சிறுநூலை எளிய விலைக்குக் கிடைக்கும் வகையில் ஆக்கித் தந்துள்ளேன். நிதி உறவுகள், பொருளாதாரம், மாநில சுயாட்சி போன்ற பல பகுதிகள் 'மலர்க மாநில சுயாட்சி' நூலிலிருந்து திரட்டப்பட்டவையாகும்.

இச் சிறுநூலைச் சிறப்போடும் அழகோடும் அச்சிட்டுத் தந்த புன்செய்ப் புளியம்பட்டி மறைமலை அச்சகத்தாருக்கும், செம்மையாகப் பதிப்பித்து வெளியிட்ட "கோபி, தங்கம் பதிப்பகத்தாருக்கும்" எனது அன்பூறும் நன்றியை உரித்தாக்குகின்றேன். அரசியற் காழ்ப்புணர்ச்சியின்றி, கட்சிப் பாகுபாடு கடந்து இச் சிறுநூலுக்குப் பேராதரவு நல்க வேண்டுமெனத் தமிழக மக்களைக் கரம் கூப்பி வேண்டுகின்றேன்.

அன்பன்,

கோபிசெட்டிபாளையம்,
19—12—1975.

கே. எஸ். ஆனந்தம்,
ஆசிரியர்.

உள்ளுறை

1. மாநில சுயாட்சி

"உண்மையான கூட்டாட்சி மலர, இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி அமைத்தல்; மாநிலங்களுக்கு முழு மாநில சுயாட்சி அளித்தல்.... ஆகியவை கழகத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும்."[1]

— பேரறிஞர் அண்ணா அவர்கள்.

I. கூட்டாட்சி

அரசியல் நிறுவனங்களையும் (Political Institutions), அரசமைப்புக்களையும் (Constitutions) உருவாக்க வேண்டும் என்ற சிந்தனைகள் மற்றும் செய்வினைகள் மக்களிடம் ஒரே நாளில் திடீரென்று தோன்றி உருவாகி விடவில்லை. இன்றைய உலகின் அரசமைப்புக்கள் பலவும், மூவாயிரம் ஆண்டுகளின் மனித இன வளர்ச்சியின் விளைபொருள்களாகும். மாறி வரும் சமுதாயச் சூழ்நிலைகளினால் தாக்கப்பட்ட தனி நாட்டு மக்கள், அவ்வப்போது எழக்கூடிய புதுப் புது அரசியல் சிக்கல்களையும், சமுதாயப் பிரச்சனைகளையும், தீர்த்துக் கொள்வதற்காக அறிவைப் பயன் படுத்தி அரசியல் அமைப்புக்களையும், அரசு நிறுவனங்களையும் வளர்த்துக் கொண்டனர்.

எனினும் சின்னஞ்சிறு நாடுகள் வலிவான நாடுகளை எதிர்க்கத் தேவையான படை வலிமையையும், பொருளாதார வளர்ச்சியையும் பெற்றிருக்க வில்லை. எனவே, சூழ்நிலைகளின் அழுத்தத்திற்கேற்ப ஒரே பூகோள எல்லைக்குள் இருக்கும் சிறுசிறு நாடுகள், குறிப்பிட்ட சில அரசியல் தொடர்புகளுடன் தங்கள் தனி நலன்களைப் பேணுவதற்காக ஒன்றுடன் ஒன்று ஏதோ ஒருவகையில் இணைய வேண்டியதாயிற்று. நாட்டுப் பாதுகாப்பையே குறிக்கோளாகக் கொண்ட அச்சிறு நாடுகள் ஒன்றுக் கொன்று சற்று விட்டுக் கொடுத்துச் சரிப்படுத்திக் கொள்ளும் (Adjust) பாங்கினையே மூலமாக வைத்து, அதனதன் தனி இயல்புகட்கும் சுதந்திரத்திற்கும் சமுதாயப் பண்புகட்கும் ஊறு நேரா வண்ணம், அவைகளுக்குள் ஒரு நேசக்கூட்டை(Confederation)ஏற்படுத்திக் கொண்டன.

---

1 'இல்லஸ்டிரேடட் வீக்லி' ஆங்கில ஏட்டிற்கு, 26-9-1965-இல் அறிஞர் அண்ணா தந்த பேட்டி.

ஆனல் அவ்வகை நேசக்கூட்டு, அதன் உறுப்பு நாடுகளிடம் இறுகிய பிணைப்பை உண்டாக்க வில்லை.

அரசியல் பொருளாதாரச் சூழ்நிலைகட்கேற்ப இன்னும் சற்று நெருங்கிய ஒருங்கிணைப்பினையும், பொது நலன்களின் ஒருமைப் பாட்டினையும் பேணுகின்ற ஒரு வலுவான கூட்டமைப்பு முறை அதன் பின்னர் வளர்ந்தது. நேசக்கூட்டில் இணைந்த உறுப்பு நாடுகள் பொது நலன் கருதித் தனது தனிச் சுதந்திரத்தையும் கூடச் சற்று விட்டுக் கொடுத்து, வலிவான இணைப்பை உருவாக் கும் ஒரு மத்திய அரசின் கீழ் தங்களைத் தாங்களே பின்னர் ஆட் படுத்திக் கொண்டன. இவ்வகையில், பல தனி நாடுகளைப் பொதுவானதோர் அரசாங்கத்தினடியில், முறையாக இணைக்கத் தக்க கூட்டாட்சி முறை (Federal Setup) சூழ்நிலைக்கும் சந்தர்ப் பத்திற்கும் ஏற்ற நல்லதோர் அரசியல் ஏற்பாடு என்ற அளவில் தான் முதன் முதலாக உலகிற்கு அறிமுகமாயிற்று. பலநாடுகள் சேர்ந்து ஓர் ஒப்பந்தத்தின் மூலமாக, பிணைப்பை ஏற்படுத்திக் கொண்ட ஒரு பொது நாட்டிற்கு "கூட்டாட்சி நாடு" [Federation) எனவும் அதனுள் இயங்கும் உறுப்பு நாடுகளுக்கு "மாநிலங்கள்" (States) எனவும் பெயர். உறுப்பு நாடுகளின் பொதுவான மத்திய அமைப்பிற்கு "மத்திய அரசு" (Central Government) என்ற பெயரும் ஏற்பட்டது. இந்த இணைப்பாட்சி முறைதான் கூட்டாட்சி கொள்கை (Federalism) எனப்படுகிறது.

"வேற்றுமைகளில் ஒற்றுமை காணுதலே" (Unity Diversity) கூட்டாட்சி முறையின் அடிப்படை இலக்கணமாகும்.

பரந்த விரிந்த நிலப்பரப்பைப் பெற்ற நாடுகளில், இன வேறு பாடுகளும் பண்பாட்டு வேற்றுமைகளும் சமய மாறுபாடுகளும் மொழி வேற்றுமைகளும் நிறைந்த பலதரப்பட்ட மக்கட் சமுதாயங்களை, அவர் தம் தனித்தன்மைக்கு இடையூறின்றி, ஓர் ஆட்சியின் கீழ்(கூட்டாட்சி அரசு)இணைக்கும் கொள்கைக்குக் கூட்டாட்சிக் கொள்கை எனப் பெயர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா, கனடா, சுவிட்சர்லாந்து, ரஷ்யா போன்ற நாடுகள் பல இனங்களையும், மொழிகளையும் பூகோள மாறுபாடுகளையும் கொண்டவை. அந்த நாடுகள் கூட்டாட்சி அரசுகளைப் பெற்றுள்ளன.

கூட்டாட்சி நாட்டிற்கு இருவகை அம்சங்கள் தேவை. ஒன்று மாநிலங்கள் (உறுப்பு நாடுகள்); இன்னொன்று - அந்த மாநிலங் களை (உறுப்பு நாடுகளை) இணைக்கும் தேசியக் கூட்டுச் சர்க்கார்,

மாநில மக்களுடைய தனிச் சிறப்புக்களையும், பண்புகளையும் மாநில அரசுகள் பேணிக் காக்கின்றன. தேசிய மட்டத்தில், அக் கூட்டாட்சி நாட்டின் எல்லா மக்களுடைய பொது நலன்கள், பொருளாதார நிலை, அரசியல் நிலை இன்னோரன்ன பொது அலுவல்களை, மத்திய அரசு, தனது அதிகார எல்லைக்குள் நின்று செயற்படுத்துகிறது.

ஆகவே, கூட்டாட்சி நாட்டில் மத்திய அரசு ஒரு புறமும், மாநிலங்களுடைய அரசுகள் இன்னொரு புறமும் ஒருங்கே, ஆனால் தனித்துச் செயல்படுகின்றன.

ஒரு கூட்டாட்சி நாட்டில் மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்குமிடையே அந்நாட்டின் அரசியல் அதிகாரங்களை அரசமைப்புச் சட்டம் (Constitution) பிரித்துக் கொடுக்கும்.

மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்களிலும் நிர்வாகப் பணிகளிலும் மத்திய அரசு குறுக்கிடக் கூடாது; ஆக்கிரமிக்கவும் கூடாது. மாநில அரசுகளும், மத்திய அரசின் அதிகார வட்டத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது. ஏனெனில் கூட்டாட்சி நாட்டில் மத்திய அரசும் மாநில அரசுகளும் சம அந்தஸ்து கொண்டவை.

அதாவது, மாநில அரசுகள் இயங்குவதற்காக மத்திய அரசே கதியென அண்டிக் கிடக்க வேண்டியதில்லை. தமக்கெனக் கொடுக்கப்பட்ட அதிகாரப் பிரதேசத்தில் மாநிலங்கள் சுயாட்சியோடு இயங்குகின்றன.

20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற அரசியல் வித்தகரான பேராசிரியர் கே. சி. வியர் (K.C.Wheare) அவர்கள், கூட்டாட்சிக் கொள்கையின் இலக்கணத்தைக் கூறும்போது,

> "பொது அரசாங்கமும், பிராந்திய அரசுகளும், ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட அதிகார வட்டத்திற்குள் சுதந்திரமாகவும் சம தகுதியோடும் இயங்கத் தக்க வகையில் ஓர் அரசினுடைய அதிகாரங்களைப் பங்கீடு செய்து கொள்ளும் முறையினையே, கூட்டாட்சிக் கொள்கையென நான் பொருள் கொள்கிறேன்."2

எனக் கூறுகிறார்.

அவர் மட்டுமல்ல பல அரசமைப்பு விற்பன்னர்களுங்கூட இதனைத் தான் தெளிவுபடக் கூறுகின்றனர்.

---

2 "Federal Government." (1971) Page-10.

எனவே, மாநிலங்களின் இணைப்புக்காகத்தான் மத்திய அரசேயன்றி, மத்திய அரசின் ஆளுகைக்கும் அடக்குமுறைக்கும் மாநில அரசுகள் உருவானவையன்று.

கூட்டாட்சியும் பிரிவினையும்

கூட்டாட்சிக் கொள்கை நடைமுறைக் கொவ்வாத வெறும் தத்துவமல்ல. அரசியலமைப்பின் பரிணாம வளர்ச்சியினுடைய முதிர்ந்த நிலையின் விளைவே கூட்டாட்சிக் கொள்கையாயிற்று.

பல சிறு நாடுகளின் சிறப்புப் பண்பிற்கும் தனித் தன்மைகளுக்கும், மொழி, பண்பாட்டிற்கும் எவ்வகையிலும் இடையூறு ஏற்படாவண்ணம் — அதே நேரத்தில், அந்நாடுகளின் பொருளாதார உயர்விற்கும் பாதுகாப்பிற்கும் அரசியல் தகுதிக்கும் வலிவுக்கும் ஆதாரமாக அமையும் முறையிலும் - ஒரு கூட்டாட்சி நாடு உருவாகிறது.

சரித்திரம், நில நூல் காரணங்கள், சூழ்நிலைகள், நாடுகளின் அரசியல் நிலை, அவை கண்ட சிக்கல்கள், நல்ல தலைமை, ஒற்றுமையடைய வேண்டுமென்ற உணர்வு, இவை யாவும் பல நாடுகளை இணைத்து ஒரு கூட்டாட்சி நாடாக ஆக்குவதற்குத் தூண்டக் கூடிய காரணங்களாகும்.

கூட்டாட்சி நாட்டை உருவாக்க வேண்டுமென்ற பேரவாவினால் உந்தப்பட்டும், பொது வலிவினையும், பொது நலனையும், பொதுப் பாதுகாப்பையும் பெற்றுத் தீர வேண்டுமென்ற நோக்கத்தின்பாற்பட்டும், தனி இறைமை கொண்ட பல தனி நாடுகள், ஒரு கூட்டாட்சி நாடாக மாறினவேயல்லாமல், அவை தனித்தனி நாடாகப் பிரிந்து போகும் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டிருப்பின் கூட்டாட்சி நாடே உருவாகி யிருக்காது. எனவே, பிரிவினைக் கொள்கை என்பது கூட்டாட்சி முறைக்கு முரணானதாகும்.

ஆனால் ஒரு கூட்டாட்சி நாடு உண்மையான கூட்டாட்சிக் கொள்கையைச் செயல்படுத்தா விட்டால், அந்தக் கூட்டாட்சி நாட்டில் மாநிலங்களுக்குரிய பல நன்மைகள் கிடைக்காமல் போய்விடும். மாநிலங்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், மாநில அரசுகளில் மத்திய அரசின் ஊடுருவல்களும், மாநில மக்களின் மொழி, பண்பாடுகளுக் கெதிராக மத்திய அரசின் ஒற்றை ஆட்சிப் போக்கும், அக் கூட்டாட்சி நாட்டிலிருந்து மாநிலங்களைப் பிரிந்து போகச் செய்து விடும்.

II மாநில சுயாட்சி (STATE AUTONOMY)

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதல்விதி,

"இந்தியா எனப்படும் பாரதம் - மாநிலங்களைக் கொண்ட ஓர் ஒன்றியமாக இருத்தல் வேண்டும்."

என அறுதியிட்டுக் கூறுகின்றது.

"India that is Bharat, shall be a Union of States."

"கூட்டாட்சி" (Federation) என்ற சொல் நமது அரசமைப்பில் பயன்படுத்தப் படாவிடினும் "ஒன்றியம்" (Union) என்ற சொல்லால் இந்தியா ஒரு கூட்டாட்சி நாடே என்பது தெளிவாகிறது. "State Autonomy" என்ற தொடரில் 'State' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "நாடு" அல்லது "மாநிலம்" என்ற இரு பொருள்கள் உண்டு.

பிறநாட்டு அரசமைப்பு வரலாறுகளை நாம் ஓர்ந்து பார்த்தால் தனித்தனியாக இயங்கிய பல நாடுகள் ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகக் கூட்டாட்சி நாடுகளாக இணைந்து செயல்பட்டன என்பது புலனாகும். அப்படிக் கூட்டாட்சியில் செயல்படும் போது அந்த உறுப்பு நாடுகள் மாநிலங்கள் என அழைக்கப்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 13 காலனி நாடுகள் முதன் முதலாகக் கூட்டாட்சி அமைப்பில் இணைந்தபோது "United States of America" என அழைக்கப்பட்டது.

ஆனால், இந்திய அரசியல் வரலாற்றை நாம் ஆழ்ந்து படித்தால், இந்தியாவின் பல நாடுகள் எக்காலத்தும் ஒன்றாக இணைக்கப்படவுமில்லை; பல உறுப்பு நாடுகள் இணைந்து இந்தியக் கூட்டாட்சியாக மாறவுமில்லை என்ற பேருண்மை விளங்கும்.

இந்தியாவிலிருந்த பல தனி நாடுகள் ஆங்கிலேயரின் கைப்பிடிக்குள் அடங்கி விட்டன. இந்தியாவின் பல பகுதிகளும், தத்தம் சுதந்திரத்தை இழந்து நின்றன. ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியா முழுமைக்குமாக ஒரே மத்திய அரசால் ஆளப்படும் ஒற்றை ஆட்சி முறையை (Unitary Government) முதன் முதலில் புகுத்தினர். அப்போது மொழி, இன, பண்பாட்டு அடிப்படையில் இந்தியாவை ஆங்கில அரசு மாகாணங்களாகப் பிரிக்கவில்லை. மாறாக நிர்வாக வசதியை மட்டுமே அடிப்படையாக வைத்து, முழு இந்தியாவையும் சென்னை, பம்பாய், கல்கத்தா என்ற மூன்றே தலை மாகாணங்களாகப் (Presidencies) பிரித்திருந்தது.

பல்லாண்டுகள் கழித்து, வசதிக்கும் தேவைக்கும் ஏற்ற முறையில் மூன்று தலை மாகாணங்களும் அவ்வப்போது பல மாகாணங்களாகப் (Provinces) பிரிக்கப்பட்டன. நாட்டுப் பிரிவினையில் 5 மாகாணங்களைப் பாக்கிஸ்தான் பெற்றுக் கொண்டது. பாக்கிஸ்தான் பிரிந்து போன பின்னர் இந்தியாவில் எஞ்சியிருந்த பழைய ஒன்பது மாகாணங்களுக்கும் நமது அரசமைப்புச் சட்டம் 'மாநிலங்கள்' (States) என்ற பெயரை முதன் முதலாகச் சூட்டிற்று.

இப்படிக் கூட்டாட்சி நாட்டின் இலக்கணத்திற் கொவ்வாதிருந்த பல பழைய மாகாணங்கள் அரசியல் சட்டத்தின் தயவில், திடீரென்று மாநிலங்களாகி விட்டன. 'மாகாணங்களிலிருந்து' 'மாநிலங்கள்'என்று ஏற்பட்ட பெயர் மாற்றம், ஆட்சி மாற்றத்தின் ஒரு கால கட்டத்தைத்தான் காட்டிற்றே யன்றி, இந்திய மாகாணங்களின்பழைய அரசியல் தன்மையை மாற்றிவிடவில்லை. அரசியல் ரீதியாக இந்திய மாநிலங்களை(States)யும் சுதேச சமஸ்தானங்களையும் இணைத்து உண்மையான இந்தியக் கூட்டாட்சி உருவாகவுமில்லை. ஆனால் ஏற்கனவே ஒற்றையாட்சி முறையினைப் பெரும்பாலும் கொண்டிருந்த இந்தியா ஓர் அரைகுறைக் கூட்டாட்சியாக (Quasi Federation) அரசமைப்புச் சட்டத்தால் மாற்றப்பட்டது.

அண்மைக் காலம் வரையும் இந்திய மாநிலங்கள், மொழி, இன அடிப்படையில் பிரிக்கப்படாமலேயே இருந்து வந்தன. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாளில், இந்தியத் துணைக் கண்டம் சுதந்திரம் அடைந்த போது, அதில் 9 மாகாணங்களும் ஏறத்தாழ 520-க்கும் மேற்பட்ட சுதேச சமஸ்தானங்களும் அடங்கியிருந்தன. சுதேச சமஸ்தானங்களை யெல்லாம் இந்திய மாகாணப் பகுதிகளோடு இணைத்து, 1952-ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல் நடந்த போது அதிகாரங்களின் தகுதி வாரியாகப் பிரிக்கப்பட்ட A, B, C என்ற 28மாநிலங்கள் இருந்தன. 1956-ஆம் ஆண்டில் மாநிலச் சீரமைப்புக்குழு கொடுத்த அறிக்கையை அனுசரித்து மொத்தம் 14 மாநிலங்களாக இந்தியா பிரிக்கப்பட்டது. 1972-ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து 21 மாநிலங்களும் (States) மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட 9 பகுதிகளும் (Union Teritories) தற்போது சிக்கிமும் சேர்ந்து இந்திய வரை படத்தை அலங்கரிக்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை State Autonomy என்ற தொடரில் உள்ள State என்ற சொல்லிற்கு, 'கூட்டாட்சி நாட்டிலுள்ள ஒரு மாநிலம்' என்ற பொருள் கொள்வது தான் பொருந்தும். இன்னொரு பொருளான "நாடு" எனக்கொண்டால் State Autonomy என்ற தொடருக்குப் பொருள் இல்லாமல் போய்விடும்.

AUTONOMY (அடானமி)—அகராதி அர்த்தங்கள்

State Autonomy (ஸ்ட்டேட் அடானமி) என்ற தொடரில், "Autonomy" (அடானமி) என்பது அடுத்த சொல்.

இது ஒரு சட்டச் சொல் அல்ல. அதாவது இச்சொல்லுக்கு வியாக்கியானம் கூறப்பட்டுள்ளதே யன்றி, சட்டப் பூர்வமான இலக்கணம் இதுவரை தரப்படவில்லை. "Autonomy" (அடானமி) என்றால் பொதுவாக, "தன்னாட்சி" [Self Government] என்று பொருள்.

20-ஆம் நூற்றாண்டின் சேம்பர்ஸ் அகராதியில் [Chamber's Twentieth Century Dictionary]. "Autonomy" என்ற பதத்திற்கு "The power or right of self Government Especially Partial Self Government." என்றே பொருள் சொல்லப்பட்டுள்ளது.

அதாவது "தன்னரசின் அதிகாரம்" "தன்னரசின் உரிமை" "குறிப்பாக அரைகுறைத் தன்னரசு" என்று அதில் பொருள் கூறப்பட்டுள்ளது.

தமிழகச் சட்டத்துறை ஆட்சி மொழி ஆணைக் குழுவால் இயற்றப்பட்ட சட்டச்சொல்அகராதியில் Autonomy = "The State of Independence, especially the political Independence of a Nation or a State" என்றே கூறப்பட்டுள்ளது.

மேலும் 'தன்னாட்சி' என்று தமிழிலும் அதற்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. 'சுதந்திர நிலை, குறிப்பாக ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரம் அல்லது ஒரு மாநிலத்தின் ஆட்சிச்சுதந்திரம்' என அதற்குத் தமிழில் விளக்கமும் தரப்படுள்ளது.

எனவே, 'Autonomy' (அடானமி) என்ற சொல்லுக்குப் பொதுவாக 'தன்னரசு' அல்லது 'தன்னாட்சி' என நாம் பொருள் கொள்ளலாம்.

மாநில சுயாட்சியின் பொருள்

State = கூட்டாட்சி நாட்டிலுள்ள மாநிலம்; Autonomy = தன்னரசு அல்லது தன்னாட்சி. எனவே, State Autonomy (ஸ்டேட் அடானமி) என்ற தொடருக்கு 'ஒரு கூட்டாட்சி நாட்டிலுள்ள மாநிலத்தில் தன்னாட்சி' என்று பொருள்.

ஆனால் இந்த அத்தியாயத்தின் தலைப்பில் 'மாநில சுயாட்சி' என்றே பொறிக்கப்பட்டுள்ளது. 'சுயாட்சி' எனில் சுதந்திரத்தையும் குறிக்கிறதே? ஆகவே 'மாநில சுயாட்சி' என்றால் 'மாநிலத்தின் சுதந்திர ஆட்சி' யென ஏன் பொருள் கொள்ளக்கூடாது? சொற்களிலிருந்து தத்துவம் பிறப்பதில்லை. தத்துவம் பிறந்த பின் அதனை விளக்கிக் காட்டவே சொற்களைத் தேடுகிறோம்; கூடிய வரை சரியான சொற்களைப் பயன்படுத்துகிறோம். எனவே, தத்துவம் தான் மூலமே தவிரச் சொற்கள் அல்ல.

'சுயம்' என்ற வடமொழிச் சொல்லுக்கு, 'தானாக', 'தனித்து' 'சொந்தமான', 'சுதந்திரமான' என்பன போன்ற பல பொருள்கள் வழக்காற்றில் இருந்து வருகின்றன. 'சுயாட்சி' என்ற சொல்லுக்கு வழக்காற்றிலுள்ள அர்த்தங்களின் அடிப்படையில் நாம் பொருள் கொண்டால், 'தானாக இயங்கும் ஆட்சி', 'தனித்து இயங்கும் ஆட்சி', 'சொந்தமான ஆட்சி', 'சுதந்திரமான ஆட்சி' என்று கூடப் பொருள் கொள்ளலாம். அதே மாதிரி, 'Autonomy' (அடானமி) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒப்பாகக் கொடுத்திருக்கும் 'Self Government' (செல்ப் கவர்ன்மெண்டு) என்பதற்கும் 'தான் ஆளும் அரசு'-'தன்னுடைய அரசு'-'தானே இயங்கும் அரசு'-'தனி அரசு'என்று கூட இடத்திற்கேற்றபடி நாம் வலிந்து பொருள் கொள்ள முடியும்.

State Autonomy 'மாநில சுயாட்சி', 'மாநிலத் தன்னாட்சி' ஆகிய இந்த மூன்று சொற்றொடர்களிலும் 'Autonomy','சுயாட்சி' 'தன்னாட்சி' ஆகிய பெயர்ச் சொற்களுக்கு முன்னால் 'State' அல்லது 'மாநில' என்ற அரசியல் ரீதியான பெயரடைகள் (Adjective) உள்ளன. அந்தப் பெயரடையான 'மாநில' என்ற சொல் குறிக்கக்கூடிய அரசியல் ரீதியான பொருளுடன் சேர்த்தே 'சுயாட்சி' அல்லது 'தன்னாட்சி' என்ற சொற்றொடர்களுக்கு நாம் உண்மையான பொருளைக் காண வேண்டும். 'மாநிலம்' என்ற சொல் அரசியல் ரீதியாக, 'கூட்டாட்சி நாட்டிலுள்ள ஒரு மாநிலம்' என்ற விரிவான பொருளைக் கொடுக்கிறது என்பதைத் தெளிவு படுத்தினோம்.

எனவே 'மாநில' என்ற பெயரடைச் சொல்லுடன் 'சுயாட்சி' என்ற பெயர்ச் சொல்லையும் சேர்த்து, 'மாநில சுயாட்சி' என்ற சொற்றொடருக்கு 'கூட்டாட்சி நாட்டிலுள்ள மாநிலத்தின் சுய ஆட்சி' அல்லது 'கூட்டாட்சி நாட்டிலுள்ள மாநிலத்தின் சுதந்திர ஆட்சி' என்ற அரசியல் ரீதியான பொருள் கிடைக்கும்.

கூட்டாட்சி நாட்டிலுள்ள ஒரு மாநிலத்தின் சுயாட்சி யென்றாலும் கூட்டாட்சி நாட்டிலுள்ள மாநிலத்தின் சுதந்திரம் என்றாலும் ஒரே பொருள் தான். அவை இரண்டுமே ஒன்று தான். அவை இரண்டின் தத்துவப் பொருளும் அரசியல் அடிப்படையும் மூலக் கூறுகளும் வெவ்வேறானவையல்ல, ஒன்றேதான்.

பல தனி நாடுகள் சேர்ந்து தங்கள் சுதந்திரத்தைச் சற்று விட்டுக் கொடுத்து, பொதுவான தொரு மத்திய அமைப்பை உருவாக்கி-அதில் இணைந்து-நடாத்தக் கூடிய அரசு முறையைக் கொண்ட நாட்டையே 'கூட்டாட்சி நாடு' (Federation) என்கிறோம். எனவே கூட்டாட்சி நாட்டினுடைய உறுப்புக்கள் (Units) தனி நாடுகள் அல்ல; அவை மாநிலங்களே.

அந்த உறுப்புக்கள் கனடாவில் 'மாகாணங்கள்' எனவும் சுவிட்சர்லாந்தில் 'காண்டன்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன. அவை எந்தப் பெயரை ஏற்றிருந்தாலும் 'கூட்டாட்சி நாட்டின் மாநிலங்கள்' என்றுதான் அவைகளுக்குப் பொருள். அவைகளை இணைக்கும் மத்திய அரசிற்குத் தங்கள் சுதந்திரத்தின் ஒரு பகுதியை அவை விட்டுக் கொடுத்து விடுகின்றன. ஆக, கூட்டாட்சியின் மாநிலங்கள் என்றாலே தனி இறைமை கொண்ட சர்வ சுதந்திரமும் கொண்ட-தனி நாடுகள் அல்ல என்பது புலனாகிறதல்லவா?

எனவே 'மாநில சுயாட்சி' என்றால் கூட்டாட்சிக் கொள்கையை [Federalism] ஏற்றுக் கொண்ட ஒரு கூட்டாட்சி அரசிலுள்ள (Federal Government) உறுப்புக்களின் தன்னாட்சி அல்லது 'மாநிலங்களின் தன்னாட்சி' [தனி ஆட்சியல்ல] என்ற தெளிவான ஒரே பொருள் தான் கிடைக்கிறது.

கூட்டாட்சி அரசமைப்பின் (FEDERAL CONSTITUTION) மூலப் பொருள் எது?

மத்திய அரசிற்குள்ள அதிகாரங்களையும் மாநில அரசிற்குள்ள அதிகாரங்களையும் தனித்தனியாக வரையறுக்கப்பட்ட அதிகார வட்டத்தினுள் நின்று, மத்திய அரசும் மாநில அரசுகளும் ஒன்றை மற்றொன்று அண்டிக்கிடக்காமல் தனித்தனியாகவும் சுதந்திரமாகவும் இயங்கி வர வேண்டுமென்பதே கூட்டாட்சி நாட்டின் அரசியல் கோட்பாடாகும். ஒரு கூட்டாட்சி நாட்டின் மத்திய அரசும் மாநில அரசுகளும், வரையறுக்கப்பட்ட தங்களது அதிகார எல்லைகளுக்குள் அப்படித் தனித்தனியாகவும் சுயமாகவும் இயங்காவிட்டால் அது கூட்டாட்சி நாடுமல்ல; அந்த அரசு கூட்டாட்சி அரசுமல்ல.

மத்திய அரசின் தலையீடு என்றால் என்ன?

மாநில அரசிற்கென்று வரையறை செய்யப்பட்ட அதிகாரங்களிலும் உரிமைகளிலும் எந்தவோர் அமைப்பாவது (அது மத்திய அரசாகவுமிருக்கலாம்; அல்லது மத்திய அரசு சார்ந்த மற்ற நிறுவனங்களாகவும் இருக்கலாம்) செய்யக்கூடிய குறுக்கீடுகளையும் கட்டுப்பாடுகளையும் பொதுவாக 'வெளித் தலையீடு' (Central Interference) எனக் கொள்ளலாம். மத்திய அரசின் அந்தத் தலையீடு நேரடியானதாகவும் இருக்கலாம்; அல்லது மறைமுகமானதாகவும் இருக்கலாம். எனவே, மாநில அரசின் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களிலும் உரிமைகளிலும், மத்திய அரசோ அல்லது அதன் வேறு பல நிறுவனங்களோ, நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ தலையிட்டு மாநிலங்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் நெருக்கிச் சுருக்கிக் கட்டுப்பாடு செய்யாத மாநில சுயாட்சியைத் தான் உண்மையான ஒரு கூட்டாட்சி அரசமைப்பு (Federal Constitution) உருவாக்குகிறது. போர்க் காலங்களிலும் நெருக்கடி காலங்களிலும் தேசத்தின் ஒட்டு மொத்தமான நலன் கருதி, மத்திய அரசு அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில மாநில உரிமைகளைத் தற்காலிகமாகக் கையகப்படுத்திக் கொள்வது எந்தவொரு கூட்டாட்சியிலும் தவிர்க்க இயலாததாகும். அந்தக் குறிப்பிட்ட அரசியற் சூழ்நிலை தீர்ந்த பிறகு, தற்காலிகமாக மத்திய அரசால் கைக்கொள்ளப் பட்ட அந்தக் குறிப்பிட்ட மாநில அதிகாரங்களும் உரிமைகளும் மீண்டும் மாநிலங்களிடமே திரும்பி வந்துவிடும்.

அகில இந்திய ஒற்றுமை மாநில சுயாட்சியின் அடித்தளம்

மாநில சுயாட்சி என்பது மாநிலத்தின் தனியாட்சியுமல்ல; மாநிலத்தின் பிரிவினையுமல்ல. இந்திய அரசமைப்புச் சட்டத்திற்குட்பட்ட மாநிலங்களின் தன்னாட்சி; உண்மைக் கூட்டாட்சி. ஆக, மாநில சுயாட்சி என்றாலே 'மத்தியிலே உண்மைக் கூட்டாட்சி' என்பது தானாகவே பெறப்படும். மாநிலத் தன்னாட்சி உரிமையைக் கோருவது என்றால், அகில இந்திய மட்டத்தில்

தூய்மையான கூட்டாட்சிக் கொள்கையோடு இயங்கக்கூடிய 'தேசிய அரசை' (மத்திய அரசை)க் கோருவது என்றும் பொருள். கூட்டாட்சி நாட்டினுடைய சிதைவுரு ஒற்றுமைதான் நமது மாநில சுயாட்சிக் கொள்கையின்—கோரிக்கையின்—முழக்கத்தின்—அடிப்படை அம்சம்.

அரசமைப்புச் சட்டத்தின் வரையறைக்குட்பட்டு, இந்தியாவின் ஒற்றுமையை உள்ளடக்கிய உண்மையான ஒரு கூட்டாட்சி அமைப்பினுள், மத்தியத் தலையீடும் கட்டுப்பாடுகளும் இல்லாமல், இந்திய மாநிலங்கள் தன்னுட்சியுடன் இயங்குவதற்குத் தேவையான உரிமைகளையும், அதிகாரங்களையும் பெறுவதற்காக வகுத்துக் கொண்ட கொள்கையே, மாநில சுயாட்சிக் கொள்கை.

மாநில சுயாட்சியின் உயிர்க்கூறுகள்

1. மாநிலங்கள் தன்னுட்சி உரிமைகளையும் அதிகாரங்களையும் பெற வேண்டும். 2. அந்த அதிகாரங்களும் உரிமைகளும், மாநிலங்கள் தன்னுட்சியுடன் இயங்குவதற்குத் தேவையான அளவினதாக இருக்க வேண்டும். 3. அந்த உரிமைகளிலும் அதிகாரங்களிலும், மத்தியத் தலையீடும் கட்டுப்பாடுகளும் (அதாவது மத்திய அரசினுடைய தலையீடோ அல்லது மத்திய அரசைச் சார்ந்த வேறு நிறுவனங்களின் குறுக்கீடுகளோ அல்லது இன்னபிற அமைப்புக்களின் தலையீடுகளோ) இருத்தல் கூடாது. 4. தன்னுட்சியுடன் இயங்கும் மாநிலங்கள், உண்மையான ஒரு கூட்டாட்சி அமைப்பினுள் இருக்கும். 5. அந்த உண்மையான கூட்டாட்சி அமைப்பு, இந்தியாவின் ஒற்றுமையை உள்ளடக்கிக் கொண்டிருக்கும். 6. தன்னுட்சியுடன் இயங்கும் மாநிலங்கள் அரசமைப்புச் சட்டத்தின் வரையறைக்குட்பட்டதாக இருக்கும். இதுதான் உண்மைக் கூட்டாட்சிக் கொள்கை ஆகும். முழுமையான மாநில சுயாட்சிக் கோட்பாடும் இதுதான்.

மாநிலத்தில் சுயாட்சி—மத்தியிலே கூட்டாட்சி

இன்றைய நமது அரசமைப்புச் சட்டம், உண்மையான கூட்டாட்சி அரசமைப்பைக் கொண்டிருக்கவில்லை. அரசமைப்பு வல்லுநர் திரு. K. C. வியர் அவர்கள் இந்தியக் கூட்டாட்சி முறையை ஓர் 'அரைகுறைக் கூட்டாட்சி' (Quasi Federation) என்றே குறிப்பிடுகிறார். அதனை 'ஒற்றையாட்சித் தன்மைகளை அதிகமாகக் கொண்ட கூட்டாட்சி' (Federal with unitary Bias) என்றே, துறைபோகிய பல அரசமைப்பு வல்லுநர்களும், தர்க்கரீதியான ஆதாரங்களைக் காட்டி மெய்ப்பிக்கின்றனர். அதாவது, இந்தியா உண்மையான ஒரு கூட்டாட்சி யல்ல; கூட்டாட்சியின் நிழல் போன்றது என விளிக்கின்றனர்.

அதுமட்டுமின்றி, இந்திய அரசு சென்ற 25 ஆண்டுகளில் நமது அரசமைப்புச் சட்டத்தை அமுல்படுத்தியபோது, முற்றமுழுக்க ஓர் ஒற்றையாட்சி அரசாகவே செயல்பட்டு வருகிறதென்பதை யாரும் மறுக்க முடியாது.

III

வறுமையில் உழலும் அடிமை மாநிலங்கள்

நாட்டு மக்களின் பாதுகாப்பும் நல்வாழ்வுமே ஓர் அரசின் நோக்கங்கள். நம் அரசமைப்புச் சட்டத்தில் மக்கள் நல்வாழ்வுப் பணிகளனைத்தும் நேரிடையாக மாநில அரசுகளிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளன. அவற்றைத் திறம்படச் செய்து முடிப்பதற்குத் தேவையான நிதி வசதிகளை மாநிலங்கள் பெற்றிருக்க வேண்டாமா?

நிதியின்றி அரசில்லை. அவ்வகை நிதி வசதிகளைப் பெறுவது எப்படி? மாநில மக்கள் மீது நியாயமான வரிகளை விதித்து முறையாக வசூலித்துத்தான் மாநில அரசு நிதியைப் பெறமுடியும். தொழில் மற்றும் வணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டுக்கூட நிதிவசதிகளைப் பெருக்கிக் கொள்ளலாம். ஓர் அரசு நிதி பெறும் வழிவகைகள் ''**நிதி மூலங்கள்**'' (Financial Resources) எனப்படும். மாநில அரசுக்குரிய நிதி பெறும் வழிவகைகளை ''**மாநில அரசின் நிதி மூலங்கள்**'' எனவும், மத்திய அரசுக்குரிய நிதி வசதிகளை ''**மத்திய அரசின் நிதி மூலங்கள்**'' எனவும் அழைக்கிறோம்.

ஓர் கூட்டாட்சி நாட்டில் மாநில அரசுகள் தத்தம் நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்கும், அவற்றின் செலவினங்களை ஈடுகட்டிக் கொள்வதற்கும் உரிய முழுச் சுதந்தரத்தையும் உரிமையையும் பெற்றிருத்தல் வேண்டும். அரசமைப்புச் சட்டத்தால் (Constitution) மாநில நிதி அதிகாரங்களும் பரவலாக்கப் பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுகள் செம்மையாகச் செயல்படுவதற்கு நிதி வசதிகள் உயிர் மூச்சுப் போன்று அமைவதால், நிதித் துறையில் அவை சுயமாகவும், உரிமையுடனும் இயங்கும் தன்மையைப் பெற்றிருக்காவிடில் மாநிலங்களின் அரசியல் சுதந்திரமும் நிர்வாக உரிமைகளும் பொருளாதார அதிகாரங்களும் தாமாகவே சுருங்கி நாளடைவில் மறைந்தும் போகும்.

நிதித்துறையில் மாநில அரசுகளும் மத்திய அரசும் சுதந்திரமாகச் செயலாற்றும் வகையில் அதனதன் நிதி வாயில்களை அமைத்துக் கொள்வதற்கு இரு வழிவகைகள் உள்ளன.

1. **வரிகளை விதிக்கும் அதிகாரத்தையும் (Tax Levy) வரிகளை வசூல் செய்யும் அதிகாரத்தையும் (Tax Collection) மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் உரிய பொதுவான அதிகாரங்களாகச் செய்து விடுதல். இதன் மூலம் மாநில அரசுகளும், மத்திய அரசும் அதனதன் தேவைகளுக்கேற்றபடி மக்கள் மீது, தனித்தனியாக வரிகளை விதித்து வசூல் செய்து கொள்ளும்.**

2. வரியினங்கள் அனைத்தையும் ஒரு சேரத் தொகுத்து, மாநிலங்களுக்குரிய வரியினங்கள் இவையிவை — மத்திய அரசுக்குரிய வரியினங்கள் இவையிவை — எனத் தெளிவாகப் பகுத்து ஒதுக்கி விடுதல் இன்னொரு முறை. இதன்படி அரசியலமைப்பால் மாநில அரசுகளுக்காகத் தனித்து ஒதுக்கப்பட்ட வரியினங்களில் மட்டும் மாநில அரசுகள் வரிகளை விதித்து வசூல் செய்து கொள்ளும்.

மேற்சொன்ன இருமுறைகளில் நமது இந்திய அரசமைப்புச் சட்டம் இரண்டாம் வகையையே பெரும்பாலும் ஏற்றுக்கொண்டுள்ளது; ஆனால் முழுமையாக அல்ல. விரிவடையாத தன்மையைக் (Inelastic) கொண்டதும், குறைந்த வருவாயைப் பெற்றுத்தரக் கூடியதுமான வரியினங்கள் மட்டுமே மாநிலங்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ளன. கொழுத்த வருவாயைத் தருவதும் மேலும் மேலும் விரிவடைந்து செல்லக்கூடிய (Elastic) வரியினங்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டுள்ளது. இந்திய நாட்டின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 3/5 பங்கு வருமானமளிக்கக் கூடிய வரியினங்களை யெல்லாம் டெல்லி அரசு கைப்பற்றிக் கொண்டு உள்ளது.

ஆனால் "வருமான வரி" மற்றும் "கலால் வரிகள்" போன்ற வரியினங்கள் மூலமாகக் கிடைக்கக் கூடிய மத்திய அரசின் வருவாயிலிருந்து அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் குறிப்பிட்ட சதவிகிதத் தொகையை மட்டும் மத்திய அரசு மாநிலங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கக் கூடிய முறையும் உதவி மானியங்களாகவும் (Grants in aid) விருப்ப மானியங்களாகவும் (Discretionary grants) கடன்களாகவும் (Loans) தரக்கூடிய வேறு தேவையற்ற ஏற்பாடுகளும் நமது அரசமைப்பில் இடம் பெற்றுள்ளன. இவை தவிர மாநிலங்களுக்குச் சேரும் சில வரியினங்களைக்கூட மத்திய அரசே விதித்து வசூலித்து மாநிலங்களுக்குத் திரும்ப அளிக்கும் வியத்தகு ஏற்பாடும் நம் அரசமைப்பில் உள்ள தனித்தன்மையாகும். மாதம்

தவறினாலும் மாநில முதல்வர்கள் மத்திய அரசிடமிருந்து பிச்சை கேட்பதற்காக டெல்லிக்குக் காவடி தூக்குவதற்கு இன்றைய அரசமைப்பின் 12-ஆம் பகுதியிலுள்ள நிதி பற்றிய மேற்சொன்ன விதிகளே முழுமுதற் காரணங்களாகும்.

மத்திய அரசின் நிதி மூலங்கள்

மத்திய அரசுக்கு வருவாய் கிடைக்கக்கூடிய வழி வகைகளைப் பொதுவாக ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1. மத்திய அரசு, தானே விதித்து, வசூலித்துத் தனக்கே வைத்துக் கொள்ளும் வரியினங்கள்.
2. மேல் வரிகள் (Sur-Charges).
3. வருமான வரியிலிருந்து மத்திய அரசு எடுத்துக் கொள்ளும் பங்குத் தொகை.
4. கலால் வரிகளிலிருந்து மாநிலங்களுக்கு அளித்த பங்கு போக மத்திய அரசு எடுத்துக் கொள்ளும் பங்குத் தொகை.
5. வரியினங்கள் நீங்கலாக இதர வருவாய்கள்.

மத்திய அரசின் நிதி மூலங்களை 16 (இ) பக்கத்தில் தரப்பட்டுள்ள பட்டியலில் தெளிவாகக் காணலாம்.

1. மத்திய அரசு தானே விதித்து வசூலிக்கும் வரியினங்கள் :—

அ) ஏற்றுமதித் தீர்வை உட்படச் சுங்கத் தீர்வைகள் ;
(Customs including the Export Duties)

ஆ) கார்ப்பொரேசன் வரி அல்லது கம்பெனி வரி;
(Corporation Tax)

இ) சொத்து வரி; (Estateduty)

அதாவது தனிமனிதர்கள் மற்றும் கம்பெனிகளின் சொத்துக்கள் அல்லது மூலதனங்கள் ஆகியவற்றின் மதிப்பின் மீதான வரி; இவற்றில் விவசாய நிலங்கள் சேரா.

2. மேல் வரிகள் (Sur-Charges):—

ஏற்கெனவே உள்ள ஒரு வரியின் மீது குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காகக் குறிப்பிட்ட சதவிகிதத்தைச்சேர்த்துவசூலிக்கப் படும் கட்டணத்திற்கு "மேல் வரி" எனப்படும்.

வாரிசு வரி, எஸ்டேட் வரி, இரயில், கப்பல் மற்றும் விமானம் மூலம் செல்லும் பயணிகள் அல்லது சரக்குகள் மீது விதிக்கப்படும் வரி(Terminal Taxes)பங்கு வாணிகங்களின் கொடுக்கல் வாங்கல் களில் பெறப்படும் வரி, பத்திரிக்கை வரி, பத்திரிக்கை நீங்கலாக மற்ற பண்டங்கள் விற்பனை மற்றும் கொள்முதல் மாநிலங் களிடையே நடைபெறும் போது விதிக்கப்படும் வரி; ஆகிய ஆறு வரியினங்கள் மாநில அரசுகளுக்குச் சேர்ந்தவை. ஆனால் இவற்றை மாநில அரசுகள் விதிக்க முடியாது. மத்திய அரசே விதித்து வசூலித்து மாநிலங்களுக்குத் தரும். மத்திய அரசு விரும்பினுல் மேற்சொன்ன வரிகளோடு சேர்த்து, குறிப்பிட்ட சதவிகித மேல்வரியையும் தானே விதித்து வசூலித்து வைத்துக் கொள்ளும்.

வருமான வரியுடன் (Income Tax) சேர்த்தும் மத்திய அரசு ''மேல் வரியை''விதித்து வசூலித்துக் கொள்ளும். கலால் வரிகள் மேலும் ''தனிக்கலால் வரிகள்'' (Special Excise Duties) என்ற பெயரில் மத்திய அரசு தனக்குச் சேர வேண்டிய வரிகளை விதித்து வசூலித்துக் கொள்ளும்.

3. **வருமான வரி** (Income Tax):—

விவசாய வருமானங்கள் நீங்கலாக ஒரு தனி நபர் பெறும் மற்ற வருமானங்கள் மேல் மத்திய அரசு விதித்து வசூல் செய்யக் கூடிய வரியைப்பொதுவாக''வருமான வரி''என அழைக்கிறோம். இதனை வசூல்செய்ய ஏற்படும் செலவு போக நிகரத் தொகையை மத்திய அரசும் மாநில அரசுகளும் பங்கிட்டு வைத்துக் கொள்ளும்.

மாநிலங்களுக்கு எவ்வளவு சதவிகிதத் தொகையை அளிப் பது? எவ்வகையில் தருவது? எந்தெந்த மாநிலங்களுக்குத் தருவது? என்பன போன்றவற்றின் அடிப்படைக் கொள்கைகளை ஐந்தாண்டுகளுக் கொருமுறை மத்திய அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ''நிதியாணைக்குழு'' (Finance Commission) பரிந்துரை செய்யும்.

4. **கலால் வரி** (Excise Duty):—

இதனை மத்திய அரசே விதித்து வசூலிக்கின்றது;விரும்பினுல் கலால் வரிகளின் தொகைகளை மத்திய அரசு, மாநில அரசு களுடன் சேர்ந்து பங்கிட்டுக் கொள்ளும்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்துப் பண்டங்களின் மீது (அபினி, சணல், போதை உண்டாக்கும் மருந்துச் சரக்குகள் நீங்கலாக) விதிக்கக் கூடிய கலால் வரிகளை மத்திய அரசு வசூல் செய்து கொள்கின்றது. அதன் நிகரத் தொகையை மாநில அரசுகளுடன் பங்கிட்டுக் கொள்ளும் எந்தப் பொருளின் கலால்வரியை எப்படிப் பங்கிட்டுக் கொள்வது என்பதனையும் பங்கீட்டுக்குரிய கொள்கைகள் எவை என்பதனையும் அவ்வப்போது நாடாளு மன்றம் நிர்ணயம் செய்யும்; ஆனால் நடைமுறையில் அக்கொள்கைகளை வகுக்கும் பொறுப்பை மத்திய அரசு ''நிதியாணைக் குழுவுக்கே'' விட்டு விடுகின்றது. நிதி யாணைக்குழு செய்யும் பரிந்துரைகளை ஆய்ந்து பார்த்து நாடாளு மன்றம் இறுதி முடிவு எடுக்கும்.

5. மத்திய அரசின் இதர வருவாய்கள் :—

மேற்சொன்ன வரியினங்கள் தவிர மத்திய அரசுக்குப்பல்வேறு வகைகளிலும் வருவாய்கள் கிடைக்கின்றன. இருப்புப்பாதைகள், கப்பல்கள், இரயில் போக்குவரத்து, விமானங்கள், அஞ்சல் துறை, தொலைபேசி, கம்பியில்லாத் தந்தி, மத்திய அரசுக்கு உரிமையான பல சொத்துக்கள், மத்திய அரசு பெறும் பொதுக்கடன், நோட்டு அச்சடித்தல், நாணயம், வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாடு களிலிருந்து கிடைக்கும் உதவித் தொகைகள், மானியத் தொகை கள் கடன்கள், இந்திய ரிசர்வ் வங்கி, அஞ்சல் துறை சேமிப்பு வங்கி மத்திய அரசால் நடத்தப்படும் பரிசுச் சீட்டுகள், வெளிநாடு களுடன் வர்த்தகம் மற்றும்வாணிகம், மற்றும் மத்தியப்பட்டியலில் (Union List) சொல்லப்பட்டுள்ள பதிவுப் பொருள்களிலிருந்து கட்டணங்களாக வசூலிக்கப்படுபவை போன்ற துறைகளிலிருந் தும் மத்திய அரசுக்கு வருவாய் கிடைக்கின்றது.

மாநில அரசின் நிதி மூலங்கள்

மாநில அரசிற்கு வருவாய் கிடைக்கக் கூடிய வழிவகைகளைப் பொதுவாக ஆறு வகையாகப் பிரிக்கலாம்:—

1. மாநில அரசே விதித்து வசூலித்துத் தானே வைத்துக் கொள்ளக் கூடிய வரியினங்கள்.
2. மத்திய அரசே விதித்து வசூலித்து, மாநிலங்களுக்குத் தர வேண்டிய சில வரியினங்களின் தொகை.

3. மத்திய அரசால் விதித்து வசூலிக்கப்பட்ட வருமானவரியிலிருந்து மாநிலத்திற்குக் கிடைக்கக் கூடிய பங்குத்தொகை.
4. மத்திய அரசின் கலால்வரியிலிருந்து மாநிலங்களுக்குக் கிடைக்கக் கூடிய பங்குத் தொகை.
5. மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்களாகப் பெறக்கூடிய தொகை.
6. மத்திய அரசிடமிருந்து விருப்ப மானியங்களாகக் கிடைக்கக் கூடிய பங்குத் தொகை.

மாநில அரசின் நிதி மூலங்களை 16 (ஈ), 16 (உ) பக்கங்களில் தரப்பட்டுள்ள பட்டியலில் தெளிவாகக் காணலாம்.

1) மாநில அரசு விதித்து வசூலிக்கும் வரியினங்கள் :—

1. நிலவரி.
2. விவசாய வருமான வரி.
3. விவசாய நிலத்திற்கு வாரிசுரிமை பற்றியத் தீர்வைகள்.
4. விவசாய நிலம் பற்றிய எஸ்டேட் தீர்வைகள்.
5. கனிப்பொருள் அபிவிருத்தி பற்றிய நாடாளுமன்றச் சட்டத்திற்குட்பட்ட கனிப்பொருள் பற்றிய உரிமைகள் மீது விதிக்கும் வரிகள்.
6. மனிதர் உட்கொள்ளும் மது வகைகள், அபினி, இந்தியச் சணல், போதை உண்டாக்கத் தக்க இதர மருந்துச் சரக்குகள் ஆகியவற்றின் மீது விதிக்கக்கூடிய வரிகள் (போதைப் பொருள் அடங்கியுள்ள மருந்துப் பொருள்கள் வாசனைப் பொருட்கள், நீங்கலாக.)
7. வேற்று மாநிலத்திலிருந்து ஒரு மாநிலத்திற்குள் விற்பனை செய்வதற்காகக் கொண்டு வரும்போது, விதிக்கப்படும் வரிகள்.
8. மின்சாரம்.
9. செய்தித் தாள்கள் அல்லாத, மற்றையப் பண்டங்களை விற்கும் போதும் (மத்திய அரசின் பட்டியலுக்குட்பட்டு), விதிக்கப்படும் வரிகள்.
10. செய்தித் தாள்களில் வரும் விளம்பரங்களைத் தவிர, மற்ற வகை விளம்பரங்கள் மேல் விதிக்கப்படும் வரிகள்.

11. நிலப்பாதை அல்லது உள்நாட்டுப் பாதை மூலமாகக்கொண்டு செல்லப்படும் பண்டங்கள் மீதும் பிரயாணிகள் மீதும் விதிக்கப்படும் வரிகள்.
12. வாகன வரிகள்.
13. விலங்குகள் மீதும்,படகுகளின் மீதும்,விதிக்கப்படும் வரிகள்.
14. சுங்கங்கள்.
15- தொழில்கள், வியாபாரங்கள், அலுவல்கள், வேலைகள் ஆகியவற்றின் மீது விதிக்கக்கூடிய தொழில் வரிகள்.
16. தலைக்கட்டு வரிகள்.
17. சொகுசுப் பொருள்களின் மீது விதிக்கப்படும் வரிகள்,வேடிக்கைகள், கேளிக்கைகள், பந்தயம் ஓட்டுதல் மற்றும் சூதாட்டம் ஆகியவை மீது விதிக்கப்படும் வரிகள்.
18. மத்தியப் பட்டியலில் கூறப்படாத மற்ற ஆவணங்கள் பற்றிய பத்திர வில்லைகளின் மேல் விதிக்கப்படும் வரிகள்.

2) மத்திய அரசு விதித்து வசூலித்து மாநிலங்களுக்குத் தரும் மாநில வரியினங்கள் :—

1. விவசாய நிலமில்லாத மற்றைய சொத்துப் பற்றிய எஸ்டேட் தீர்வைகள்.
2. வாரிசு வரி (விவசாய நிலம் நீங்கலாக).
3. இரயில் அல்லது ஆகாய மார்க்கமாக ஏற்றிச் செல்லப்படும் பண்டங்கள் அல்லது பிரயாணிகள் மீது விதிக்கப்படும் முடிவிடத்து வரிகள்; மற்றும் இரயில் கட்டணங்கள் மீது போடப்படும் வரிகள்.
4. பங்கு வாணிகங்கள், கொடுக்கல் வாங்கல்கள் மீது விதிக்கப்படும் வரிகள் (ஸ்டாம்புத் தீர்வை நீங்கலாக).
5. பத்திரிக்கைகளின் விற்பனை, கொள்முதல், விளம்பரம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள்.
6. பத்திரிக்கைகள் நீங்கலாக, மற்ற பண்டங்கள் விற்பனை மற்றும் கொள்முதல் ஆகியவை மாநிலங்களிடையே வணிகமாக நடைபெறும்போது, விதிக்கக்கூடிய வரிகள்.

மேற்சொன்ன 6 வகை வரியினங்கள் மாநில அரசிற்குச் சேர்ந்தவை. ஆனால்,மத்திய அரசு அவைகளை விதித்து வசூலித்து அதற்கேற்படும் செலவுகள் போக மீதித் தொகையை அந்தந்த மாநில அரசுகளுக்குத் தந்துவிடும்.

உண்மையில் மாநிலங்களின் நிதி வாயில்களே, இந்த வகை வரிகள் பெருக்குகின்றன. ஆனால், இவை மத்திய அரசிற்குச் சேராத காரணத்தினால், இந்த வரிகளை மத்திய அரசு விதித்து வசூல் செய்வதற்கு எந்த விதமான ஆர்வத்தையும் இதுவரை காட்டவில்லை.

நியாயமாக, மாநில அரசுகளுக்குச் சேர வேண்டிய, இந்த வரியினங்களில் கிடைக்கும் தொகைகளே, மாநில அரசே விதித்து, வசூல் செய்யும் உரிமைகளும் மாநிலங்களுக்களிக்கப் படவில்லை. மத்திய அரசும் வசூலித்துக் கொடுப்பதில்லை. ஆகவே மேற் சொன்ன வரியினங்களில் பலவற்றில் கிடைக்கக் கூடிய வருவாய் களை மாநில அரசுகள் இழந்து நிற்கின்றன.

3) மத்திய அரசால் விதித்து வசூலிக்கப்பட்ட "வருமான வரியி லிருந்து" மாநிலத்திற்குக் கிடைக்கக்கூடிய பங்குத் தொகை :—

மத்திய அரசு விதித்து வசூல் செய்யும் வருமான வரியில் அதன் செலவு போக நிகரத் தொகையில் மாநிலங்களுக்குப் பங்களிக்கப்படுகிறது. முதலில் 50% பங்குத் தொகை எல்லா மாநிலங்களுக்கும் மொத்தமாக அளிக்கப்பட்டு வந்தது. முதல் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி 55% வீதமாகவும் இரண் டாம் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி 60% வீதமும், மூன்றும் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி 66⅔% வீதமும், நான்காம் ஐந்தாம் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி 75% வீதமும் ஆறும் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி 80%வீதமும் வருமான வரியின் பங்குத் தொகை மாநிலங்களுக்கு மத்திய அரசால் அளிக்கப்பட்டன. தற்போது மாநிலங்கள் 80% நிகர வருமான வரித் தொகையைப் பெற்றுக் கொண்டு வருகின்றன.

4) கலால் வரிகளிலிருந்து மாநிலங்களுக்குப் பங்குத் தொகை:—

1952–ஆம் ஆண்டு வரையில் மத்திய அரசால் வசூலிக்கப் பட்ட கலால் வரிகளிலிருந்து மாநில அரசுகளுக்குப் பங்கு கொடுக்கப்படவில்லை. புகையிலை, தீப்பெட்டி, தாவரப் பொருட் கள் ஆகியவைகளின் மீது வசூலிக்கப்பட்ட கலால் வரியிலிருந்து 40% தொகையை மத்திய அரசு மாநிலங்களுக்குத் தரவேண்டு மென முதல் நிதியாணைக்குழு பரிந்துரை செய்தது. இரண்டாம் நிதியாணைக்குழு மேற்சொன்னவைகளோடு சர்க்கரை, டீ, காபி,

மத்திய அரசின் நிதி வருவாய் மூலங்கள்

மத்திய அரசு விதித்து வசூலித்து, தானே வைத்துக் கொள்ளும் மத்திய வரிகள்.	மேல் வரிகள் (Surcharges)	வரி விதிப்பு நீங்கலாக வேறுவகையில் மத்திய அரசிற்குக் கிடைக்கும் வருமானங்கள்.	வருமான வரியில மாநிலங்களுக்குக் கொடுத்த பங்குத் தொகை போக, மத்திய அரசு பெறும் மீதிப் பங்குத் தொகை	கலால்வரிகளில் மாநிலங்களுக்குக் கிடைக்கும் பங்குத் தொகை போக மத்திய அரசு பெறும் பங்குத் தொகை	வெளி நாட்டு நிதி உதவி	வெளி நாட்டிலிருந்து பெறும் கடன்கள்	மக்களிடமிருந்து திரட்டும் பொதுக் கடன்கள்	மற்ற வகைகளில் பெறும் இதர நிதி வசதிகள்
1. சுங்கத் தீர்வைகள். (ஏற்றுமதி-இறக்குமதித் தீர்வைகள் உள்பட) (Customs Duties) 2. கார்ப்பொரேஷன் வரி (Corporation Tax) 3. சொத்து வரி (Estate Duty) **குறிப்பு** இந்தியாவின் மொத்த வரி வருமானத்தில் [மாநில வருவாய் உள்பட] 3/5 பங்கு வருவாய் இந்த மூன்று இன வரிகளில் மட்டும் கிடைக்கின்றன.	1. வாரிசு வரியின் மேல் விதித்துக் கிடைக்கும் வரியின் மேல், போடப்படும் **மேல் வரி.** 2 எஸ்டேட் வரியுடன் சேர்த்து வசூலிக்கப்படும் மேல் வரி. 3. பயணவரியின் மேல் போடப்படும் மேல் வரி. 4. ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு வரியுடன் கிடைக்கும மேல் வரி. 5 பத்திரிக்கை வரியுடன் விதிக்கப்படும் மேல் வரி. 6. மாநிலங்களிடையே நடைபெறும் வணிகங்களின் மேல் விதிக்கப்படும் மேல் வரி 7. வருமான வரியின் மேல் போடும் மேல் வரி. 8. தனிக் கலால் மேல் வரி.	1. ரயில். 2 விமானம் 3 அஞ்சல் துறை 4. தொலைபேசி. 5 வானொலி. 6. கம்பியில்லாத் தந்தி. (Wireless Telegraph) 7 மத்திய அரசின் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் பல வருவாய்கள். 8 வெளிநாட்டு செலவாணி. 9. **நோட்டச்சடித்தல்** 10. நாணயம். 11. இந்திய ரிசர்வு வங்கி. 12 பரிசுச்சீட்டு வருமானம் 13 கட்டணங்கள். 14. இன்சூரன்ஸ். இன்னும் பிற.	**குறிப்பு** தற்போது 20%					

மாநில அரசின் நிதி

I. மாநில அரசிற்கு உரிமையுள்ள நேரடியான நிதிபெறும் வழிகள்

(1) மாநிலே அரசே விதித்து வசூல் செய்து கொள்ளும் வரியினங்கள்

1. நில வரி
2. விவசாய வருமான வரி
3. விவசாய நில வாரிசுரிமைத் தீர்வை
4. விவசாய நில எஸ்டேட் வரி
5. நிலங்கள் கட்டிடங்கள் மீதான வரி.
6. கனிப் பொருள் உரிமை வரி.
7. மது வகைகள்
8. வேறு மாநிலத்திலிருந்து விற்பனைக்கு வரும் பொருள்மீது போடும் வரி.
9. மின்சாரம்
10. விற்பனை வரி
11. விளம்பர வரி (பத்திரிக்கை நீங்கலாக)
12. பாதைகள் மீது கொண்டு செல்லும் பண்டங்கள் மீது போடும் வரி
13. வாகன வரி
14. விலங்குகள் மீது வரி
15. சுங்கம்
16. தொழில் வரி
17. தலைக்கட்டு வரி
18. கேளிக்கை மற்றும் பந்தயம் ஓட்டுதல் மீதான வரி.
19. பத்திர வில்லை வரி [மத்தியப் பட்டியலின் ஆவணங்கள் சேராது]

(2) மத்திய அரசு விதித்து வசூல் செய்து மாநிலங்களுக்குத் தரும் வரி இனங்கள்.

1. விவசாய நிலமில்லாத மற்றைய சொத்துக்கள் பற்றிய எஸ்டேட் வரி
2. வாரிசு வரி (விவசாய நில மில்லாத)
3 ரயில், கப்பல், விமானம் மூலம் செல்கின்ற பண்டங்கள் மேல் விதிக்கப்படும் பயண முடிவிடத்து வரிகள். ரயில் கட்டணங்கள் மேல் போடப்படும் வரிகள்
4. ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு மீது போடும் வரிகள்
5. பத்திரிக்கைகள் வரி
6. மாநிலங்களிடையே வணிகம் நடைபெறும் போது பண்டங்களின் மேல் விதிக்கப்படும் விற்பனை வரி

(3)

மாநில அரசு நடத்தும் வர்த்தகம் வாணிகம் மற்றும் தொழில்கள் ஆகியவைகளிலிருந்து கிடைக்கும் வருவாய்

(4)

பொது மக்களிடமிருந்தும் மற்ற நிறுவனங்களிலிருந்தும் மாநில அரசு வாங்கும் கடன்கள்

குறிப்பு :

[மாநிலங்களுக்குச் சொந்தமான இந்த 6 வரிகளை மத்திய அரசு வசூலித்துத் தர வேண்டும். ஆனால் மத்திய அரசு இவைகளை விதித்து, வசூலித்து மாநிலங்களுக்குத் தரவில்லை. இவை—மாநிலங்கள் இழந்து நிற்கும் வரிகள்].

வருவாய் மூலங்கள்

II. மத்திய அரசிலிருந்து மாநிலத்திற்குக் கிடைக்கும் நிதி வசதிகள்

- [அ] நிதி ஆணைக் குழு மூலமாக மாநிலங்கள் பெறும் நிதி வசதி
  - (1) வருமானவரியிலிருந்து மாநிலங்கள் பெறுகின்ற பங்குத் தொகை (Income tax share)
  - (2) கலால் வரிகளிலிருந்து மாநிலங்கள் பெறும் பங்குத் தொகை (Share in Excise Duty
  - (3) உதவி மானியத் தொகைகள் (Statutory grants)
- [ஆ] திட்டக்குழு மூலமாக மாநில அரசுகள் பெறும நிதி வசதிகள்
  - (1) தனி மானியங்கள் (Special grants)
  - (2) விருப்ப மானியங்கள் (Discretionary grants) [5 ஆண்டுத் திட்டங்களுக்காகத் தரப்படும் மானியம்]
- (இ) மத்திய அரசிலிருந்து மாநிலங்கள் வாங்கும் கடன் தொகை [பல வகையானவை]

விபரங்கள்:

I. (1) (2) (3) மாநில அரசுக்கு நேரடியாகக் கிடைக்கும் நிதி வசதிகள்.

II. (அ) (1) (2) (3) (i) மத்திய அரசிலிருந்து—நிதி ஆணைக் குழு செய்யும் பரிந்துரைகள் மூலமாக—மாநிலங்கள் பெறும் நிதி உதவிகள்

(ii) இவை மத்திய அரசு தரும் மொத்த நிதி உதவிகளில் அரசியல் சட்டப்படி கிடைக்கக்கூடிய நிதி உதவிகளாகும்.

(iii) அஃதாவது மத்திய அரசு தருகின்ற மொத்த நிதி உதவிகளிலிருந்து 35% மட்டுமே இவைமூலம் மாநிலங்களுக்குக் கிடைக்கின்றன.

II (ஆ) (1) (2) சட்டப்படி உருவாகாத திட்டக் குழுவின் மூலமாக - திட்டக்குழு செய்யும் பரிந்துரைகள் மூலமாக—மாநிலங்கள் பெறும் நிதி உதவிகள்.

(i) இவை-அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக மத்திய அரசால் கொடுக்கப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான ஒரு பகுதி நிதி உதவிகளாகும்.

(ii) அஃதாவது மத்திய அரசு தனது விருப்பம்போல்—தான் விரும்பும் மாநிலங்களுக்கு-இவ்வகை நிதி உதவிகளை 5 ஆண்டுத் திட்டங்களுக்காகத் தருகின்றன.

(iii) மத்திய அரசால் தரப்படும் மொத்த நிதி உதவிகளிலிருந்து ஏறத்தாழ 65% இவை மூலம் மாநிலங்களுக்குக் கிடைக்கின்றன.

காகிதம், தாவர எண்ணெய் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் கலால் வரித் தொகைகளிலும் 25 /. தொகையைத் தர வேண்டுமெனப் பரிந்துரைத்தது. மூன்றும் நிதி ஆணைக்குழு, எல்லாப் பொருட்களின் கலால் வரிகளிலிருந்தும் (35 பொருள்கள்) மாநிலங்கள் 20·/. பங்கு பெற வழிவகை செய்தது நான்காம் நிதி ஆணைக்குழு, "இனிமேல் கலால் வரி விதிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பொருள்களிலிருந்து கிடைக்கும் கலால் வரியில் கூட" 20·/. பங்குத் தொகையை மத்திய அரசு மாநிலங்களுக்கு அளிக்க வேண்டுமென வற்புறுத்தியது.

ஆகவே, தற்போது மத்திய அரசு விதித்து வசூலிக்கக்கூடிய எல்லாப் பொருள்களின் நிகரக் கலால் வரித் தொகைகளினின்றும் மாநிலங்கள் 20 /. பங்குத் தொகை பெற்று வருகின்றன.

5. உதவி மானியங்கள் (Grants in aid):—

மாநிலங்களுக்குரிய 19 வகை வரியினங்களில் கிடைக்கும் தொகையும் வருமான வரி மற்றும் கலால் வரிகளிலிருந்துகிடைக்கும் பங்குத் தொகையும் சேர்ந்தால் கூட மாநிலங்களுக்கு "நிதிப் பற்றுக்குறை" இருந்து வரும் என்பதை நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் அன்றே உணர்ந்திருந்தனர். எனவே, நிதித்துறையில் மாநில அரசுகளின் பற்றுக் குறையைச் சரி செய்வதற்காகக் குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு "உதவி மானியங்களைத்" தர வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்து வைத்தனர்.

வருமான வரி மற்றும் கலால் வரிகளின் பங்குத் தொகைகள் மாநில நிதி வசதிகளை ஓரளவு மட்டுமே பெருக்குகின்றன. நிதியாணைக் குழுக்களால் பரிந்துரை செய்யப்படும் "உதவி மானியங்களை" மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்குகின்றது.

ஆனால், நிதியாணைக் குழுக்கள் செய்யும் பரிந்துரைகளையெல்லாம் மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. அகில இந்தியா முழுவதும் "ஒரே சீரான"

(Uniform) முன்னேற்றம் இருக்க வேண்டுமென்றும், மக்களுக்காற்றப்படும் சமூகப் பணிகள் எல்லா மாநிலங்களிலும் ஒரே அளவுள்ளதாக இருக்க வேண்டுமெனவும் கூறிக் கொண்டு மத்திய அரசு, தான் விரும்பும்போது தான் விரும்பும் மாநிலங்களுக்கு "உதவி மானியம்" என்ற பெயரால் பெருந்தொகைகளை வழங்கி வருகின்றது. "சீரான முன்னேற்றம்", "அனைத்து மாநிலங்களிலும் ஒரே அளவுள்ள சமூகப் பணிகள்" ஆகிய அடிப்படைக் கொள்கைகளைக் காட்டிலும் மத்திய அரசினை ஆளுங்கட்சி சார்ந்த "அரசியலே" உதவி மானியங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது எனக்கூறின் அது மிகையாகாது. ஆக, மாநில அரசுகள் என்றென்றும் மத்திய அரசையே அண்டிப் பிழைக்கக் கூடிய பரிதாப நிலைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளன.

6. விருப்ப மானியங்கள் (Discretionary grants):—

எந்தக் கொள்கையின் அடிப்படையில் மானியத் தொகைகளை மத்திய அரசு மாநிலங்களுக்குத் தர வேண்டுமென அரசமைப்புச் சட்டம் வழிவகை செய்ததோ அந்தக் கொள்கைகள் யாவும் — "விருப்ப மானியங்கள்" என்ற பெயரால் மத்திய அரசு, தான் விரும்பும் மாநிலங்களுக்கு விரும்புமளவுக்குத் தொகைகளை ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாக அளிப்பதன் மூலம் — காற்றிலே பறக்கவிடப்பட்டு விட்டன.

இந்நூலின் 12-ஆம் அத்தியாயத்தில் விருப்ப மானியங்கள் பற்றி விரிவாகத் தரப்பட்டுள்ளது.

நிதிச் சுதந்திரமா? தர்மக் கட்டளையா?

இன்றைய அரசமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள மத்திய — மாநில நிதியுறவுகளை மேலோட்டமாகப் பார்க்கும் போது மாநில அரசுகளுக்குப் பற்றுக்குறை ஏற்படுவதற்கு எவ்வகை நியாயமும் இல்லையே எனத் தோன்றும். ஆனால், இந்திய நாட்டிலுள்ள அத்தனை மாநிலங்களும் சேர்த்துப் பெறக்கூடிய மொத்த வரித்

தொகையோடு மத்திய அரசுக்களிக்கப்பட்ட கார்ப்பொரேசன் வரி, சுங்கத் தீர்வை வரி, சொத்து வரி ஆகிய மூன்றே மூன்று வரியினங்களில் மட்டும் பெறக் கூடிய தொகையை ஒப்பிட்டுப் பார்க்கின், மாநிலங்களின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 3/5 பங்குத்தொகையை மத்திய அரசு பெற்றுக் கொள்ளும் பேருண்மை புலப்படும்.

இந்தியாவிலுள்ள வணிகக் கழகங்கள், தொழில் கம்பெனிகள் ஆகியவைகளின் வருமானத்தின் மேல் விதிக்கப்படும் வரியே "கார்ப்பொரேசன் வரி" அல்லது "கம்பெனி வரி" என அழைக்கப்படுகிறது.

அதே போல் இந்திய நாட்டில் வசிக்கும் ஒரு மனிதன் இறந்து போனால், அவனுடைய சொத்துக்களின் மேல் விதிக்கப் படும் வரி "சொத்து வரி" எனப்படுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எல்லாத் துறைமுகங் களின் மூலமாக ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் அத்துணைப் பொருட்களின் மேல் விதிக்கப்படும் வரிக்குப் பெயர்தான் சுங்கத் தீர்வை எனப்படும்.

எனவே, எல்லாத் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் கிடைக்கும் இலாபத்தின் மேல் வரி மூலமாகப் பெறப்படும் வருவாயும் பொது மக்களின் சொத்துக்கள் மேல் கிடைக்கும் வருவாயும் இந்தியா வின் அத்துணை இறக்குமதி, ஏற்றுமதிப் பண்டங்களின் மூலம் தீர்வையாகப் பெறப்படும் வருவாயும் மத்திய அரசிற்கே சென்று விடுகின்றன.

இதனைச் சற்று ஆழமாகப் பார்த்தால், அந்தந்த மாநிலங் களிலுள்ள கம்பெனிகளும் துறைமுகங்களும் தனி மனிதர்களின் சொத்துக்களும், மாநில எல்லைகளுக்குள்ளேயே இயங்கி வருவ தால் அவைகளிலிருந்து கிடைக்கும் வரி வருவாய்களும் நியாய மாக மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டாமா? என்ற பேருண்மை புலப்படும்.

இவை மட்டுமல்ல, ஒரு நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் அந்நாட்டின் கம்பெனிகளும் ஏற்றுமதி, இறக்குமதிப் பண்டங்களும் தனி மனிதர் சொத்தும் வருவாய்களும், நாளும் பெருகி விரிவடைந்து கொண்டே வரும். அப்போது அவைகளில் கிடைக்கும் மொத்த வரித்தொகையும் வரிச் சதவிகிதமும் தானாகவே பெருகி விடும்.

ஆகவே, இம்மூன்று வரிகள், மிக அதிகமான தொகைகளை மத்திய அரசிற்குப் பெற்றுக் கொடுப்பதோடல்லாமல், வளர்ந்து வரும் பொருளாதாரத்தை அனுசரித்து வரி விதிப்பில் விரிவையும் வரியீட்டத்தில் நாளுக்கு நாள் பெருக்கத்தையும் தருகின்றன.

இவை போக வெளி நாடுகளிலிருந்து கிடைக்கும் உதவித் தொகைகளையும் கடன் தொகைகளையும் மத்திய அரசே பெற்றுக் கொள்கிறது. வானொலி, தந்தி, அஞ்சல், இரயில் போக்குவரத்து, ஆயுட்காப்பீட்டுக் கழகம், வங்கிகள் போன்ற பல அகில இந்திய வணிகங்களிலும் மிகப் பெருந் தொகைகளை மத்திய அரசே ஈட்டிக் கொள்கிறது.

மாநிலங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பெரும் தொகையீட்டும் இவ்வரிகளை மத்திய அரசு பெற்றுக் கொண்டு, மாநில அரசுகளுக்கு நிரந்தரமான நிதிப் பற்றுக்குறையை உண்டாக்கி விடுகின்றது. பின்னர், மாநிலங்களின் நிதிப் பற்றுக் குறையைத் தீர்ப்பதைப்போல், "உதவி மானியங்கள்" என்ற பெயரில் தன் விருப்பம் போல் மாநிலங்களுக்குத் தொகைகளை வழங்குகின்றது. மாநிலங்கள் கெஞ்சிக் கூத்தாடி அவைகளைப் பெற வேண்டும்.

இது ஏதோ தர்மக் கட்டளையைப் போல் தெரிகிறதேயல்லாமல், மாநிலங்கள் நிதித்துறையில் சுதந்திரமாக இயங்கக் கூடிய வழிவகைகளாகத் தென்படவில்லை யல்லவா?

16 (ஒ)

மத்திய வரிகள் சிலவற்றின் பங்குத் தொகை, மானியங்கள், விருப்ப மானியங்கள், கடன்கள் என்ற பெயரால் மத்திய அரசு போடும் பிச்சைக் காசுகளை மாநிலங்கள் போராடிப் பெற்று, அதனையே நம்பித் தமது அரசுப் பணிகளை நிறைவேற்றக் கூடிய கேடுகெட்ட நிலையிலிருந்து மாறி, மாநில அரசுகள் நிதித்துறையில் தனித்து இயங்குவதற்குத் தேவையான சுதந்திரமான நிதி மூலங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைத் தற்போது, எல்லா மாநிலங்களுமே உணர்ந்து கொண்டன. அவை வாய்ப்பேற்படும் போது மத்திய அரசை வலியுறுத்தியும் வருகின்றன. மத்திய - மாநில உறவுகளைப் பற்றி ஆய்வு செய்த பல சட்ட வல்லுனர்கள், மத்திய-மாநில நிதியுறவுகள் முற்றிலும் விரைந்து மாற்றியமைக்கப் படவேண்டும் என ஒருமுகமாய் வலியுறுத்துகின்றனர்.

2. திட்டக்குழுவிற்குச் சட்ட மூலமில்லை

" பொருளாதார வளர்ச்சிக் காரியங்களுக்கான "திட்டமிடுதல்" (Planning), மாநிலங்களைப் பொறுத்த மட்டிலும் கூட்டாட்சி அரசியலமைப்பைக்கூட நடைமுறையில் மீறிவிட்டது. திட்டமிடுதலின் இந்த அத்து மீறிய செயல், சட்டப்படியோ அல்லது அரசியல் அமைப்பு விதிகளின் படியோ நடைபெற்று விட்டதல்ல. மாருக மாநிலங்களின் ஒப்புதலினுலும் இணக்கத்தினுலுமே ஏற்பட்டதாகும். திட்டமிடுதல் என்பது பரந்து விரிந்த ஒன்று. அது மத்திய-மாநில அரசுகளுடைய சகல நடவடிக்கைகளையும் தன்னகத்தே ஆட்கொண்டு விட்டது. கலை, இலக்கியம் மற்றும் பந்தய விளையாட்டுக்களைக் கூட அது விட்டு வைக்கவில்லை . ... எனவே, திட்டமிடுதலை ஒரு வகையில் " சர்வாதிகாரத் தன்மையைக் கொண்டது " என்று கூட நாம் குறிப்பிடலாம். ஆனுல் " சர்வாதிகாரத் தன்மை" என்ற சொல் கொடுமையுடன் தொடர்புடையதால் 'திட்டமிடுதல்' என்பதை " விரிவானதொன்று " (Comprehensive) என்று மட்டும் நாம் கூறித் திருப்தி கொள்வோமாக. "[5]

— கே. சந்தானம்.

பண்டித நேரு அவர்களால் தரப்பட்ட அரிய திட்டங்களில் ஒன்ருன "சமுதாய, பொருளாதாரத் திட்டமிடுதல்" (Social and Economic Planning) மாநிலங்களின் கட்டுப்படுத்தப்பட்ட, குறுகிய சுயாட்சிக்குள் ஊடுருவிச் சென்று, கடந்த 25 ஆண்டுகளில் மத்திய அரசை மிகப் பெரிய ஒரு வல்லரக்கனைப் போல் மாற்றியமைத்து விட்டது. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் கூடத் திட்டமிடுதலின் மூலமாக மத்திய அரசு இத்துணைச் சர்வாதிகாரத் தன்மையை எதிர்காலத்தில் பெற்றுவிடும் என்பதை அன்றைய நாளில் எதிர்பார்க்கவில்லை.

---

5 Union State Relations in India [1963] Pages. 47-48

அரைக் குறைக் கூட்டாட்சி அமைப்பைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டம் " திட்டமிடுதல் " மூலமாக ஒரு முதன்மை யான ஒற்றை ஆட்சி நாடாகத் தற்போது மிளிர்ந்து நிற்கிறது. அதன் வழி " மாநில சுயாட்சியும் " வெறும் கானல் நீராக ஆகி விட்டது. அதனைப் பற்றி இங்கு விரிவாகப் பரிசீலிப்போம்.

அரசமைப்புச் சபையில் நடந்த விவாதங்களை நாம் ஊன்றிப் பார்த்தால், " திட்டமிடுதல் " பற்றிய கொள்கை விளக்கங்களும் விவாதங்களும் அங்கு அதிகமாக நடந்திருப்ப தாகத் தெரியவில்லை. அரசியல் மற்றும் நிதி அதிகாரங்களின் சின்னஞ்சிறு கூறுகள் பற்றிக்கூட, நமது அரசமைப்புச் சட்டத் தில் விரிவான சட்டவிதிகள் செய்யப்பட்டிருப்பதை நாம் காணலாம். ஆனால் திட்டமிடுதல் பற்றித் தனிச் சட்டவிதிகள் எதுவும் அதில் செய்யப்பட வில்லை.

அரசமைப்பின் நான்காம் பகுதியில் "அரசினுடைய நெறி முறைக் கொள்கைகள் " (Directive Principles of State Policy) என்ற தலைப்பின் கீழ் வரும் பல சட்டவிதிகள் மத்திய - மாநில அரசுகள் எவ்வகையில் இந்திய மக்களின் பொருளாதார, சமுதாய முன்னேற்றங்களைப் பெருக்க வேண்டும் என்பது பற்றிப் பேசுகின்றன. அதிலும் கூட, " திட்டமிடுதல் " என்ற சொல்லும் " சமுதாயப் பொருளாதாரத் திட்டமிடுதல் "(Social and Economic Planning) பற்றிய விளக்கங்களும் முழுமையாகத் தரப்பட வில்லை.

ஆனால் VII-ஆம் இணைப்பில் (VII - Schedule) கொடுக்கப் பட்டுள்ள மத்திய - மாநிலப் பொதுப் பட்டியலில் (Concurrent list) 20-ஆம் பதிவில் மட்டும் "பொருளாதாரச் சமூகத் திட்டங்கள் அமைத்தல் " எனக் கண்டுள்ளது. இந்தப் பதிவு, பொதுப் பட்டியலில் வருவதால் மத்திய அரசும் மாநில அரசுகளும் "திட்டமிடுதலைச் செய்வதற்குரிய சட்டங்களைச் செய்யும் அதிகாரத்தைப் பெறுகின்றன. எனவே, "திட்டமிடுதலை"ச் செய்வதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட மத்திய-மாநில அரசுகள் முறையே நாடாளு மன்றத்திலோ அல்லது மாநிலச் சட்ட மன்றத்திலோ அதற்குரிய தெளிவானதொரு சட்டத்தை நிறை வேற்ற வேண்டும். அதன் பின்னரே " திட்டமிடுதலை " செயல் படுத்தவேண்டும் என்பது தெளிவாகிறதல்லவா ?

திட்டமிடுதலுக்காக, முதலில் சட்டமியற்றப்பட வேண்டு மெனக் கூறும்போதே, ''திட்டமிடுதல்'' என்ற அரசுக் கொள் கை எப்படி, யாரால், எந்த வித அமைப்பின் மூலமாக, எந் தெந்த முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்ற சட்ட விதிகளை யெல்லாம் அச் சட்டத்தில் அரசமைப்புச் சட்டத்திற் குட்பட்ட முறையில் தொகுக்க வேண்டும் என்பதும் பெறப் படுகிறது. சான்ருக நமது மத்திய அரசு திட்டமிடுதலை அமைத்து நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் நாடாளு மன்றத்தின் மூலமாக அதற்குரிய சட்டத்தை முதலில் நிறை வேற்ற வேண்டும். அச் சட்டத்தில் பொருளாதாரத் திட்டங் களைத் தீட்டக்கூடிய ஒரு குழு (Commission), அதற்குரிய அதி காரங்கள், அதற்கும் மாநில அரசுகளுக்கு முள்ள தொடர்பு, மற்ற அதிகாரிகளுக்கும்-அரசமைப்பு நிர்வாகிகளுக்கும்-அந்தத் திட்டக் குழுவிற்குமுள்ள தொடர்பு போன்ற பல செயல்முறைக் கூறுகள் ஆகியவை அச்சட்டத்தில் இடம் பெற வேண்டும். ஒருக்கால் அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகள், அரசமைப்புச்சட்டவிதிகளுக்கு முரணனவையாக இருந்தாலோ அல்லது அரசமைப்பில் தரப்பட்டுள்ள மாநில அதிகாரங்களைப் பாதிப்பதாக இருந்தாலோ அச் சட்டத்தை எதிர்த்து அதற் குரிய பரிகாரங்களை அரசியல் சட்ட ரீதியாக மாநிலங்கள் தேடிக் கொள்ள முடியும்.

நமது நாட்டில் சென்ற 24 ஆண்டுகளில் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறி முடிந்து விட்டன. அவைகளை உரு வாக்கிச் செயல்படுத்தும் "திட்டக் குழுவும்" (Planning Commission) பல்லாண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனல் அத்திட்டக் குழுவிற்குரிய சட்ட முகாந்தரம் எதுவும் இதுவரை மத்திய அரசால் செய்யப்படவில்லை. ஐந்து ஆண்டு களுக்கொருமுறை உருவாகும் நிதி ஆணைக்குழு (Finance Commission) கூட அரசமைப்புச் சட்டத்தின் 280-ஆம் சட்ட விதியால் நியமனம் செய்யப்படுகிறது. ஆனல் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கும் ''மத்தியத் திட்டக் குழு'' (Planning Commission) ஏற்படுத்தப்பட்டதற்கும் நடைமுறையில் இயங் குவதற்கும் நமது அரசமைப்புச் சட்டம் ஆதாரமாய் அமைவ தில்லை; வேறு எந்த ஒரு தனி நாடாளு மன்றச் சட்டமும் அதற்குரிய சட்ட அனுமதியை வழங்கவுமில்லை.

மத்திய அரசையும் மாநில அரசுகளையும் இந்தியப் பொருளா தாரத்தையும் மத்திய-மாநில நிர்வாக நிதி உறவுகளையும் மாநில சுயாட்சியினையும், தன்னிச்சைபோல ஆட்டிப்படைக்கும் திட்டக்

குழுவை 1950-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பதினைந்தாம் நாளில் மத்திய அமைச்சரவை ஒரு சாதாரணத் தீர்மானத்தை மட்டும் (தீர்மான எண். 1. P (c) 1950) நிறைவேற்றி உருவாக்கி வைத்துள்ளது. எனவே, திட்டக்குழுவே சட்டத்திற்குப் புறம்பான தோர் அமைப்புத்தான்,

"திட்டக்குழு சட்டப்படி உருவாக்கப்பட வில்லை. எனவே அதனுடைய முடிவுகளுக்கு நான் கட்டுப்பட வேண்டிய அவசி மில்லை" என்று ஒருக்கால் எந்த மாநிலமாவது வாதிட்டதெனில் அரசியலமைப்புச் சட்டப்படி அது சரியான-முறையான-வாத மாகும். தவிர, திட்டக்குழுவின் முடிவுகளுக்கேற்றபடி, மாநில அரசுகள் நடக்க வேண்டுமென மத்திய அரசு சட்டப்படி கட்டாயப் படுத்தவும் முடியாது. ஆனால், அவ்வகை விவா தத்தை எந்த மாநில அரசும் கிளப்புவதற்குத் தயாராயில்லை. ஏன்?

கேரளா நீங்கலாக மற்ற எல்லா இந்திய மாநிலங்களிலும் ஏறத்தாழ 1967-ஆம் ஆண்டுவரை, காங்கிரஸ் கட்சியே அரசோச்சிற்று. அவ்வப்போது சில மாநிலங்களில் மட்டும் குடியரசுத் தலைவரின் ஆட்சியும் நடைபெற்றது. அதாவது மத்திய அரசின் ஆட்சியும் நடைபெற்றது. மத்திய - மாநில அரசமைப்புச் சட்டவிதிகளை அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி ஒரு பக்கம் தனியாக ஒதுக்கி வைத்துவிட்டு, தனது காரியக் கமிட்டி (Working Committee) என்ற கட்சி அமைப்பின் மூல மாகக் கொள்கை வகுத்து இந்தியாவைத் தன்னிச்சைப்படி ஆண்டு வந்தது. எனவே, திட்டக்குழுவிற்குச் சட்டமூலமில்லாத தால், அது மாநில அதிகாரங்களையும் உரிமைகளையும் ஊடுருவி விட்டதென உரிமைக்குரல் கொடுப்பதற்கு எந்த மாநிலக் காங்கிரஸ் அரசுக்கும் நாதியில்லாமல் போய்விட்டது.

"காங்கிரஸ் மேலிடம்" செய்யும் முடிவை—அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டதானாலும் சரி, அல்லது மீறியதானாலும் சரி—மாநிலக் காங்கிரஸ் கமிட்டிகள் அப்படியே ஏற்றுக் கொண் டன. மாநிலக்காங்கிரஸ் கமிட்டிகள் ஏற்றுக் கொண்ட அம்முடிவு களை—அவை மாநில உரிமைகளை ஊடுருவினாலும் சரி, அல்லது மாநில சுயாட்சியையே அழித்தாலும் சரி, அதைப் பற்றிக் கிஞ் சித்தும் கவலைப்படாமல்—மாநில அரசுகள் அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்பட்டன. அஃதாவது அன்றைய மாநிலக் காங்கிரஸ் அரசுகள், மத்தியக் காங்கிரசிற்கும் அதன் மூலமாய்

மத்திய அரசிற்கும் கீழ்ப்படிந்து நடக்கும் உண்மையான ஊழியர்களாக, மத்திய அரசின் கட்டளைகளை நிறைவேற்றி வந்தன. எனவே, "திட்டமிடுதல்" பற்றி மத்திய அரசைச் சாடுவதற்கு எந்த மாநிலக் காங்கிரஸ் அரசும் தயாராயிருக்க வில்லை.

திட்டக் குழுவின் முடிவுகளையும் திட்டங்களையும் மாநில அரசுகள் தாமாகவே ஏற்றுக் கொள்வதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது திட்டத்திற்கு நிதியளித்தல்; திட்டங்களுக்காக மத்திய அரசு அளிக்கக்கூடிய பிருமாண்டமான நிதி உதவிகளை எந்த மாநிலமும் புறக்கணிக்கத் தயாராயில்லை.

ஆகவே, இவ்வகையில் "அரசியல்" மற்றும் "நிதி"க் காரணங்களால் மாநிலங்கள் திட்டக்குழுவின் கட்டுக்குள் வந்து, தாமாகவே சிக்கிக் கொள்ளும் என்று தேசியத் தலைவர்கள் கருதினார்கள். அதன்படியே மாநிலங்களும் மத்திய அரசு விரித்த பட்டு வலைக்குள் தாமாகவே வீழ்ந்து விட்டன. "திட்டக் குழு" பற்றிய சட்டப் பிரச்சினையும் எழவில்லை; திட்டக்குழுவும் சட்ட அனுமதியின்றியே இன்னும் இயங்கி வருகிறது. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையில் அரசமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட அதிகார எல்லைக் கோடு மெல்ல மெல்ல மங்கி, 'திட்டமிடுதல்' காரணமாக இப்போது முழுமையாக மறைந்தும் போயிற்று. மாநிலங்களே அவற்றின் சுயாட்சி உரிமைகளை மத்திய அரசிற்கு அடகு வைத்து விட்டன. அதற்குக் காங்கிரஸ் கட்சியே முழுப் பொறுப்பாகும்.

பண்டித நேரு அவர்கள், திட்டக் குழுவைப் பற்றிக் குறிப்பிடும் போது,

> "நாம் ஒரு கூட்டாட்சி அமைப்பைச் சார்ந்தவர்கள்; திட்டக் குழு, பல மாநிலங்களை ஒருங்கிணைத்துத் திட்டம் போடுவதன் மூலமாக அவைகளை வளர்ச்சியடையச் செய்துள்ளது. அந்தத் திட்டக் குழு இல்லாவிட்டால் இக்காரியங்களை மத்திய அரசு செய்திருக்க முடியாது. ஏனெனில் மத்திய அரசு மாநில உரிமைகளில் அத்துமீறிப் பிரவேசிக்கின்றது என்ற சிக்கல்கள் உடனே எழுந்திருக்கும்." 4

என விளக்குகிறார்.

---

4 Loksabha Debates, 3rd Series, Vol. XXIII, No. 18, 11-12-1963, Coln. 4208

பண்டித நேரு அவர்களின் இந்தக் கூற்றிலிருந்தே, திட்டக் குழு சட்டப்படி ஏன் அமைக்கப்பட வில்லை என்பதற்குரிய காரணம் தெளிவாக விளங்கும். சட்டப்படித் திட்டக் குழுவை அமைத்திருந்தால், மாநில அரசுகளின் உரிமைகளை மத்திய அரசு மறைமுகமாகப் பறித்திருக்க முடியாது.

எனவே மாநில அதிகாரங்களை மத்திய அரசு மறைமுகமாகக் கைக் கொள்வதற்காகத் தான், "திட்டக் குழுவையும்", "திட்ட மிடுதலையும்" மத்திய அமைச்சரவையின் ஒரு தீர்மானத்தால் உருவாக்கினார்கள் என்பதை, பண்டித நேரு அவர்களே ஒப்புக் கொள்கிறார்.

இந்தியத் தலைமை நீதி மன்றத்தின் (Supreme Court of India) முன்னாள் தலைமை நீதிபதியான டாக்டர் கே. சுப்பாராவ் அவர்கள் திட்டக் குழுவைப் பற்றிக் குறிப்பிடும் போது,

> "......இந்தியாவில் உருவாக்கப்பட்ட 'திட்டக்குழு, அரசிய லமைப்புச் சட்டவிதிகளுக்கு முரணாகச் செயல்படுகிறது. மாநிலங்களிலும் மத்திய அரசிலும், ஒரே கட்சி (காங்கிரஸ்) அரசோச்சி வந்ததால், இது சாத்தியமாயிருந்தது. மத்திய அரசின் பல அமைச்சர்களுடன், திட்டக் குழு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததாலும் நாட்டினுடைய பொருளாதாரத்தைக் கட்டி ஆளக்கூடிய அதிகாரத்தை அது பெற்றிருந்ததாலும் திட்டக் குழு, பெருமையில் உயர்ந்து நின்றது. பல்லாண்டு காலமாக இத்திட்டக் குழு, மத்திய அமைச்சரவைக்கும் மேற்பட்ட ஓர் 'உயர்மட்ட அமைச்ச ரவையாக' (Super Cabinet) வளர்ந்து விட்டது. திட்டக் குழுவின் மூலமாக, மாநிலப் பகுதிக்கான திட்டத்தையும் அதைச் செயற்படுத்தும் அதிகாரத்தையும் மத்திய அரசு, தன்னிடமே இருத்தி வைத்துக் கொண்டது." 5

எனக் கருத்தறிவிக்கிறார்.

திட்டக்குழு, சட்டத்திற்குப் புறம்பானதோர் அமைப்பாக இருந்தாலும்கூட, மிகப் பெரிய செல்வாக்கோடு அது அமைச் சரவைக்கும் மீறியதோர் அமைச்சகத்தைப் போல், மாநிலங் களின் எஜமானனாக, எப்படி இயங்கி வர முடிந்தது என்பதனை டாக்டர் கே. சுப்பாராவ் அவர்கள் தெளிவுபடுத்துகிறார்.

---

5 The Indian Federation by Dr. K. Subba Rao. P. 51.

3. திட்டக் குழு

சமுதாயப் பொருளாதாரத் திட்டமிடுதலுக்காகவே உருவாக்கப்பட்ட திட்டக்குழுவிற்குப் பல நோக்கங்களும் பணிகளுமுண்டு. தொடக்கத்தில் அதன் பணிகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தன. ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்கள் வளர வளரத் "திட்டக் குழுவும்" தனக்கு விதிக்கப்பட்ட பணி எல்லைகளிலிருந்து வெகுதூரம் முன்னேறிச் சென்று, தற்போது மத்திய அரசின் "உயர் மட்டப் பொருளாதார அமைச்சகம்" (Super Economic Ministry) என்று சொல்லக்கூடிய அளவிற்கு வளர்ந்து விட்டது. திட்டக் குழுவின் இவ்வகைப் பயங்கரமான வளர்ச்சி நிலைக்கு மத்திய அமைச்சரவையும் உறு துணையாக நின்றன.

ஆரம்ப காலத்தில் திட்டக் குழுவிற்கு வரையறை செய்யப்பட்ட நோக்கங்களையும் அதன் பணிகளையும் இப்போது பார்ப்போம்.6

1. நாட்டினுடைய பொருள்கள், மூலதனம், மனித சக்தி, தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஆகியவை பற்றிக் கணக்கெடுத்தல்; நாட்டினுடைய தேவைக்கு இவை போதவில்லையெனில், இவற்றைப் பெருக்கக் கூடிய வழி வகைகளைப் பற்றி ஆராய்தல்.

2. நாட்டினுடைய ஆதார வளங்களை (Resources) தக்கமுறையில் பயன்படுத்தித் திட்டங்களைத் தீட்டுதல்.

3. திட்டங்களின் முதன்மையை (Priority) வரிசைக் கிரமமாக நிர்ணயப்படுத்துதல். திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய மட்டங்களைத் (Stages) தீர்மானித்தல்; ஒவ்வொரு மட்டத்திலும் அவை முறையாக நடைபெறுவதற் குண்டான ஆதாரங்களைப் பிரித்தொதுக்குதல்,

4. பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கக் கூடிய சிறப்புக் கூறுகளைச் சுட்டிக் காட்டுதல்.

---

6 Cabinet Secretariat Resolution (Planning), No. 1. P (c) - 1950 Dated 15—3—1950;

5. அவ்வப்போது உருவாகும் அரசியல் சமுதாய சூழ்நிலைகளை யொட்டி, திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற் கான நிலைமைகளைத் தீர்மானித்தல்.

6. திட்டங்களை, அதன் ஒவ்வொரு மட்டத்திலும், முழுமையாக வெற்றியடைவதற்குத் தேவையான திட்ட இயந்திரத்தின் (Planning Machinary) தன்மையைத் தீர்மானித்தல்.

7. திட்டத்தின் ஒவ்வொரு பகுதியை நிறைவேற்றும் போதும் அதன் வளர்ச்சியை அவ்வப் போது தெளிவாக்குதல்; அப்படித் தெளிவாக்கும்போது அதற்குத் தேவையான கொள்கை மற்றும் வழி முறைகளைச் சரிக்கட்டிக் கொள் வதைப் பற்றிப் பரிந்துரைத்தல்.

8. அவ்வப் போது நாட்டில் இருக்கக் கூடிய பொருளாதார சூழ்நிலை, நடப்புக் கொள்கைகள், வழி முறைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அதற்குத் தேவையான இடைக்காலப் பரிந் துரைகளையும் (Interim Recommendations) துணைப் பரிந் துரைகளையும் (Subsidiary Recommendations) வழங்குதல்.

9. திட்டக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளை ஒழுங் காக நிறைவேற்றக் கூடிய வகையில், மத்திய அரசாலும் மாநில அரசுகளாலும் பரிசீலனைக்குத் தரப்படும் குறிப்பான பிரச்சனைகளைப் பரிசீலனை செய்து அதற்குரிய பரிந்துரைகளைச் செய்தல்.

திட்டக் குழுவின் பணிகளையும் கடமைகளையும் ஒரு கணம் ஆழ்ந்து படித்தால், இந்திய நாட்டினுடைய பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதில், அது எத்துணைப் பெரும்பங்கை வகிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இந்தியாவி னுடைய முழுப் பொருளாதாரத் தலைவிதியையும் எழுதக்கூடிய மிகப் பெரிய பணியே, திட்டக்குழுவின் பணி.

ஆனால் திட்டக்குழுவின் வரையறுக்கப்பட்ட பணிகளிலும் நோக்கங்களிலும், "கணக்கெடுத்தல்;" "வழி வகைகளை ஆராய் தல்;" "திட்டங்களைத் தீட்டுதல்;" "ஆதாரங்களைப் பிரித்தொதுக் குதல்;" "சிறப்புக் கூறுகளைச் சுட்டிக் காட்டுதல்;" "நிலைமை களைத் தீர்மானித்தல்;" "திட்ட இயக்கத்தின் தன்மையைத்

தீர்மானித்தல்;'' ''பரிந்துரைத்தல்'' என்றசொற்களேபயன்படுத்தப் பட்டுள்ளன. பொதுவாக, அது ஓர் ஆலோசனைக் குழுவின் பணிகளை மட்டும் செய்ய வேண்டும் என்பதே அச் சொற்களின் பொருளாகும்.

மத்திய அரசோ, அல்லது மாநில அரசுகளோ, சில குறிப் பிட்ட பிரச்சனைகளின் பேரில் ஆலோசனை வழங்க வேண்டு மென்றுத் திட்டக்குழுவைப் பணித்தால், திட்டக் குழுவும் அவை பற்றித் தன் பரிந்துரைகளைச் செய்ய வேண்டும்.

ஆனால், உண்மையில் நடப்பதென்ன?

திட்டக்குழு அதற்கு வழங்கப்பட்ட அதிகார எல்லைக்குள் நின்று, திட்டங்களைத் தீட்டும் அளவோடும் அதற்குரிய கணிச மான பொருளாதார மூலங்களைச் சேகரித்துக் கொள்கை வகுப்ப தோடும் பரிந்துரைகளைச் செய்வதோடும் நின்று விடுவ தில்லை.

மாறாக, நிர்வாகப் பொறுப்பைக் கொண்ட சர்வ சக்தி வாய்ந்த ஓர் அரசு நிறுவனத்தைப் போன்றே, நடைமுறையிலும் செயலாக் கத்திலும் திட்டக்குழு பணியாற்றி வருகிறது.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்படாத ஓர் ஆலோ சனைக்குழு (திட்டக்குழு) அரசமைப்புச் சட்டத்தின் விதிகளை யெல்லாம் மீறி அரசமைப்பில் குறிப்பிட்ட மாநில அரசுகளின் அதிகாரங்களுக்கு முரணாகவும் செயல்பட்டு வருகிறது.

நாட்டின் எல்லாப் பொருளாதாரத் துறைகளையும் அது ஆட்கொண்டு விட்டது. மத்திய அரசையும் உள்ளடக்கிக் கொண்டு விட்டது; மாநிலத் தன்னாட்சியையும் அடிமை கொண்டு விட்டது; திட்டக்குழுவின் இந்தப் பயங்கர வளர்ச் சியை எல்லா அரசமைப்பு வல்லுநர்களும், ''ஒற்றை ஆட்சியைப் பேணும் வளர்ச்சியெனக்'' கண்டிக்கின்றனர்.

அரசியல் சட்ட வல்லுனர் திரு. அமல்ரே அவர்கள், திட்டக் குழுவைப் பற்றிக் கருத்துச் சொல்லும் போது,

''ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதால், நாட்டி னுடைய கூட்டாட்சி முறை, பொதுவாக ஓர் ஒற்றை ஆட்சி

முறையில் இயங்கி வருகிறது. மாநில சுயாட்சி அதனுடைய் மிகக் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்ற வலிவான புகார் இந்தியாவில் பரவலாக நிலவுகிறது.''[7]

எனக் குறிப்பிடுகிறார்.

இந்த அளவிற்குத் திட்டக்குழு வளர்ந்து விட்டதற்குக் காரணம் அதனுடைய அமைப்பும் செயல்முறையுமாகும். அது பற்றி இனிப் பார்ப்போம்.

திட்டக்குழுவின் அமைப்பு

"திட்டக்குழுவிற்கு"ச் சட்ட மூலம் இல்லை என்பதைப் பார்த்தோம். திட்டக்குழுவில் எத்துணை உறுப்பினர்கள் இருக்க வேண்டும்? அவர்கள் தகுதி என்ன? என்பது பற்றி யெல்லாம் வரையறைப்படுத்தி, இதுவரை நிர்ணயிக்கப்பட வில்லை. யாரை வேண்டுமானாலும் - எத்துணை உறுப்பினர்களை வேண்டுமானாலும்-அதில் இடம் பெறச் செய்யக் கூடிய உரிமை களை மத்திய அரசு, தன்னகத்தில் வைத்துக் கொண்டுள்ளது. திட்டக்குழு எத்துணைக் காலம் இயங்க வேண்டும் என்றும் வரையறுக்கப்பட வில்லை.

திட்டக்குழுவின் அமைப்பே கூட அசாதாரணமானது. அரசியல் உறவே இருக்கக் கூடாத திட்டக்குழுவிற்கு நாட்டின் தலைமை யமைச்சரே தலைவர்; பல மத்திய அமைச்சர்கள் அதன் உறுப்பினர் கள். எனவே, திட்டக்குழுவை ஓர் அரசியல் நிறுவனமாகவே கொள்ளலாம். நியாயமான அறிவுரை கூறுவது மட்டும் தான் அதனுடைய வேலையாக இருக்க வேண்டும். ஆனால் நாட்டின் பொருளாதாரத் துறைகள் முழுவதையும் மத்திய அரசையும் மாநில அரசுகளையும் கூடத் தன்னுடைய கைப்பிடிக்குள் கொண்டு வந்து விட்டது திட்டக்குழு.

உறுப்பினர்களும் ஆலோசகர்களும்

திட்டக்குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அவர் களை நியமனம் செய்யும் முறையும் அவ்வப்போது மாறி வந்துள்ளன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் வரை மொத்தம் 13 உறுப்பினர்கள் திட்டக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

7 Inter Governmental Relations in India by Dr. Amal Ray, (1966) Page 114.

தலைமையமைச்சர் அதன் தலைவர். மிக முக்கியமான 5 மத்திய அமைச்சர்கள் அதன் உறுப்பினர்கள். மத்திய அமைச்சரவையின் அரசுச் செயலாளரே திட்டக் குழுவின் செயலாளராவார். 1967-ஆம் ஆண்டினளவில், அதில் 446 உயர்மட்ட அதிகாரிகள் பணி புரிந்தனர். அதனுடைய மொத்தப் பணியாளர்கள் 1816 பேர். ஆண்டொன்றுக்கு அதன் செலவு ஏறத்தாழ 1¼கோடி ரூபாய்; இந்திய அரசின் மிகப் பெரிய நிறுவனங்களில் திட்டக்குழுவும் ஒன்று.

எனவே மத்திய அரசின் கருத்தே, திட்டக்குழுவின் கருத்தாகிவிடும். திட்டக்குழுவுக்கும் மாநிலங்களுக்குமிடையே அதன் "நான்கு திட்ட ஆலோசகர்கள்" (Programme Advisers) பாலம் போல இயங்குகின்றனர். மத்திய உதவி பெறும் மாநிலத் திட்டங்களைக் கண்காணிக்கவும் அவற்றின் நிதி நிர்வாகச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கவும் திட்ட ஆலோசகர்கள் பொறுப்பானவர்களாவர். அவை போக, மத்திய அமைச்சகங்களுக்கும் மாநில அமைச்சகங்களுக்கும் அக்கறையுள்ள தனிப் பிரச்சினைகளிலும் அவர்கள் பணிபுரிகின்றனர்.

திட்டக் குழுவின் பகுதிகள்:

திட்டக் குழுவில் இருபதுக்கும் மேற்பட்ட தொழிற்துறைப் பகுதிகளும் பிரிவுகளும் உண்டு. அவைகளை ஐந்து வகைப் பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. ஒருமுகப்படுத்தும் பகுதிகள் (Co-ordination Divisions).
2. பொதுப் பகுதிகள் (General Divisions).
3. பொருள் பகுதிகள் (Subjects Divisions).
4. தனி வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிய பகுதிகள் (Special Development Programme Divisions).
5. திட்ட நிர்வாகப் பகுதிகள் (Programme Administrative Divisions).

இவை ஒவ்வொன்றிலும், பல சிறு பகுதிகள் தனித்துப் பணிபுரிகின்றன. இவற்றில் ஐந்தாவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் "திட்ட நிர்வாகப் பகுதிகள்" திட்டக்குழுவின் மிக முக்கியமான பகுதியாகும்.

திட்டக் குழுவுடனும் மாநில அரசுகளுடனும் தொடர்பு கொள்வதற்குரிய பணிகளை இந்தத் திட்ட நிர்வாகப் பகுதிகளே செயல்படுத்துகின்றன.

திட்ட ஆலோசகர்களுக்கும் திட்டக் குழுவிற்கும் தொழில் துறை நுணுக்க அடிப்படையில் மாநில வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்ய உதவுவதற்கும், மாநிலங்களின் ஒவ்வொரு ஆண்டுத் திட்ட வேலைகளையும் ஐந்தாண்டுகளின் திட்ட வேலைகளையும் ஒருமுகப் படுத்துவதற்கும் இப்பகுதி துணை புரிகிறது.

மேலும் இவை மாநில அரசிற்கும் திட்டக் குழுவிற்குமிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெறவும் ஏற்பாடு செய்கின்றன. மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவியினை நிர்ணயிக்கக் கூடிய ''பொருளாதாரப் பகுதியின் நிதி மூலப்பிரிவுடன்'' (Financial Resources Section of Economic Division) இவை இணைந்து பணியாற்றுகின்றன.

''திட்ட ஆலோசகர்கள்'' என்னும் அதிகாரிகள் திட்டக் குழுவினுடைய ''கண்களையும் காதுகளையும்'' போன்றவர்கள். 1952-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு வரை இந்தப் பொறுப்பினை 21 அதிகாரிகள் தாங்கி வந்துள்ளனர். ஆனால் இவர்களில் ஒருவர்கூட ஓராண்டு காலத்திற்குத் தொடர்ந்து இப்பதவியை வகிக்கவில்லை.

திட்டங்களை அமைத்தல்

மாநிலங்களின் உரிமைகளைப் பற்றிக் கவலைப்படாமல், அகில இந்தியா முழுவதற்குமான பொருளாதாரத் திட்டங்களையெல்லாம் 'திட்டக்குழு' தானே வகுத்து நிறைவேற்றுகின்றது. பரந்து விரிந்த அதன் பணிகளைப் பற்றி நாம் மேலோட்டமாகப் பார்த்தால் கூடத் தெரிந்து கொள்ள முடியும்.

திட்டக்குழு, மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே பொதுவாக இயங்கக் கூடிய ஒரு நடுநிலையான நிறுவனமாக அமைக்கப்பட வில்லை. மத்திய அரசினுடைய ஒரு பகுதியாகவே அதனுடைய அமைப்பும் நடைமுறைகளும் அமைந்திருப்பது கண்கூடு.

திட்டக்குழு ஓர் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான பொது வடிவைத் தேசிய மட்டத்தில் முதலில் அமைத்துக் கொள்கிறது. பின்னர் அதற்காகும் செலவினத் தொகைகளையும், (அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய) பரவலான கொள் கைகளையும், திட்டக்குழு வகுத்துக் கொள்கிறது. தேசிய மட்டத்தில் உருவாக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தின் கூறு களான மாநிலத் திட்டங்களுக்காகும் செலவுகளையும் மாநிலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நடைமுறைக் கொள்கை களையும் திட்டக்குழு, பின்னர் மாநிலங்களுக்குச் சுட்டிக் காட்டு கின்றது. திட்டக்குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட மாநில, ''மாநில நகல் திட்டத்தை'', (Draft Plan) அடிப்படையாகக் கொண்டு, மாநில அரசுகள் மாவட்ட மட்டங்களிலும், இலாக்கா மட்டங்களிலும் மாநிலத் திட்டத்தின் பகுதிகளை அமைக்கக் கோருகின்றன. அவை தரும் திட்டங்களை ஆய்வு செய்து மாநில அரசுகள் இறுதி முடிவெடுத்து, அந்த முடிவுகளைத் திட்டக்குழு விற்கு அனுப்பி வைக்கின்றன. ஆனால் மாநில அரசுகளால் அனுப்பப்பட்ட மாநிலத் திட்டங்களை, மத்தியத் திட்டக்குழு அப்படியே ஏற்றுக் கொள்ளாது.

தமிழகத்தைப் பொறுத்த வரை, திராவிட முன்னேற்றக் கழக அரசு, 10 ஆண்டுகளுக்குரிய தமிழகத் திட்டங்களை வகுப்பதற்காக ஒரு மாநிலத் திட்டக்குழுவையே நியமனம் செய்துள்ளது. அந்த மாநிலத் திட்டக்குழுவில், பொருளாதார நிபுணர்களும் தொழில் துறை வல்லுநர்களும் மற்ற வகைகளில் துறை போகிய வல்லு னர்களும் அங்கம் வகிக்கின்றனர். தமிழகத் திட்டங்களைச் சமைப்பதற்காக மாவட்ட அதிகாரிகளையும் அரசு இலாக்காக் களையும் மட்டுமே மற்ற மாநில அரசுகளைப் போல் நமது தமிழக அரசு நம்பியிருக்க வேண்டுவதில்லை. அதற்கென்று ஒரு மாநிலத் திட்டக் குழுவே நமது மாநிலத்தில் செயல்படுகிறது.

மாநில அரசு அனுப்பிய மாநிலத் திட்டங்கள் பற்றி ''தேசிய வளர்ச்சி மன்றத்தில்'' (National Development Council) விவா திக்கப் படுகின்றன. அதில் பங்கேற்கும் முதலமைச்சர்கள் மாநிலத் தேவைகளைப் பற்றிப் பொதுவாக வலியுறுத்துவார்களே யன்றி, மாநிலத் திட்டத்தில் நுணுக்கமான பகுதிகளைச் செம்மை யாக எடுத்துரைக்க அவர்களால் இயலுவதில்லை. ஏனெனில், மாநிலங்களின் நகல் திட்டங்களை (Draft Plans) பொதுவாகத் ''தேசிய வளர்ச்சி மன்றம்'' விவாதிக்கும் போது, அத்திட்டங் களிலுள்ள நுணுக்கங்களையும் பொருளாதார விவரங்களுடன் கூடிய ஆலோசனைகளையும் தெளிவாக ஆராய்வதற்கு, போதிய

வாய்ப்புத் தரப்படுவதில்லை. மேலும் தேசிய வளர்ச்சி மன்றத்தின் உறுப்பினர்களாக இடம் பெறுபவர்கள், மத்திய அமைச்சர்களாகவும் மாநில முதல்வர்களாகவும் இருப்பதால் நீண்ட நெடிய ஆலோசனைகளைத் தேசிய வளர்ச்சி மன்றக்கூட்டங்களில் தர்க்கரீதியாகச் செய்வதற்கு அவர்களுக்குப் போதிய அவகாசமோ, தெளிவான பொருளாதார விபரங்களோ கிடைப்பதில்லை.

தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் ஆண்டிற்கு இரண்டொரு நாட்களுக்கு மட்டும் கூடிக் கலைக்கிறதே யன்றி, திட்ட ஆலோசனைகளைப் பற்றி, மாநில அரசுகளை உண்மையிலேயே கலந்து செயல்படக் கூடிய அளவிற்குத் தேவையான, நிரந்தரமானதோர் அமைப்பாக, அது இயங்குவதில்லை. மாநிலங்கள் தத்தம் பொதுவான கோரிக்கைகளை வெளியிட்டுக் கொள்வதற்கான ஒரு மாமன்றமாக மட்டுமே இதுகாறும் தேசிய வளர்ச்சி மன்றம் பயன் பட்டு வந்திருக்கிறது. ஆக, ஒவ்வொரு மாநிலத்தின் திட்டங்கள், செலவினங்கள், குறைநிறைகள் நிதிப்பங்கீடுகள் ஆகியவை பற்றித் தேசிய வளர்ச்சி மன்றத்தில் அறுதியிட்டு இறுதியாக முடிவு செய்யப்படுவதில்லை.

சுருங்கக் கூறினால், மாநில ஆலோசனைகளைக் கேட்கக் கூடினோம்; பேசினோம்; கலைந்தோம்; என்ற அளவிற்கு மட்டுமே, தேசிய வளர்ச்சி மன்றத்தின் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

இவ்வகையில் இயங்கும் தேசிய வளர்ச்சி மன்றத்தில் மாநில முதல்வர்கள் கலந்து கொள்வதைத்தான் 'ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டுவதில் மாநில அரசுகளும் பெரும் பங்கு பெறுகின்றன' எனக் கூறுகின்றனர். அக்கூற்று எத்துணையளவிற்கு மெய்யானது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் தேசிய வளர்ச்சி மன்றத்தைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா?

4. தேசிய வளர்ச்சி மன்றம்
(NATIONAL DEVELOPMENT COUNCIL)

1952ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில், இந்திய அரசின் தீர்மானம் மூலமாக (இந்திய அரசுத் தீர்மான எண்: 62/C.F. 50, 1952 ஆகஸ்டு,) திட்டங்களைப் பற்றி,பரிசீலிக்கக்கூடிய ஓர் உயர் மட்ட நிறுவனமான "தேசிய வளர்ச்சி மன்றம்" அமைக்கப்பட்டது.

திட்டக் குழுவின் உறுப்பினர்களும் மாநில முதல்வர்களும் மத்திய நிதி அமைச்சரும் அதன் உறுப்பினர்கள்; அதன் தலைவர் இந்தியத் தலைமை அமைச்சர்.

ஆண்டிற்கு ஒருமுறை அல்லது இருமுறை – இரண்டு நாட்களுக்கு மட்டும்—இம்மன்றம் கூடுகிறது. மத்திய அரசாங்கத்தினுடைய, பொதுக் கொள்கையைப் பற்றிய விளக்கத்தை, அவ்வப்போது தலைமையமைச்சர் தருவதற்கும் மாநிலங்களின் தேவைகளையும் இன்னல்களையும் மாநில முதல்வர்கள் வெளியிடுவதற்கும், இந்த மன்றம் ஒரு பொது நிறுவனமாக அமைந்துள்ளது.

தேசிய வளர்ச்சி மன்றத்தின் நோக்கங்கள்

1. ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு ஆதரவாக, நாட்டினுடைய எல்லா வளங்களையும் திரட்டி வலிவாக்குதல்.
2. மிக முக்கியமான துறைகளில் பொதுவான பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கி வளர்த்தல்.
3. நாட்டினுடைய எல்லாப் பகுதிகளும் பொருளாதாரச் சமத்துவத்தோடு இருக்கும் வகையில் அப்பகுதிகள் மிக விரைவாக வளர்ச்சி யடைவதற்கும் உறுதுணையாக இருத்தல்.

மேற்சொன்ன மூன்று நோக்கங்களை அடைவதற்காக, தேசிய வளர்ச்சி மன்றத்திற்கு சில பணிகளும் தரப் பட்டுள்ளன.

தேசிய வளர்ச்சி மன்றத்தின் பணிகள்

1. ஐந்தாண்டுத் திட்டங்கள் செயல்படுவதை அவ்வப்போது ஆய்வு செய்தல்.

2. தேசிய வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய மிக முக்கியமான சமுதாயப் பொருளாதாரக் கொள்கைகளைப் பரிசீலித்தல்.

3. ஐந்தாண்டுத் திட்டங்களில் உருவாக்கப்பட்ட குறிக்கோள் களை முறைப்படி அடைவதற்கும், ஐந்தாண்டுத் திட்டங் களில், பொதுமக்கள் தங்கள் பங்கினையும் முழு ஒத்துழைப் பையும், செலுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற் கும் வளர்ச்சி பெருத அனைத்துப் பிரிவு மக்களுக்கும் முன் னேற்றத்தைக் கொடுப்பதற்கும், தேசிய வளர்ச்சிக்காக எல்லாக் குடிமக்களும் சரிசமமான தியாகத்தைச் செய் வதற்கான வழி முறைகளைக் காண்பதற்கும் தேவையான பல பரிந்துரைகளைச் செய்தல்.

எனவே, ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிப் பொதுவாக விவாதிப்பதற்கும், குறைநிறைகளைத் தெளிவு படுத்திக் கொள் வதற்கும் தேசிய வளர்ச்சி மன்றத்தைத் தவிர வேறு கருத் தரங்குகள் கிடையாது. எல்லா மாநில முதல்வர்களும் மிகப் பெரிய ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றியும் மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய பல திட்டங்கள், நிதி உதவிகள் மற்றும் இன்னபிற பொருள்களைப் பற்றியும், இக்குழுவில் ஆண்டிற் கொரு முறை விவாதிப்பதோடு மத்திய அரசின் திட்டம் பற்றிய நிலையும், அதன் தலைவரால் (பிரதம மந்திரியால்) அங்கே தெளிவாக்கப்படும்.

1952, 1953, 1954 ஆகிய ஆண்டுகளில் ஆண்டிற்கொரு முறையும்; 1955-இல் இரண்டு முறையும்; 1961-இல் மூன்று முறையும்; 1962-இல் ஒரு முறையும்; 1963-இல் இரண்டு முறை யும்; 1964, 1965 மற்றும் 1966 ஆகிய ஆண்டுகளில் ஆண் டிற்கு ஒவ்வொரு முறையும் தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன என "நிர்வாகச் சீர்திருத்தக் குழுவி னுடைய கற்றறிகுழு" (Study Teams of Administrative Reforms Commission) கூறுகிறது.

தேசிய வளர்ச்சி மன்றத்தில் மாநிலங்கள் எந்த அளவிற்கு ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி விவாதித்து முடிவிற்கு வந் திருக்கும் என்பதை, 14 ஆண்டுகளில் நடைபெற்ற மொத்தம் 14 கூட்டங்களின் எண்ணிக்கையிலிருந்தே நாம் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். 14 ஆண்டுகளில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறி முடிந்து விட்டதென்பதை நாம்

கருத்தில் கொண்டு, அவற்றிற்காக நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றத்தின் கூட்டங்களையும் அவற்ருேடு ஒப்பு நோக்கினல், எந்த அளவிற்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்புக்கள் கிடைத்திருக்கும் என்பதை நாம் ஒருவாறு புரிந்து கொள்ளலாம்.

சகலமும் காங்கிரஸ் மயமாயிருந்தபோது ''தேசிய வளர்ச்சி மன்றம்'', காங்கிரஸ் காரியக் கமிட்டியின் ஒரு கூருகவே இயங்கி வந்தது என்று சொன்ஞல் அது மிகையாகாது. அஃதாவது, மத்திய அரசின் சர்வ வல்லமை வாய்ந்த திட்டக்குழு எடுக்கும் முடிவுகளுக்கு இரப்பர் முத்திரையைக் குத்தும் பணியினை மட்டும் வெகு தீவிரமாய் நிறைவேற்றி வந்தது, தேசிய வளர்ச்சி மன்றம்.

1964–ஆம் ஆண்டுவரை, பண்டித நேரு அவர்கள் இதன் தலைவராக இருந்த காரணத்திஞல், மாநில முதல்வர்கள் கை கட்டி, வாய்பொத்தி நின்ற புனித இடம் இது. ஆனல் 1967–ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின் மாநிலங்களின் நிலை பற்றிய சில விளக்கங்களைத் தருவதற்காகவும் ஓரளவு இம்மன்றம் பயன்பட்டு வருகிறது.

திட்டக்குழுவினுடைய நூற்றுக்கணக்கான பகுதிகளும் (Divisions) ஆயிரக்கணக்கான பணியாளர்களும் இந்தியா முழுவதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பல வல்லுநர்களும் ஆண்டுக் கணக்கில் உட்கார்ந்து இலட்சக்கணக்கான புள்ளி விவரங்களைச் சேகரித்து, பல்லாயிரங்கோடி ரூபாய்கள் செலவிடப்படும் திட்டங்களை யெல்லாம் உள்ளடக்கி யிருக்கக்கூடிய ஐந்தாண்டுத் திட்டங்களை அலசிப் பார்த்து, ஆராய்ந்து, பரிசீலித்து, மாநிலங்களோடு விவாதித்து, உரிய முடிவுகளைச் செய்வதற்காக ஆண்டொன்றுக்கு 48 மணி நேர அவகாசத்தை மட்டுமே செலவழிக்கின்ற தேசிய வளர்ச்சி மன்றத்தின் உறுப்பினர்களது ''சாதனையை மந்திர சக்தியின் சாதனைக்கெல்லாம் மீறிய ஒரு சாதனை'' என்று சொல்லலாமல்லவா? திட்டமிடுதலில் ஆண்டுக் கொருமுறை மாநிலங்களின் முதல்வர்கள் பங்குபெறும் அற்புதத்தை இந்தியத் துணைக் கண்டத்தைத் தவிர வேறு எந்த நாட்டிலும் காண முடியாது!

திட்டக் குழுவினுடைய ஆலோசனைகளின் பேரில் மத்திய அமைச்சரவை எடுக்கும் பல முடிவுகளையும், மாநிலங்கள் அட்டியின்றி ஏற்றுக் கொள்வதற்கான ''மத்திய அரசின் ஒரு தனி

இயந்திரத்தைப்'' போலவே ''தேசிய வளர்ச்சி மன்றம்''செயல் பட்டு வந்துள்ளது.

தேசிய வளர்ச்சி மன்றத்தினுடைய சென்ற பல ஆண்டு களின் நடவடிக்கைகளை ஆய்ந்து பார்த்தால், அரசியல் அமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட பல மாநில அதிகாரங்களைக் கூட நேரடியாகப் பாதிக்கக் கூடிய அளவிற்கு, மத்திய அரசின் சில முடிவுகளைத் தேசிய வளர்ச்சி மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பது தெரிய வரும். மாநில அரசுகளைக் கலந்து கொள்ளாமலே கூட, சற்றும் எதிர்பாரா முறையில் மாநிலங்களின் அதிகாரங்கள் பற்றிய சில அடிப்படையான முடிவுகளை அவசரகோலமாகத் தேசிய வளர்ச்சி மன்றம் எடுத் துள்ளது. அந்த முடிவுகள் மாநில சுயாட்சி உரிமைகளை முற்றிலும் பாதித்துள்ளன.

சான்றுகள்:—

1. ஆலையில் தயாரிக்கப்பட்ட துணிகள், சர்க்கரை, புகையிலை ஆகிய பொருட்களின் விற்பனை வரிகளை 1957–ஆம் ஆண்டு வரை மாநில அரசுகளே வசூலித்து வந்தன. அப்பொருள்களின் வரி விதிப்புரிமையை மத்திய அரசு எடுத்து கொண்டு, அந்த விற்பனை வரிக்கு மாறுக— குறிப்பிட்ட சதவீத அளவிற்குக் கூடுதல் கலால் வரியை (Additional Excise Duties) அப்பொருள்களின் மேல் மத்திய அரசு விதித்து, வசூலித்து — மாநிலங்களுக்கு அளிக்க வேண்டுமென்ற ஒரு திடீர்த் தீர்மானத்தை மாநில அரசு களின் பரிசீலனைக்குக் கூட அனுப்பாமல், தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டது.

மாநிலங்களைப் பொறுத்தவரை, மேற்சொன்ன பொருள் களைச் சார்ந்த விற்பனை வரி, மிக இன்றியமையாத மாநில வருவாயாகும். குறிப்பிட்ட மாநில அதிகாரங்களை ஒருமுறை மத்திய அரசிற்கு மாநிலங்கள் தந்துவிட்டால் அவற்றை மீண்டும் மாநிலங்கள் திருப்பிப் பெற முடியாது.

காங்கிரஸ் கட்சியின் ஆட்சி, மத்திய அரசிலும் மாநிலங் களிலும் நிலவி வந்ததால், தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் முதல்வர்கள், அதன் தலைவரான

பண்டித நேரு அவர்களின் இந்த முடிவுக்குத் தலையாட்டி விட்டுக் கையொப்பமிட்டுவிட்ட காரணத்தினால், ஜவுளி, பட்டு, புகையிலை மற்றும் சர்க்கரை மீதான விற்பனை வரி உரிமையை என்றென்றும் மாநிலங்கள் இழந்து விட்டன.

மாநில வரிகளில், ''காமதேனுவைப்'' போன்றது அதன் விற்பனை வரி. விற்பனை வரி விதிக்கப்படும் பல பண்டங்களில், மிக அதிகமான வருவாயை ஈட்டிக் கொடுப்பவை, புகையிலை, பட்டு, ஜவுளி மற்றும் சர்க்கரை போன்ற பண்டங்கள். இத்துணை அளவு முக்கியமான மாநில வருவாய் இனங்களை மத்திய அரசிற்குக் கொடுத்துவிட்டு அதற்கு மாருக ஒரு குறிப்பிட்ட கலால் வரிப் பங்கை மட்டும் மாநிலங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அடிப்படையான முக்கிய முடிவைத் தேசிய வளர்ச்சி மன்றம், உடனடி முடிவாகச் செய்து கொண்டதிலிருந்தே, அதில் அங்கம் வகித்த மாநிலக் காங்கிரஸ் முதல்வர்களுடைய அடிமை நிலை, தெளிவாகப் புரியவில்லையா?

இழந்துவிட்ட இந்த உரிமையை (4 பொருள்களின் விற்பனை வரி அதிகாரத்தை) மீண்டும் திரும்பப் பெறுவதற்காகப் பல்லாண்டுகளாக மாநிலங்கள் முயற்சித்தும், இதுவரை அவைகளைத் திரும்பப் பெற இயலவில்லை. ஒவ்வொரு முறையும் அதற்கீடாக மத்திய அரசால் தரப்படும் கூடுதல் கலால் வரித் தொகையை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று மத்திய அரசை, மாநிலங்கள் கெஞ்சிக் கூத்தாடி வருகின்றன.

2. 1962–ஆம் ஆண்டில் தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் ஒருவர் மிகப் பெரிய ஆலோசனையொன்றை வெளியிட்டார்.

   பொது மக்களிடமிருந்து கடன்களைப் பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை, மத்திய அரசு மட்டும்தான் செல்ல வேண்டும். மாநிலங்கள், பொது மக்களிடம் கடன் பெறுவதற்காகச் செல்லக் கூடாது என்பதே அந்த அற்புத யோசனை.

தேசிய வளர்ச்சி மன்றத்தில் கலந்து கொண்ட பல காங்கிரஸ் முதல்வர்கள் அந்த யோசனைக்கு உடனே தலையாட்டி விட்டனர். தேசிய வளர்ச்சி மன்றத்திலேயே அதைப் பற்றித் திடீர் முடிவும் எடுக்கப்பட்டு விட்டது.

மக்களிடம் கடன் பெறக் கூடிய உரிமை, ஒரு மாநில அரசுக்குள்ள தனி உரிமை. அதில் தலையிடுவதற்கு மத்திய அரசுக்கு உரிமையில்லை. சில சூழ்நிலைகளில் தவிர மத்திய அரசு, கடன் பெற்ற பின்னர் தான் மாநில அரசுகள் கடன் பெற வேண்டும் என்ற அரசமைப்புச் சட்டத்திற்கு மீறிய வகையில் தேசிய வளர்ச்சி மன்றம் மாநிலங்களைப் பாதிக்கின்ற திடீர் முடிவை எடுத்து விட்டது.

காரணம் என்ன?

மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் ஒரே கட்சியின் (காங்கிரஸ் கட்சியின்) நீண்ட ஆட்சி.

அந்தக் கட்சிக்கு (காங்கிரஸ்) மாநில உரிமைகளைப் பற்றியோ, மாநில அதிகாரங்களைப் பற்றியோ - ஏன் - அரசமைப்பைப் பற்றியோ கூடக் கவலையில்லை. அக் கட்சியின் மாநில முதல்வர்களுக்கும் மாநில அதிகாரங்கள் பற்றிக் கவலையில்லை. அவர்களின் கவலையெல்லாம், டெல்லி பீடத்தைத் திருப்தி செய்வது எப்படி? அடுத்த முறை மீண்டும் முதல்வராக வருவதற்குக் காங்கிரஸ் தலைமையின் மூலச் சக்திக்கு நல்ல பிள்ளையாக நடப்பது என்பது தான்.

ஒற்றைக் கட்சி[காங்கிரஸ்]யால் உருவான ஒற்றையாட்சியைப் பற்றி இப்பகுதியின் இறுதி அத்தியாயத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வளர்ச்சி மன்றத்தால், மாநில சுயாட்சியுரிமை எப்படிப் பாழடிக்கப்படுகிறது என்பதை அரசியலமைப்பு நிபுணர், அமல்ரே அவர்கள் குறிப்பிடும்போது,

> ‘‘மாநில சுயாட்சியை நேரடியாகக் குழிக்குள் ஆழ்த்தக் கூடிய சில தீர்மானங்களைத் தேசிய வளர்ச்சி மன்றம் உருவாக்குகின்றது. இது ஒரு பெரிய அரசியல் அமைப்புப் பிரச்சனை. எனினும் இதை யாரும் ஏனோ பெரிது படுத்துவதில்லை.’’8

எனத் தெளிவாக்குகிறார்.

8 Inter Govermental Relations in India [1966], P. 119

5. மாநிலத் திட்டங்களில் மாநிலங்களுக்குப் பங்கில்லை

ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் இடம் பெறும் மாநிலத் திட்டங்களையும் அந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யக் கூடிய நிதி உச்சவரம்பையும் திட்டக் குறியீடுகளையும் (Targets) மாநிலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய வரிசைக் கிரமத்தையும் (Priorities) மத்திய அரசே நிர்ணயம் செய்து விடுகிறது. மத்திய அரசு வகுக்கும் மேற்சொன்ன கட்டுப்பாட்டு எல்லைகளுக்குள் தான் மாநிலங்கள் தங்கள் திட்டங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வகையில் முறைப்படுத்தப்பட்ட மாநிலத் திட்டங்களை மத்திய அரசு மீண்டும் அங்கீகரிக்க வேண்டும். அதன் பின்னரே அவைகளைச் செயல் படுத்துவதற்கு மாநிலங்கள் உரிமை பெறுகின்றன.

மிகப்பெரிய திட்டங்களைக் குறிப்பிட்ட மாநிலங்களில் நிறைவேற்றும் போது, அத் திட்டங்களுடைய ஒவ்வொரு கட்டத்தின் நிறைவேற்றத்தையும் மத்திய அரசு, தனித் தனியாக அங்கீகரிக்க வேண்டும்.

மாநிலங்கள் தாங்களே நிறைவேற்றிக் கொள்வதாக ஏற்றுக் கொண்ட மாநிலத் திட்டங்களைக் கூட அதன் நிதி நிலையை அனுசரித்து மாற்றிக் கொள்ளக்கூடாது. மாநிலங்கள் நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்ட திட்டங்களை அவை மாற்றியமைத்துக் கொள்ளாமல் இருப்பதற்காக, பல வகையான நிதி ஏற்பாடுகளையும் கட்டுப்பாடுகளையும் மத்திய அரசு விதிக்கின்றது.

திட்டமிடுதலால் ஏற்பட்ட இந்த மத்திய-மாநிலப் புதிய உறவிற்கு (மத்திய அரசு ஆண்டானாகவும், மாநில அரசுகள் அடிமைகளாகவும் மாறிவிட்ட புதிய உறவிற்கு)க் காரணம் மத்திய அரசால் கொடுக்கப்படும் நிதி உதவிகளே.

ஓர் ஐந்தாண்டுத் திட்டம், முழுமையாக வெற்றி பெற வேண்டுமெனில் அதன் அடிப்படையான அம்சங்கள் மத்திய அரசாலும், மாநில அரசுகளாலும் சம உரிமையுடன் பங்காளிகளைப் போன்ற

சம தகுதியுடன் மனம் திறந்து பேசப்படல் வேண்டும்; மத்திய-மாநில அரசுகளின் ஒன்றுபட்ட ஆலோசனைகளுக்குப் பின்னர் மாநிலங்களுக்கேற்ற திட்டக் குறியீடுகளையும் அவற்றைச் செயல் படுத்தும் முறைகளையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். ஆனல் ஐந்தாண்டுத் திட்டங்களில் இவ்வகை சீரிய முறைகள் எதுவும் மத்திய-மாநில அரசுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படுவ தில்லை. ஐந்தாண்டுத் திட்டங்களைப் பொறுத்தவரை இறுதி முடி வெடுப்பது திட்டக்குழுவும் மத்திய அரசும் தான்.

மாநிலங்களுக்குத் திட்டங்களுக்கான நிதி உதவிகளைச் செய்வதற்கு மத்திய அரசு மிகச் சிக்கலான முறைகளைக் கை யாளுகின்றது.

சிக்கல் நிறைந்த நிதியுதவிகள்

அ. பொதுவாக மானியங்கள் மூலமாகவும் கடன்களின் மூலமாக வும் மாநிலத் திட்டச் செலவினங்களுக்கான தொகை கள் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன.

ஆ. இந்த மானியங்களும் கடன் தொகைகளும் ஒரே மாதிரி யானவையாய் இருப்பதில்லை.

இ. மத்திய அரசின் உதவியுடன் மத்திய அரசிற்காக, மாநிலங் களால் நிறைவேற்றப்படும் சில திட்டங்களுக்குத் தரப்படும் மானியங்களும் கடன்களும், ஒருவகை நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் கொண்டிருக்கும்.

ஈ. குறிப்பிட்ட சில திட்டங்களுக்காகக் (Specific Schemes) கொடுக்கப்படும் கடன்கள், வேறு வகையான நிபந்தனை களையும் கட்டுப்பாடுகளையும் கொண்டிருக்கும்.

உ. பல்வேறு வகையான வளர்ச்சித் திட்டங்களுக்காகத் (Miscelaneous Schemes) தரப்படும் கடன்கள் இன்னெரு வகையான நிபந்தனைகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கும்.

ஊ. இவை தவிர, கடன்களை வழங்கக் கூடிய முறைகளில் அவற் றைத் திருப்பிக் கட்டும் கட்டங்களிலும் மாறுபட்ட நெறி முறைகள் இருக்கும்.

எ. கடன்களைத் திருப்பிக் கட்டும் காலவரையறைகளும் நிபந்தனைகளும் கடனுக்குக் கடன் மாறுபடுகின்றன.

ஏ. மாநிலத் திட்டங்களில் இன்னொரு வகையுண்டு. மத்திய அரசினுடைய நேரடித் திட்டங்கள்; இவ் வகையைச் சார்ந்த திட்டங்களை மத்திய அரசே உருவாக்கித் தனது நேரடி மேற்பார்வையில் மாநில அரசுகளின் மூலமாக நிறைவேற்றுகின்றது. இத் திட்டங்களுக்கான செலவுத் தொகைகள் மாநிலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் திட்டத் தொகையுடன் சேராது. எனவே, மத்திய அரசின் நேரடித் திட்டங்களில் நிதி பெறும் முறை, நிர்வாக முறை, திட்ட நிறைவேற்றப்பாணி, அதனைச் சார்ந்த பற்று வரவுகள் ஆகியவை முழுக்க முழுக்க மாறுபடுகின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால் மேற்சொன்ன பல வகைத் திட்டங்களும் ஒரே மாநிலத்தில் தான் நடைபெறுகின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையான நிதியேற்பாடுகள். அவை ஒன்றுக் கொன்று தொடர்பின்றியும் இயங்குகின்றன.

இவற்றின் இறுதி விளைவு என்ன? முடிவாக மாநில அரசுகளின் அதிகாரங்களும் உரிமைகளும் பலவகைகளிலும் திட்டக் குழுவால் பறிக்கப்பட்டு விடுகின்றன.

மத்திய அமைச்சரவையின் எண்ணங்களில் சில திட்டங்கள் உருவாகும். அவைகளை சம்மந்தப்பட்ட மத்திய அமைச்சகங்களே வகுத்தும் விடும். அதற்குப் பல அரசியல் காரணங்களும் இருக்கும். அந்த மத்திய அமைச்சகத் திட்டங்களை, ஏதோ ஒரு வகையில் ஐந்தாண்டுத் திட்டங்களுடன் இணைத்து விட வேண்டுமென்று, திட்டக் குழுவை மத்திய அமைச்சகங்கள் வற்புறுத்தும். வேறு வழியின்றி அவற்றின் பலாபலன்களையும் செலவினங்களையும் விரிவாக ஆய்வு செய்யாமல் அவைகளை ஐந்தாண்டுத் திட்டங்களுடன் திட்டக்குழு சேர்த்துக்கொள்ளும். இதே முறையில் மத்திய அரசின் விருப்பத்திற்கேற்றபடி, சில முக்கியத் திட்டங்களும் திட்டக்குழுவால் கைவிடப்படும். இதனால் மத்திய அரசும் பாதிக்கப்படுவதில்லை. திட்டக்குழுவும் பாதிக்கப்படுவதில்லை. இறுதியில் பாதிக்கப்படுவது உரிமை யிழந்த மாநிலங்களே.

ஐந்தாண்டுத் திட்டங்கள் செயற்கையானவையாகத் தோற்றமளிக்க வேறு சில காரணங்களும் உண்டு. தேசிய வளர்ச்சி மன்றத்தில் மாநிலங்களோடு ஒப்புக்காக விவாதித்த

பின்னர், எல்லா மாநிலத் திட்டங்களையும் உண்மையில் நிர்ணயம் செய்வது திட்டக்குழுவே.

சில சமயங்களில் ஓர் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கும் காலம் வரையும் கூட, திட்டக்குழுவிற்கும் மத்திய நிதி இலாக்காவிற்கும் கருத்தொற்றுமை ஏற்படாது. அதே மாதிரி, திட்டச் செலவுகளைப் பற்றியும் திட்டமில்லாத வேறு மாநிலச் செலவுகளைப் பற்றியும் ஓர் உறுதியான முடிவும் கடைசி வரை ஏற்படுவதில்லை.

மாநிலங்களும், ''இறுதியாகக் கிடைப்பது கிடைக்கட்டும் அதுவரை பேரம் பேசலாம்'' என்ற எண்ணத்தில் மிகப் பெரிய மாநிலத் திட்டங்களை, திட்டக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதும் அவைகளைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுகளை வலியுறுத்துவதும்,இறுதிக் கட்டம்வரை,தெளிந்த முடிவு ஏற்படாமல் இருப்பதும் இறுதியில் இரண்டு மூன்று நாட்களுக்குள் இவையெல்லாம் பற்றிய ஏதோ ஒரு வகையான அவசர முடிவு ஏற்படுவதும் ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்திலும் வழக்கமாக நடைபெறக் கூடிய நிகழ்ச்சிகளாகும்.

எனவே,மாநிலத் திட்டங்களில் எவையெவை கண்டிப்பாக இருக்க வேண்டும், எவை முதன்மையான தகுதியைப் பெற வேண்டும்? விடுபட வேண்டியவை எவை? என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு, திட்டக் குழுவிற்கே விடப்படுகின்றன. கடைசி நேரத்தில் திடீரென்று சில திட்டங்கள் திட்டக்குழுவால் சேர்த்துக் கொள்ளப்படும்; அதே மாதிரி சில திட்டங்கள் கைவிடப்பட்டும் விடும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட திட்டச் செலவும் கூடக் கடைசி வரை அறுதியிட்டு முடிவு செய்யப்படாமல் இருப்பதும் உண்டு.

இவ் வகையில் ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களுக்குரிய திட்ட ஏற்பாடுகள், நிலையில்லாமலேயே இறுதிவரை ஊசலாடுகின்றன.

ஏனிந்தக் குழறுபடி?

ஒவ்வொரு மாநிலத்திற்குரிய திட்டங்களையும் திட்டச் செலவுகளையும் சரியான முறையில் திட்டக்குழுவால் நிர்ணயம் செய்ய முடிவதில்லை; மாநிலங்கள் எதிர்பார்ப்பதைக் காட்டிலும், மிகக் குறைந்த அளவு திட்ட ஏற்பாடுகளே திட்டக்குழுவால் செய்யப்படுகின்றன. மத்திய அரசு மாநிலங்களுக்களிக்கும் திட்ட நிதி

உதவிகளைப் பொறுத்தே மாநிலத் திட்டங்களின் அமைப்பும் ஏற்பாடுகளும் அவைகளுக்குரிய திட்டச் செலவுகளும் நிர்ண யிக்கப்படுவதால் தான் இவ்வளவு சிக்கல்களும் உண்டா கின்றன.

சென்ற கால் நூற்றுண்டு காலத்தில் இச் சிக்கல்களெல்லாம் மென்மேலும் வளர்ந்துள்ளனவே யன்றிக் குறைந்த பாடில்லை. இன்றையத் திட்டக்குழுவும், அதன் அமைப்பும் நடைமுறையும் வரம்பிற்கு மீறிய பணிகளும், மத்திய அரசின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் அதன் செயல் முறைகளும் மற்றும் அரசமைப் புச் சட்டத்தால் தரப்பட்ட மாநில அதிகாரங்களைக் களவாடிக் கொள்ளும் அதன் சர்வாதிகாரத் தன்மையுமே மாநிலங்களை இன்று, திட்டக்குழுவிடமும் அதன் வழி மத்திய அரசிடமும் மண்டியிட வைத்து விட்டன. மத்திய அரசிடமுள்ள நிதி என் கிற செம்புகோலின் மூலமாக, ஐந்தாண்டுத் திட்டங்களைச் சார்ந்த மாநில அதிகாரங்களும் உரிமைகளும் மத்திய அரசிற்குச் சென்று விடுவதால், மாநிலத் திட்டங்களில் பங்கேற்கும் அடிப் படை உரிமையை, தற்போது மாநிலங்கள் இழந்து நிற்கின்றன.

6. மாநில அதிகாரங்கள் மங்கி மறைகின்றன

மாநில மக்களின் சமுதாயப் பொருளாதார வளர்ச்சிக்குரிய பணிகளை மத்திய அரசும் மாநில அரசும் தனித் தனியாக நிறைவேற்றுதல் வேண்டும் எனக் கருதியே அந்தந்த அரசுகளுக்குரிய அதிகாரங்களைத் தனித்தனிப் பட்டியல்களில் நமது அரசமைப்புச் சட்டம் தொகுத்து வைத்துள்ளது. மக்கள் நல்வாழ்வுக்குரிய பல பணிகளை மேற்கொள்வதற்கும்; பொருளாதார வளமையைப் பெருக்குவதற்கும் தேவையான பல திட்டங்களை மத்திய அரசும் மாநில அரசும் தனித்துத் தீட்டுவதற்காகவே, ''சமுதாயப் பொருளாதாரத் திட்டமிடுதல்'' என்ற அதிகார இனம் அரசமைப்பின் '' பொதுப் பட்டியலில் '' இடம் பெற்றுள்ளது. ஆனால் சுதந்திர இந்தியாவில் தற்போது நடைபெறுவதென்ன ?

ஐந்தாண்டுத் திட்டங்களெல்லாம் மத்திய அரசின் கீழுள்ள திட்டக்குழுவாலேயே வகுக்கப்படுகின்றன; அவற்றில் மாநிலங்கள் உரிய பங்கு பெறுவதில்லை. மாநில அரசுகள் 'திட்டமிடுதலை' தனித்தும் செயல்படுத்த முடியாது. எனவே, அரசமைப்புச் சட்டத்தால் மாநிலங்களுக்குத் தரப்பட்ட பல அதிகாரங்களும் உரிமைகளும் திட்டக்குழுவின் மூலமாக மங்கி மறைந்து, மத்திய அரசின் கைக்குள் சென்று விடுகின்றன. அஃதெப்படி? இவண் ஆய்வோம்.

மத்திய அரசின் உள்ளம் காட்டும் கண்ணாடி

திட்டக்குழு இந்தியாவினுடைய ''பொருளாதார உயர்மட்ட அமைச்சரவை'' போல் (Super Economic Cabinet) இயங்கி வருகிறது எனப் பார்த்தோம். அது மாநிலங்களின் மேல் பொருளாதாரக் கொள்கைகளை மட்டும் திணிப்பதில்லை; மாநிலங்கள் எதிர்பாராத — அவை விரும்பாத — அவற்றின் பொருளாதார முடக்கடிக்குக் காரணமான — பல திட்ட ஏற்பாடுகளையும் மாநிலங்களின் மேல் – திணிக்கின்றது. இதனால் மத்திய அரசு, மாநில அரசிற்குரிய அதிகார இனங்களில் '' திட்டமிடுதல் '' மூலமாக ஆதிக்கம் செய்கிறது.

திட்டக்குழுவின் அமைப்பும் திட்டமிடும் முறையும் திட்டக் குழுவின் பணிகளும், மத்திய அரசையும் அதை நிர்வகிக்கும் அரசியல் கட்சியையும் பொதுவாகச் சார்ந்ததாயிருக்கின்றன. ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தையோ, அல்லது அதன் – வருடாந் திரத் திட்டத்தையோ "திட்டக்குழு" உருவாக்கும்போது, மத்திய அரசின் முடிவுகளையும் கொள்கைகளையும் நடைமுறைக் கட்டளைகளையும் ஏற்றுக் கொண்டு தான் அவற்றை உருவாக்கு கின்றது.

எனவே, ஐந்தாண்டுத் திட்டங்கள் மத்திய அரசின் ஆதிக்கத் தையும் மத்திய அரசின் "உள்ளத்தையும்" (Mind) பிரதி பலிக் கின்றன.

'மாநிலங்களைக் கலந்தாலோசித்த பின்னர்தானே ஐந் தாண்டுத் திட்டங்கள் உருவாகின்றன', என்று தத்துவார்த்த மாகச் சொல்லப் பட்டாலும் மத்திய அரசு, தன்னுடைய மேலாதிக்கத்தை வைத்து மாநிலங்களைத் தனது திசையில் திருப்பிக் கொள்வதை நாம் நடைமுறையில் காண்கிறோம். எனவே — விரும்பியோ விரும்பாமலோ மாநிலங்கள், மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு — ஐந்தாண்டுத் திட்டங்களின் மூல மாகக் கட்டுப்பட்டு விடுகின்றன.

அடக்கு முறை

திட்டங்களைச் சமைக்கும் போது திட்டக்குழு, ஒரு சாதா ரணமான ஆலோசனை மன்றம் போல் தோற்ற மளித்தாலும், உண்மையில் மாநிலங்களின் மேல் அது நேரடியான அடக்கு முறையினைச் செயல்படுத்துகின்றது. அதனால் மாநிலங்களின் உரிமைகள் பறி போகின்றன.

சான்றாக நிலச் சீர்திருத்தத் திட்டங்களை மாநிலச் சட்ட மன்றங்களில் வைக்கப்படும் முன்னர் அவைகளைத் திட்டக்குழு, தனது "நிலச் சீர்திருத்தப் பகுதிகள்" மூலமாக ஆய்வு செய் கிறது.

சமுதாய வளர்ச்சித் துறைத் திட்டங்களுக்கான அடிப்படைக் கொள்கைகளும் நடவடிக்கை முறைகளும் மாநிலங்களுக்குத் திட்டக் குழுவாலேயே அனுப்பப்படுகின்றன. அந்தக் கொள் கைகளின் அடிப்படையிலேயே சமுதாய வளர்ச்சித் திட்டங் களை மாநில அரசுகள் நிறைவேற்ற வேண்டும்.

இவை தவிர, சில குறிப்பிட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு, திட்டக்குழுவின் தனிப்பட்ட இசைவும் தேவை.

திட்டக்குழு, தனது "திட்ட ஆலோசகர்கள்" மூலமாக மாநிலங்களில் நடைபெறும் திட்ட வேலைகளை மேற்பார்வை செய்கின்றது.

மத்திய அமைச்சகங்களில் மாநிலத் திட்டங்கள்

"திட்டக்குழு", திட்டங்களைத் தானே வகுத்து மத்திய அமைச்சகங்களின் மூலமாகவே அவைகளை நிறைவேற்றுகின்றது. எனவே, மாநிலங்களுடைய அதிகாரப் பொருள்களில் வரக் கூடிய மாநிலப் பணிகளின் மேல் மத்திய அமைச்சகங்கள் கட்டுப்பாடுகளைச் செய்கின்றன.

மாநிலங்களுக்கான தனிப்பட்ட சில திட்டங்களுக்கு, "திட்டக்குழு" ஒப்புதலை அளிப்பதோடு அவற்றிற்குரிய நிதி உதவிகளைப் பற்றியும் அது மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்ய வேண்டும். திட்டக்குழுவால் செய்யப்படும் பரிந்துரைகளை மத்திய அமைச்சகங்கள் ஏற்றுக் கொண்டு அவைகளைச் செயல்படுத்துகின்றன. மாநிலத் திட்டங்களுக்குரிய "நிதி" மற்றும் "செயல் துறை" பற்றித் திட்டக்குழுவால் செய்யப்பட்ட பரிந்துரைகளை மத்திய அமைச்சகங்கள் ஏற்றுக் கொண்டு, அதன்படியே நிதி உதவிகளை மாநிலங்களுக்குக் கொடுக்க முன்வருகின்றன. அப்போது பல வகையான கட்டுப்பாடுகளையும் நெறிமுறைகளையும் திட்ட நிதி உதவி பெறும் மாநிலங்களின் மேல் மத்திய அமைச்சகங்கள் விதிக்கின்றன. வேறு வழியின்றி மாநிலங்களும் மத்திய அமைச்சகங்களால் விதிக்கப்படும் அக் கட்டளைகளை ஏற்றுக் கொண்டு மத்திய நிதியைப் பெற்று, திட்டக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சில மாநிலத் திட்டங்களை செயல்படுத்துகின்றன.

நிதி உதவி ஓர் நெம்புகோல்

மாநிலத் திட்டங்களில், எந்தத் திட்டத்திற்கு முதன்மை தரப்பட வேண்டும் என்பதை மத்திய அரசும், திட்டக்குழுவுமே தீர்ணயம் செய்கின்றன. மாநில மக்களுக்காக நிறைவேற்றப் படும் திட்டங்களில் எது மிக முக்கியமானது; எது முதன்மை

இடத்தைப் பெற வேண்டும்; எந்தத் திட்டத்தை இறுதியாகச் செயல்படுத்த வேண்டும் என்பவையெல்லாம் ஒரு மாநில அரசிற்குத்தான் தெரிய வாய்ப்புள்ளது. ஆனால் மாநிலங்களுக்குத் தரும் நிதி உதவிகளின் மூலமாக, மேற்சொன்ன மிக முக்கியமான மாநில உரிமையைக் கூட மத்திய அரசு, தானே பறித்துக் கொள்கிறது. இவ்வகையில், மத்திய அரசு தனது "நிதியுதவி" என்ற நெம்பு கோலைக் கொண்டு மாநில சுயாட்சியினைத் தகர்த்தெறிகிறது.

உண்மையில், மத்திய அரசால் வழங்கப்படும் (திட்ட) நிதி உதவிகளே, மாநிலங்களின் மேல் மிகப் பெரிய ஆதிக்கத்தை மத்திய அரசுக்கு அளித்து விடுகின்றன.

நிதி ஆணைக்குழு செய்த பரிந்துரைகளின்படி மத்திய அரசால் 1960–61–இல் மாநிலங்களுக்குத் தரப்பட்ட உதவி மானியங்கள்.	ரூ. 4,881கோடி.
திட்டக்குழு செய்த பரிந்துரையின் பேரில் 1960–61-இல் மத்திய அரசால் மாநிலத் திட்டங்களுக்குத் தரப்பட்ட விருப்பு மானியத் தொகை	ரூ. 11,378கோடி.

மத்திய அரசால் நிதி ஆணைக் குழுவின் மூலம் தரப்படும் உதவி மானியத் தொகையைப் போல் (Grants in aid) ஏறத்தாழ 2½ மடங்கு அதிகத் தொகையைத் திட்டச் செலவுகளுக்காக மத்திய அரசு விருப்ப மானியங்களாக (Discretionary Grant) மாநிலங்களுக்குத் தந்துள்ளது. இந்த விருப்பு மானியத் தொகைகள் மூலமாகவே மத்திய அரசு மாநிலங்களின் மேல் பேராதிக்கத்தைச் செலுத்துகின்றது என்பது தெளிவாகிறதல்லவா?

மாநில மக்கள் கட்டக்கூடிய மத்திய வரிகள் மூலமாகவும், வெளிநாட்டுக் கடன்கள் மூலமாகவும் வெளிநாட்டு உதவிகள் மூலமாகவும், மத்திய அரசு மிகப் பெரிய தொகைகளைத் திரட்டுகிறது. அந்தக் கடன் சுமைகளிலும் வெளிநாட்டு உதவித் தொகைகளிலும்–மத்திய வரிகளிலும் மாநில மக்களுக்குப் பெரும் பங்கு உண்டு. ஆனால் அந்த மாநில மக்களுக்குரிய பணிகளை

ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக மத்திய அரசு செயல் படுத்தும்போது மட்டும் மத்திய அரசு மாநிலங்களின் மேல் பல நிபந்தனைகளை விதிக்கிறது; பின்னரே விருப்ப மானியங் களைத் தருகின்றது.

மாநிலங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய தொகைகளை, மாநிலங்களுக்குக் கொடுக்கும்போது, மாநிலங்கள் மேல் நிபந் தனைகளை விதிப்பதற்கு மத்திய அரசிற்கு உரிமை யேது?

நிபந்தனை மானியங்கள் (Conditional Grants)

விருப்ப மானியங்களில் ஒருவகையே "**நிபந்தனை மானியங் கள்**" ஆகும். ஒரு குறிப்பிட்ட பணிக்காக, குறிப்பிட்ட ஒரு தொகையைப் பல நிபந்தனைகளோடு வழங்கும் ஏற்பாட்டிற்கு, நிபந்தனை மானியம் எனப் பெயர். அந்தக் குறிப்பிட்ட திட்டப் பணி, மாநிலத்திற்குத் தேவையற்றதாகக் கூட இருக்கலாம்; எனினும், வேறு வழியின்றி மாநிலங்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளுகின்றன. அதன்வழி மத்திய அரசின் மேலாட்சியையும் மாநிலங்கள் ஏற்றுக் கொள்கின்றன.

பங்கீட்டு மானியங்கள் (Matching Grants.)

மத்திய அரசு, பங்கீட்டு மானியம் என்ற பெயரில் மற்றொரு வகையான நிதி மானியத்தையும் மாநிலங்களுக்கு அளிக்கிறது. வளர்ச்சித் திட்டங்களுக்கான ஒரு பகுதித் தொகையை ஒரு மாநிலம் செலுத்தினால் அதற்கிணையான தொகையையோ, அல்லது அதற்கும் மேற்பட்ட தொகையையோ, மத்திய அரசு அம்மாநிலத்திற்கு மானியமாக வழங்குகிறது. இதற்குப் பங்கீட்டு மானியம் (Matching grant) எனப் பெயர்.

சிற்றூர்களின் குடி தண்ணீர் வசதி, சுகாதார வளர்ச்சி ஆகியவை போன்ற பல வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு இந்த வகைப் பங்கீட்டு மானியத்தின் மூலமாகப் பாதித் தொகையை வழங்குகிறது. எனவே, மீதிப் பாதித் தொகையை மாநிலங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாநிலத்தின் எல்லாச் சிற்றூர்களுக்கும் குடி நீர் வசதியை யும் சுகாதார வசதியையும் செய்து தர வேண்டுமென்று எல்லா மாநில அரசுகளும் தான் விரும்புகின்றன. ஆனால், அதற்குரிய நிதி வசதி பல மாநிலங்களுக்குப் போதுவதில்லை. அதற்காகும்

செலவின் பாதித் தொகையை ஏற்றுக் கொள்ளக்கூட, பல மாநிலங்களுக்கு வழியிருப்பதில்லை. எனினும், இச்சீரிய திட்டங்களை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென்ற பேராசையால் உந்தப்பட்ட மாநில அரசுகள் மத்திய அரசின் பங்கீட்டு மானியத்தொகைகளை ஏற்றுக் கொள்கின்றன. அப்படி ஏற்றுக் கொள்ளாவிடில் அந்த மாநில அரசு, மாநில மக்களின் கோபத்திற்காளாக வேண்டிய நிலை ஏற்படுமல்லவா? எனவே, கையறு நிலையில் மாநிலங்கள், மத்திய அரசின் பங்கீட்டு மானியங்களை ஏற்றுக் கொண்டு, அவற்றிற்குரிய பாதித் தொகையைக் கூடக் கட்டமுடியாமல் பின்னால் தவிக்கின்றன. அந்தப் பாதித் தொகையை (அல்லது பங்குத் தொகையை) மாநிலங்கள் ஈடு கட்டுவதற்காக வேறு சிலவேண்டா முறைகளையும் கையாளத் தொடங்குகின்றன. இதனைச் சரிக்கட்ட, அரசியல் துறைக்குப் பொருத்தமற்றதும் புத்திசாலித்தனமற்றதுமான சில கொள்கைகளைக்கூட அந்த மாநிலங்கள் வகுத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன.

சான்று:—

மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், உத்தரப் பிரதேச மாநில அரசு, பல வளர்ச்சித் திட்டங்களை நிதிப் பற்றுக்குறை காரணமாக நிறைவேற்ற முன் வரவில்லை. மேற்சொன்ன பங்கீட்டு மானியத்தை, மத்திய அரசு கொடுக்க முன்வந்தும் கூட, மாநிலப் பங்குத் தொகையைத் தர முடியாத நிலையில் உத்தரப்பிரதேச மாநிலம் அந்த மானியங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தப் பாதித் தொகையை ஈட்டுவதற்குரிய வேறு ஒரு வழியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசு அம்மாநிலத்தைப் பணித்தது. அதாவது நில உடைமைகளுக்கான வரியை அதிகரிக்கும் வகையில் புதுச் சட்டமொன்றை இயற்றக் கூறி உத்தரப் பிரதேச சர்க்காரை மத்திய அரசு வற்புறுத்தியது. அந்த வரியுயர்வை எதிர்த்து, பொது மக்கள் போராட்டங்களை நடத்தினர். அதனால் மிகப் பெரிய அரசியல் நெருக்கடி உத்தரப்பிரதேசத்தில் உருவாயிற்று. அந்த மாநில அரசு ஆட்சிப் பொறுப்பை விட்டு இறங்குவதற்கு அதுவும் ஒரு மூல காரணமாயிற்று.[9]

1959-60-ஆம் ஆண்டில் மட்டும் 60 வகையான வளர்ச்சித் திட்டங்களுக்கு இவ்வகை மானியங்களை மத்திய அரசு தந்தது.

---

9 **Statesman issues, 8-9-1962, 12-9-1962, 27-9-1972**

அவைகளில் சில :—

(i) வேளாண்மை மற்றும் மின்துறைக்காக ரூபாய் 8 கோடி;

(ii) சமுதாய வளர்ச்சி மற்றும் தேசிய விரிவுச் சேவைக்காக ரூ. 17 கோடி;

(iii) பொதுக் கல்விக்காக ரூ. 20 கோடி;

(iv) மலேரியா ஒழிப்புக்காக ரூ. 7½ கோடி;

(v) பிற்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடி மக்களுக்கான திட்டங்களுக்கு ரூ. 8 கோடி;

இப்படி மாநிலங்கள் விரும்பாத ஒரு குறிப்பிட்ட பொருளாதாரக் கொள்கையை அமுல் படுத்த வேண்டுமென மத்திய அரசு, பங்கீட்டு மானியத்தின் மூலமாக வற்புறுத்துகிறது; அதனால் மாநில சுயாட்சியும் பாதிக்கப்படுகிறது.

பங்கீட்டு மானியங்களால் ஏற்படும் மாநிலங்களின் பரிதாப நிலை பற்றி, திரு. K. சந்தானம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"பங்கீட்டு மானியங்களால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன... எல்லா மானியங்களும் மத்திய அமைச்சகங்களின் மூலமாகவே வழங்கப்பட வேண்டும்; கல்விக்கான மானியம் மத்தியக் கல்வி இலாக்கா மூலமாகவும், உணவு மற்றும் விவசாய மானியங்கள் மத்திய உணவு இலாக்கா மூலமாகவும் வழங்கப்படவேண்டும். எனவே எல்லா மத்திய இலாக்கா அமைச்சகங்களும் சம்பந்தப்பட்ட மாநில இலாக்காக்களுக்குக் கட்டளையிடும் எசமான் நிலையினைப் பெறுகின்றன. வேறு சொற்களில் கூற வேண்டுமெனில், திட்டக்குழு ஒருவகையான செங்குத்தான கூட்டாட்சியை (Vertical Federation) உருவாக்குகின்றது. நில எல்லைகளால் அமைக்கப்படும் ஒரு கூட்டாட்சியை நமது அரசமைப்புச் சட்டம் ஏற்படுத்தி யுள்ளது. நமது அரசமைப்புச் சபையுங்கூட ஒரு படுகிடையான கூட்டாட்சியைத்தான் (Horizontal Federation) ஏற்படுத்தி யுள்ளது. ஆனால், "பங்கீட்டு மானியங்கள்" (மேலிருந்து கீழிறங்கக்கூடிய) ஒரு செங்குத்தான கூட்டாட்சியாக (Vertical Federation) அதனை மாற்றி விட்டன. அதாவது, திட்டக் காரியங்களுக்காகவும் மிக முக்கியமான வேறு செலவினங்களுக்காகவும்

கல்வி போன்ற பலதுறைகளிலும், மத்திய அரசின் இலாக்காக்களும் மாநில அரசின் இலாக்காக்களும் ஒரே அமைப்பினுடைய இரண்டு கூறுகளைப்போல் இயங்குகின்றன.''[10]

எனச் சுட்டிக் காட்டுகிறார்.

"There is one distressing feature of this matching grants... All the grants have to be issued through the Central Ministries. For Education through the Central Ministry of Education; for Food or Agriculture through the Food and Agriculture Ministries and so on. Therefore, all the Central Ministries are in a position to dictate to corresponding State Departments. In otherwords, a Sort of *"Vertical Federation" has been sets up under the Planning Commission.* The constitution sets up a *"Territorial Federation"*; it is a *"Horizontal Federation"* that was set up by the constituent Assembly. The matching grants have set up a vertical Federation by which the Central Departments and the State Departments on the same subject as 'education', etc., form a unit for the purposes of programmes, projects and most important of all, for expenditure."

---

10 "Union-States Relations in India", (1963), Pp. 53-54.

7. இரட்டை இலாக்காக்கள் ஏன்?

கல்வி, சமுதாய வளர்ச்சி, இன்னோரன்ன பல மக்கள் பணித் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கும் மாநிலப் பட்டியலில் உள்ள அதிகாரங்களை முறையாக அமுல் படுத்துவதற்கும் ''கல்வி யிலாக்கா'', ''உணவு இலாக்கா'', ''சமுதாய வளர்ச்சி இலாக்கா'' போன்ற பல தனித்துறைகள் மாநில அரசுகளில் இருக்க வேண்டும். அவ்வகை இலாக்காக்கள் மத்திய அரசிற்குத் தேவையில்லை.

ஆனால் நடைபெறுவ தென்ன?

மாநிலத்திற்கொரு கல்வித்துறை — மத்திய அரசிற்கொரு கல்வித்துறை.

மாநிலத்திற்கொரு சமுதாய வளர்ச்சித்துறை—மத்திய அரசிற் கொரு சமுதாய வளர்ச்சித்துறை;

மாநிலத்திற்கொரு விவசாயத்துறை — மத்திய அரசிற்கொரு விவசாயத்துறை.

இப்படி, ஒரே பொருளைச் சார்ந்த இரண்டு இலாக்காக்கள் மாநிலத்தில் ஒன்றும் மத்திய அரசில் ஒன்றும் இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். நியாயமாகப் பார்த்தால் அந்த வகை மத்திய இலாக்காக்களுக்கு வேலையில்லை. அவசிய மில்லை.

ஆனால், திட்டக்குழுவின் நிதியுதவி மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றை மாநிலங்களில் செயல்படுத்துவதற்கும் அந்த நிதி யுதவிகளைக் கொண்டு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளையும் அதன் இலாக்காக்களையும் மேலாட்சி செய்வதற்கும் மத்திய அரசின் அவ்வகை இலாக்காக்கள் இயங்கி வருகின்றன.

''மத்திய அரசிற்கொரு துறை; மாநிலத்திற் கொரு துறை'' என்ற ஏற்பாடு அரசமைப்புச் சட்டத்தால் செய்யப்பட்ட தல்ல. ஆனால், அவைகளைத் திட்டக்குழு உருவாக்கி விட்டது. இதனைத் தான் '' செங்குத்துக் கூட்டாட்சி '' என்று, திரு. சந்தானம் அவர்கள் கூறுகிறார்.

1967-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27-ஆம் நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழகச் சட்ட மேலவையில் உரையாற்றுகையில்,

"மத்திய அரசு, இன்று கூறப்படுவதுபோல் இந்தியாவின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்தப் போது மான அளவுக்கு வலிமையுடையதாக இருக்க வேண்டு மென்றுதான் நானும் விரும்புகிறேன். இதை நான் வேறு வகையாகவும் கூற முடியும். இந்நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவே மத்திய அரசு வலிமையுடையதாக இருக்க வேண்டுமென்று கூறுகிறேன். இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கு மத்திய அரசைப் பொறுப்புடையதாகச் செய்யத் தேவையான இந்த அதிகாரங்கள் எல்லாம் மைய அரசிடமே நிலை பெற்றிருக்க வேண்டும் என்று தயக்கமின்றி யும் எவரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் கூறத் தயங்க மாட்டேன். ஆனால் இந்தியாவைப் பாகிஸ்தான் அபாயத்திலிருந்தோ, சீன, பலுசிஸ்தான் அபாயத்திலிருந்தோ பாதுகாப்பதற்கு மைய அரசு இங்கே ஒரு சுகாதாரத் துறையை வைத்திருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அது எந்த வகையில் இந்தியாவின் இறைமையையும் சுதந் திரத்தையும் வலிவுடைய தாக்கும்? அவர்கள் இங்கே ஒரு கல்வித் துறையை வைத்திருக்க வேண்டுமா? அது அங்கே இராணுவத்தினருடன் போரிடும் திறனை எந்த வகையில் அதிகப்படுத்தும்?"

எனக் கூறி மத்திய அரசின் பல இலாக்காக்கள் அவசியமற்றது என வாதிடுகிறார்.

"I want the Centre to be strong enough to maintain the sovereignty and integrity of India as It is the fashion to call it. I would put it in another way. It is to safeguard the independence of the country. I am prepared to say that anybody will accept without any remorse or without any reservation that all these powers needed to make the Centre responsible for the safety of this country ought to be with the Centre. But that does not mean that the Centre in order to safeguard India from Pakistanis or the Chinese or the Baluchis, should think of having a Health department here. In what way does that strengthen the sovereignty and independence of India? Should they have an Education Department here? In what way does that improve the fighting capacity of the military personnel there?"

8. சுயாட்சி உரிமையா? அடகுப் பொருளா?

அரசமைப்புச் சட்டப்படி விவசாயம், கல்வி, சுகாதாரம், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் போன்ற மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பணிகளுக்கு மாநில அரசுகள் நேரடியாகப் பொறுப்பேற்றுக் கொள்கின்றன. ஆனால், அதற்குத் தேவையான நிதி பெறும் வழிகள் மாநிலங்களுக்கு அளிக்கப்படவில்லை.

ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக மத்திய அரசால் கொடுக்கப்படும் ''நிபந்தனை மானியங்கள்'', ''பங்கீட்டு மானியங்கள்'', ''விருப்ப மானியங்கள்'' ஆகியவை மூலமாக மாநில அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்டதும் மாநில மக்களுக்கு நேரடியாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக் கூடியதுமான மாநில அரசுத்துறைகளில் மத்திய அரசு கொள்கைத் தலையீடுகளையும் கட்டுப்பாடுகளையும் செய்வதுடன் நேரடியாகவே நிர்வாகத் தலையீடுகளையும் செய்கிறது.

மேலும் மத்திய அரசு, தனது மத்தியத் திட்டங்களுக்காக, அதிக நிதி ஒதுக்கீடுகளையும் செய்து கொள்கின்றது. அரசமைப்புச் சட்ட விதிகளுக்குப் புறம்பாக மாநிலங்களின் மேல், மேலாட்சியும் செய்கின்றது. மாநிலத் திட்டங்களிலும் அவற்றை நிறைவேற்றுவதிலும் தன்னுடைய இச்சைப்படி மத்திய அரசு மாநிலங்களை ஆட்டி வைக்கின்றது. இதனால் மாநில சுயாட்சியும் பறி போகின்றது.

இவ்வளவு தெரிந்திருந்தும், மத்திய அரசின் ஆதிக்க ஆட்சிக்கு மாநிலங்கள் ஏன் கட்டுப்பட வேண்டும்?

மாநிலப் பட்டியலிலுள்ள அதிகாரங்களில் திட்டக்குழு மூலமாக மத்திய அரசு தலையிட்டால் அதன் கட்டளைகளுக்கு மாநிலங்கள் அடிபணிய முடியாதென்று மறுத்து விடலாமல்லவா?

மேலும், திட்டக் குழுவினால் அங்கீகாரம் கொடுக்கப்படாத வளர்ச்சித் திட்டங்களை ஒரு மாநில அரசு, தானே ஏன் நிறைவேற்றிக் கொள்ளக் கூடாது?

இப்படிப் பல வினாக்கள் நம் உள்ளத்தே தோன்றும்.

அரசமைப்புச் சட்ட வல்லுநர், திரு. அமல்ரே (Amal Ray) அவர்கள் இவ்வினுக்களுக்கெல்லாம் உரிய விடை கூறுகிறுர்:

> "அரசமைப்புச் சட்டக் கண்ணேட்டத்தின்படி (மத்திய அரசினுடைய திட்டக்குழுவின்) நெறிமுறைக் கட்டளைகளை மாநிலங்கள் மறுத்து விடலாம். ஆனுல் அக்கட்டளைகளின் படி நடக்காமலிருக்கும் ஒரு மாநிலம் அதனுடைய விளைவு களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அதாவது, எல்லா மத்திய உதவிகளும் அந்த மாநிலத்திற்கு உடனே நிறுத்தப்பட்டு விடும். விரிவடையக் கூடியதும்– மிக அதிகத் தொகைகளை வழங்கக் கூடியதுமான–எல்லா வருவாய் மூலங்கள் மேலும் மத்திய அரசே, தனி உரிமை பெற்றுள்ளது. பற்றுக்குறையுள்ளதும் பெருக்கமடையாதது மான வருவாய்களை மட்டும், மாநிலங்கள் பெற்றுள்ளன. ஆனுல், மக்கள் நல்வாழ்வுக்கான பல பணிகள் (செய்தலை) மாநிலப் பட்டியலில் ஒதுக்கித் தரப் பட்டுள்ளன. குடியரசு முறையில் இயங்குகின்ற பொதுமக்களுடைய கருத்தால் மாநில அரசுகள் அழுத்தப்படுவதால், இவ்வகைப் பணிகளை மாநில அரசுகள் நிறைவேற்றியே தீர வேண்டும். மக்கள் நல்வாழ்வுக்கான பல பணிகளை மாநிலங்கள் நிறைவேற்ற முனையும் போது, மாநிலங்களின் நிதி வசதிகளுக்கும் அதன் பல பணிகளுக்குமிடையே தவிர்க்க முடியாத ஒரு பெரிய இடைவெளி (நிதிப் பற்றுக்குறை) உண்டாகி விடும். மத்திய அரசிடமிருந்து போதுமான நிதி உதவி கிடைத்தால் தான் இந்த இடைவெளியை (நிதிப் பற்றுக்குறையை) மாநிலங் களால் நிரப்ப முடியும்" 11

கீழ்க் கண்ட பட்டியலைப் பார்த்தால், ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநிலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகும் செலவுத் தொகையில் மாநிலங்களின் நிதி வருவாய் போகத் துண்டு விழக்கூடிய தொகைகள் மத்திய அரசின் விருப்ப மானி யங்களால் சரிக் கட்டப்படுவது விளங்கும். மாநிலத்தின் வருவாய்களைக் காட்டிலும், ஏறத்தாழ $1\frac{1}{4}$ மடங்கு அதிகத் தொகைகளை மத்திய அரசினுடைய மானியத் தொகைகள் இட்டு நிரப்புகின்றன.

---

11 "Inter Goveramental Relations in India", (1966) P. 122.

முதற் பட்டியல்

மாநிலங்களின் நிதிப் பற்றுக்குறை பற்றிய விளக்கக் குறிப்புகள் ×

ஐந்தாண்டுத் திட்டங்கள்		மாநிலத் திட்டத் தொகைகள்	மாநிலங்களின் நிதி வசதி	துண்டுவிழும் தொகை	மத்திய அரசின் உதவி நிதித்தொகை
		(ரூபாய் கோடிகளில்)			
முதல் ஐந்தாண்டுத் திட்டம்	...	897	499	398	350
2-ஆம் ஐந்தாண்டுத் திட்டம்	...	1906	774	1132	1038
3-ஆம் ஐந்தாண்டுத் திட்டம்	...	3847	1462	2385	2375

மாநிலங்களின் நிதிப் பற்றுக்குறை எவ்வளவு பயங்கரமானது என்பதும் மத்திய அரசிடமிருந்து மானியத் தொகைகளைப் பெற்றுக் கொண்ட மாநிலங்கள் ஏன் தன் சுயாட்சி உரிமையை அடகு வைத்து விடுகின்றன என்பதும் இந்தப் பட்டியலிலிருந்து தெரிய வரும்.

× "Review of First Five-Year Plan," (1957), P. 24, "India (1961)" P. 106 and "Third Five-Year Plan", P. 102.

9. சீர்மைக் கொள்கை (Uniform Policy) சீரிய கொள்கையா?

இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரே சீரான பொருளாதாரக் கொள்கையையே, ஐந்தாண்டுத் திட்டங்கள் வலியுறுத்திக் கடைப்பிடித்து வருகின்றன. ஒரு நாட்டின் பல மாநிலப் பகுதிகளினுடைய "இயற்கைக் கூறுகள்", "பொருளாதார நிலை", "தட்ப வெட்ப நிலை", "அதன் சூழ்நிலைகள்", "மரபுகள்", "நில நூல் நிலை" இயற்கை ஆதார வளங்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதால்தான் அந்தந்தப் பகுதியினுடைய "தன்னாட்சி" இன்றியமையாததாகிவிடுகிறது. அப்படிப்பட்ட பல வகையான மாநிலங்களையும் ஒருமைப் படுத்துவதற்காகத் தான் கூட்டாட்சி அமைப்பும் அந்நாட்டில் உருவாகிறது.

ஆனால், அந்தந்த மாநிலங்களின் இயற்கை அமைப்புக்களையும் தனித் தேவைகளையும் சிறப்புக் கூறுகளையும் கருத்தில் கொள்ளாமல், எல்லா மாநிலப் பகுதிகளுக்கும் ஒரே சீரான கொள்கையை (Uniform Policy) திட்டக்குழு வற்புறுத்துவதனால், திட்டங்களின் முழுப் பயன்களும் கிட்டுவதில்லை. அந்தந்தப் பகுதிகளின்பொருளாதார வளர்ச்சியும் தடைபட்டுப் போகின்றது.

"இந்தியாவை ஒற்றுமைப் படுத்துவோம்; அதற்காக எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான பொருளாதாரத் திட்டங்களைச் சீர்மைக் கொள்கையின் அடிப்படையில் தீட்டி நிறைவேற்றுவோம் என்ற கொள்கையை வகுத்துக் கொண்டு, அந்தந்த மாநிலங்களின் தனி நிலைமைகளுக்கேற்றபடி, திட்டம் வகுக்காமல் ஒரே மாதிரியான (சீரான) செயற்கைத் திட்டங்களைத் தேசிய மட்டத்திலிருந்து உருவாக்கி அவற்றை மாநிலங்களின் மேல் திணிக்கும் அவலநிலை, இன்றும் இருந்து வருவதை நாம் கண்கூடாகக் காணலாம். 'நிதி' என்ற மத்திய அரசின் தூண்டுகோலால் கவரப்பட்ட மாநிலங்கள் மத்திய அரசு தரும் எல்லாத் திட்டங்களையும் கைகட்டி, வாய்பொத்தி ஏற்றுக் கொள்கின்றன. தங்களுக்குத் தேவையற்ற சில திட்டங்களைக் கூட மறுப்பதில்லை. எனினும் அந்தந்த மாநில மக்களுடைய உண்மைத் தேவைகள் எல்லாவற்றையும் சர்வ சக்தியும் கொண்ட திட்டக் குழுவால் கூடத் தீர்க்க முடிவதில்லை.

''வேளாண்மை'', காடுகள்'', ''சுகாதாரம்'', ''கல்வி'', ''குடிசைத் தொழில்கள்'' மற்றும் ''சமுதாய நலம்'' ஆகியவை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும் தன்மையைக் கொண்டவை. இவைகளைச் சார்ந்த திட்டங்கள் மாநிலத் தனித் தன்மைகளுக் கேற்றபடி வகுக்கப்பட வேண்டும்; அல்லது குறைந்த பட்சம் பிராந்திய அடிப்படையிலாவது (Regional Basis) இவைகளைப் பொறுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டால், திட்டச் செலவின் உண்மையான பயன் கிடைக்கும். ஆனால், எல்லா ஐந்தாண்டுத் திட்டங்களிலும், வேளாண்மை, காடுகள், கல்வி, குடிசைத் தொழில் மற்றும் சுகாதாரம் ஆகியவைகளில் அகில இந்தியா விற்கும் ஒரே சீரான கொள்கை வகுக்கப்பட்டு, மிகப் பெரிய தொகைகள் ''சீர்மைக் கொள்கை'' என்ற பெயரால் பாழடிக் கப்பட்டுள்ளன. அதன் குறைபாடுகளை மாநிலங்கள் எடுத்துச் சொல்வதற்கு உரிமை படைத்தவை யல்ல. அந்தந்த மாநிலப் பழக்க வழக்கம் மற்றும் சுற்றுச் சார்புகளுக் கேற்றபடி, திட்டங் கள் வகுக்கப்பட வேண்டு மென்று ஒருக்கால் மாநிலங்கள் எடுத் தியம்பினும் ''அகில இந்தியாவிற்கும் ஒரே சீரான கொள்கையை அமுல் படுத்தும் திட்டக்குழுவின்'' காதில் அது ஏறுவதில்லை. மத்திய அரசு மாநிலங்களின் நிதிவாயில்களைக் கையகப்படுத்திக் கொண்டதன் நேரடி விளைவுகளில் இதுவும் ஒன்று.

மாநிலங்களின் வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகள் ஏன்?

சில மாநிலங்கள் நல்ல நிர்வாகத் திறனைப் பெற்றுள்ளன; அவை, குறிப்பிட்ட தொகையைச் செலவு செய்து அற்புதமான சாதனைகளைச் செய்துள்ளன. அதே தொகையைச் செலவு செய்த பிற மாநிலங்கள், அந்தக் குறிப்பிட்ட துறைகளில் அடையத் தக்க வளர்ச்சியினைப் பெறுமற் போய் விடுகின்றன. மாநிலக் குறியீடுகளில் (Targets) மாறுபட்ட சாதனைகள் மாநிலத்திற்கு மாநிலம் உள்ளன. எனவே, மாநிலங்களின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் உருவாகின்றன.

மாநிலங்களுக் கிடையேயுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வு கள், நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பின்னரும்கூட, சீர்மைக் கொள்கையினைப் பேசும் இந்திய அரசால் தீர்க்கப்பட வில்லை. நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களில், பல்லாயிரங் கோடி ரூபாய்கள் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவாகச்

இரண்டாம் பட்டியல்

(1964–65) மாநிலங்களின் தனி நபர் சராசரி வருமானத்தைக் (PER CAPITAL INCOME) காட்டும் பட்டியல்

[மாநிலங்களிடையே இருக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்]

எண்	மாநிலங்கள்	தனி நபர் வருமானம் (ரூபாயில்)
1.	பஞ்சாப் ...	619
2.	மகாராட்டிரம் ...	529
3.	குசராத் ...	523
4.	அரியாணு ...	513
5.	மேற்கு வங்கம் ...	495
6.	ஆந்திரப் பிரதேசம் ...	458
7.	மைசூர் (கர்நாடகம்) ...	441
8.	தமிழகம் ...	436
9.	அஸ்ஸாம் ...	394
10.	கேரளா ...	391
11.	மத்தியப் பிரதேசம் ...	378
12.	உத்தரப் பிரதேசம் ...	374
13.	ஒரிஸ்ஸா ...	368
14.	இராஜஸ்தான் ...	365
15.	பீகார் ...	292
16.	அகில இந்தியத் தனி நபர் சராசரி வருமானம் ...	423

SOURCE: "Central Statistical Organisation"

[Quoted from "India Today" (1970), P. 386]

செலவழிக்கப் பட்டுள்ளன. எனினும் திறனற்ற மாநிலங்கள், முறையோடு வளர்ச்சியடையவுமில்லை; திறன் பெற்ற மாநிலங்கள் உரிய ஊக்கத்தையும் பெறவில்லை. மாநிலங்களின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் காட்டுவதற்காக, ஒவ்வொரு மாநிலத்தின் தனி நபரின் சராசரி வருமானம் 57-ஆம் பக்கத்தில் 2-ஆம் பட்டியலில் தரப்பட்டுள்ளது.

ஏன் இந்தப் பொருளாதார ஏற்றத் தாழ்வு?

ஒவ்வொரு திட்ட காலத்திற்கும் பின்னுல், இது பற்றி ஆராயப்படுகின்றது. ஆனுல் பரிகாரம்தான் இன்னும் காண முடியவில்லை. இந்தியத் துணைக்கண்டத்திற்குரிய எல்லாத் திட்டங்களையும் டெல்லியில் அமர்ந்திருக்கும் ஒரே திட்டக்குழு அதனுடைய சில அதிகாரிகளையும், வல்லுநர்களையும் கொண்டே உருவாக்கி, அவைகளைச் ''சீர்மை'' (Uniformity) என்ற பெயரால் மாநிலங்களின் மேல் வலுக்கட்டாயமாகத் திணிப்பதால் தான் மாநிலங்களிடையே அகண்ட பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனுல், மத்திய அரசு, சென்ற 24 ஆண்டுகளில் தன்னகத்தே கைப்பற்றி வைத்திருக்கும் மாநில நிதி மூலங்களை அதற்காக இழந்து விடுவதற்கும் தயாராக இல்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, சீர்மைக் கொள்கைகளைப் பின்பற்றுவதாலேயே மாநிலங்களின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கிவிட இயலாது. மாருக மாநிலங்களின் நிதிவாயில்கள் பெருக்கப் பட்டு, அவைகளுக்குரிய நிதிச் சுதந்திரமும் வழங்கப்பட்டாலன்றி, பொருளாதாரத் துறையில் மாநிலங்கள் சமத்துவத்தை அடைய முடியாது. அதுவரை மத்திய அரசின் சீர்மைக் கொள்கை—சீரிய கொள்கையாகப் பயன்படாது.

10. கற்றறி குழுக்களின் கருத்துரைகள்

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவால் (Administrative Reforms Commission) நிறுவப்பட்ட ''திட்ட இயந்திரத்தை''ப் பற்றி ஆய்வு செய்த ''கற்றறி குழு'' (Study Team for Machinery for Planning) மத்தியத் திட்டக்குழுவைப் பற்றி, பல கருத்துரைகளைத் தந்துள்ளது.

அவையாவன:

1. திட்டக்குழு, ஐந்தாண்டுத் திட்டங்களின் குறிக்கோள்களையும் வட்டாரப் பொதுத் திட்டங்களையும், அதனதனுக்கு அளிக்கப்பட வேண்டிய வரிசைக் கிரமத் தகுதிகளையும் குறியீடுகளையும், சுட்டிக் காட்டும் பொறுப்பினை மட்டும் கொண்டதாக இருக்க வேண்டும். பிராந்தியத் திட்டங்களின் விவரங்களைத் தொகுப்பதற்கும் தனித் தனித் திட்டங்களை உருவாக்குவதற்கும் அவைகளைப் பரிசீலிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் திட்டக்குழுவிற்குத் தனித்த அதிகாரங்கள் இருக்கக் கூடாது. அவ்வதிகாரங்கள் எல்லாம், சம்மந்தப்பட்ட மத்திய – மாநில அரசுகளின் பொறுப்பில் தான் இருக்க வேண்டும். அப்பணிகளில் திட்டக்குழு நேரடியாக ஈடுபடலாகாது.

2. ''தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை'' எனக் கருதப்படும் சில திட்டங்களைத் தவிர, மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் வரும் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அரசுகள் முழுப் பங்கும் பெற வேண்டும்.

3. தேசிய முக்கியத்துவமுள்ள சில திட்டங்களைத் தவிர, மற்ற தனித்தனித் திட்டங்களுக்கு, தனித்தனி நிதி உதவிகள் தரப்பட வேண்டு மென்ற முறையினை மத்திய அரசு மாற்றிக் கொள்ள வேண்டும்.

மத்திய-மாநில உறவுகளைப் பற்றி ஆய்ந்த ''மத்திய-மாநில உறவு பற்றிய கற்றறி குழு'' (Study team for Union - State Relations), ''திட்டத்தின் செலவினங்களுக்கு மத்திய அரசு கொடுக்கும் நிதி உதவிகள் யாவும் ஒட்டு மொத்த மான தொகையாகவே (Block Sums) மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும்; அந்த

ஒட்டு மொத்தத் தொகைகளை மாநிலங்கள் தமது விருப்பப்படி, பயன்படுத்திக் கொள்ளும் உரிமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.'' என மத்திய அரசை வற்புறுத்தியுள்ளது.

4. மத்திய அரசு, தானே உருவாக்கிச் செயல் படுத்தும் ''மத்தியத் திட்டங்கள்'' (Central Schemes) என்ற தனித் திட்டங்கள் எதுவும் இருக்கக் கூடாது. குறிப்பிட்ட ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தில் வரும் எல்லாத் திட்டங்களும் மாநிலத்தைச் சார்ந்த திட்டங்களாகவே இருக்க வேண்டும் எனவும் அக்குழு கருத்தறிவித்தது.

கற்றறி குழுக்கள் செய்த பல பரிந்துரைகளின் அடிப்படையில் திட்டக் குழுவும் அதன் பணிகளும் செயல்முறையும் பெரும்பாலும் மாற்றியமைக்கப்பட வேண்டு மென்று நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவும் வலியுறுத்திக் கூறிற்று.

ஆனால், மத்திய அரசு அவைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. ஆனால், 1967–ஆம் ஆண்டுத் தேர்தல்களில் காங்கிரஸ் அல்லாத வேறு கட்சிகள் 9 மாநிலங்களில் ஆட்சிக்கு வந்ததால் மத்திய அரசின் 'திட்டமிடுதல்' பற்றிய சர்வாதிகாரமும் முதல்முறையாக ஆட்டம் காணத் தொடங்கியது. மாநிலங்களுக்கு ஒரு சில அதிகாரங்களைத் தருவதற்கு மத்திய அரசு முன் வந்தது.

1969–ஆம் ஆண்டில் நடைபெற்ற, தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எதிர்க் கட்சிகளைச் சார்ந்த மாநில முதல்வர்கள் ''திட்டமிடுதலால்'' ஏற்படும் விளைவுகளைத் தீவிரமாகச் சாடினர். எனவே, ''திட்டமிடுதல்'' பற்றிய சில புதிய முறைகளும் பின்னர் அமுலுக்கு வந்தன.

சில புதிய முடிவுகள்

அ) இந்தியத் தலைமை யமைச்சரும் நிதியமைச்சரும் தவிர, திட்டக் குழுவின் உறுப்பினர்களாக வேறு எந்த மத்திய அமைச்சரும் இருக்கக் கூடாது.

ஆ) திட்டக்குழு ஓர் ஆலோசனைக் குழுவாகவே இயங்க வேண்டும்; நிர்வாகப் பணிகளில் ஈடுபடலாகாது.

இ) நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மத்திய அரசால் தனித்துச் செயல்படுத்தப்படும் 90 மத்தியத் திட்டங்களிலிருந்து (Central Schemes) 52 திட்டங்களாகக் குறைக்கப் பட்டன.

ஈ) தேசிய வளர்ச்சி மன்றத்தால் புதிதாக உருவாக்கப்படும் ஒரு ''துணைக் குழுவின்'' (Sub Committee) ஆலோசனைக்கிணங்கவே மத்திய அரசு, திட்ட நிதி உதவிகளைச் செய்ய வேண்டும்.

உ) மாநிலங்களின் முதலமைச்சர்களால் ஏற்றுக் கொண்டபடி, மாநிலங்களுக் களிக்கப்படும் நிதி உதவிகளை யெல்லாம் ஒட்டு மொத்தமான தொகைகளாகவே (Block grants) கொடுக்க வேண்டும்.

ஊ) நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், மாநிலங்களுக் களிக்கப்படும் மொத்த நிதி உதவிகளில் 60% தொகை, மாநிலங்களின் மக்கள் தொகை அடிப்படையில் தரப்பட வேண்டும். மேலும் 10% தொகை, மாநிலங்களின் வரி முயற்சி, நீர்ப்பாசனம், மின் சக்தித் திட்டங்கள், மாநிலங்களின் தனித் தன்மைகள் ஆகியவைகளின் அடிப்படையில் தரப்பட வேண்டும். மற்றும் 10·/. நிதித் தொகை, அகில இந்தியத் தனி நபர் சராசரி வருமானத்திற்கும் குறைவான தனி நபர் வருமானத்தைக் கொண்ட ஆறு மாநிலங்களுக்கு மட்டும் தரப்பட வேண்டும். அதாவது பீகார், ஒரிசா, கேரளா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், இராசஸ்தான் ஆகிய மாநிலங்கள் மொத்தத் திட்ட உதவிகளில் 10·/. தொகையைத் தனியாகப் பெற்றுக் கொள்ளும்.

எ) 1969 — 1970-ஆம் ஆண்டு முதல், திட்டங்களுக்காக மத்திய அரசால் தரப்படும் மொத்த நிதியுதவியில் 70% தொகை மாநிலங்களுக்குக் கடன்களாகவும் 30% தொகை மானியங்களாகவும் தரப்பட்டு வருகின்றது.

1951-ஆம் ஆண்டு தொடங்கிய ஐந்தாண்டுத் திட்டங்கள் மாநில அதிகாரங்களையும் உரிமைகளையும் பற்றிக் கவலைப்படாமல், மத்திய அரசின் ஒற்றையாட்சி முறையினை, 16 ஆண்டுகள் தொடர்ந்து இந்திய நாட்டில் செயல்படுத்தி வந்தன. மத்திய அரசிலும், மாநில அரசுகளிலும் காங்கிரஸ் கட்சியே தொடர்ந்து பதவியிலிருந்து வந்த அரசியல் விபத்தும், அதற்கு முழு முதல் காரணமாயிற்று.

1967-ஆம் ஆண்டு வரை மாநில அதிகாரங்களைப் பற்றியும் உரிமைகளைப் பற்றியும் குரல் கொடுப்பாருமில்லை; உரிமைப் பிரச்சனையைக் கிளப்புவாருமில்லை. ஆனால் மாநிலங்களி லிருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சியில், முதன் முதலாகக் கீறல் ஏற்பட்டவுடன் அடிமைப்படுத்தப்பட்ட மாநில சுயாட்சியின் முழக்கமும் மேலோங்கி ஒலிக்கலாயிற்று. வல்லாட்சியைக் கொண்ட மத்திய அரசும் தனது எஜமானத்தன்மையை விட்டுக் கீழே இறங்கி வரலாயிற்று. திட்டமிடுதல் துறையில், மாநிலங் களுக்கு முதல் வெற்றியும் கிடைக்கலாயிற்று.

ஆனால் அது முழுமையான வெற்றி யல்ல. 1971-ஆம் ஆண்டில் மீண்டும் காங்கிரசுக் கட்சி, தமிழகத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் அரசுப் பொறுப்பை ஏற்றவுடன் தலைமையமைச் சர் இந்திரா காந்தியாரின் வல்லாட்சியில் மாநிலங்கள், மீண் டும் அடிமைப் படுத்தப்படுகின்றன. திட்டமிடுதலின் தன்மை, திட்ட விவாதங்கள் மற்றும் முறைகள் ஆகியவை மீண்டும் பின்னணிக்குத் தள்ளப்பட்டு விட்டன.

பழையபடி மாநிலங்கள் தம் உரிமைக்குக் குரல் கொடுக் கின்றன. திட்டக் குழுவும் திட்டமுறைகளும் மீண்டும் புதுப் பிக்கப்பட வில்லை. தேசிய வளர்ச்சி மன்றம் மீண்டும் காங்கிரஸ் கட்சியின் ஒரு துணை அமைப்பைப் போன்று இயங்கத் தொடங்கி விட்டது.

11. மாநில சுயாட்சியின் போர்க் குரல்

மாநில சுயாட்சிக்குப் போராடும் — ஒரு குரல் — வலிமை யான குரல்-தேசிய வளர்ச்சி மன்றத்தில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. அந்த ஓர் எதிர்ப்புக் குரல், நாட்டின் கவனத்தையும் மத்திய அரசின் காதுகளையும் தன் பக்கம் ஈர்க்கின்றது. அக்குரல்தான் தமிழகத்தின் தனிப் பெருங் குரல்—மாநில சுயாட்சியை மீண்டும் நிலை நிறுத்தும் குரல்—தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குரல்.

1973-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ஆம் நாள் புது டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய பொது விவாதம் நடந்த போது, மாநில சுயாட்சியின் குரலான டாக்டர் கலைஞர் அவர்களின் குரல் ஓங்கி ஒலிக்கலாயிற்று.

"..........வருவாய் வாயில்கள் குறைவாயிருப்பதால், மின் சக்தி போன்ற முக்கியமான திட்டங்களில், செலவுகள் குறைக் கப்பட வேண்டியிருக்கிற தெனவும், மாநிலத் திட்டங்களும் குறைக்கப்பட வேண்டியிருக்கிறது எனவும் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் 'வேளாண்மை', 'கல்வி', 'சுகாதாரம்' போன்ற துறைகளுக்காக, மத்திய அரசுத் துறையில் ஏராள மான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண்மையைப் பொறுத்த வரையில் மொத்த நிதி ஒதுக்கீடான 4730 கோடி ரூபாயில் 40% தொகை அதாவது 1946 கோடி ரூபாய் மத்தியத் துறை யில் ஒதுக்கப்பட்டுத் திட்டமிடப் பட்டுள்ளது. ஆனால் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்த நிதி ஒதுக்கீடான 690 கோடி ரூபாயில் 16 % அதாவது, 110 கோடி ரூபாய் தான் மத்தியத் துறைக்கு ஒதுக்கப் பட்டது. வேளாண்மை என்பது மாநிலப் பட்டியலில் உள்ளதாகும். இவ்வகையில், மத்தியத் துறையில் நிதி ஒதுக்கீடு பெருகி யிருப்பது ஏனென்று விளங்க வில்லை. இதைப் போலவே, கல்வியிலும் மொத்தம் 1,700 கோடி ரூபாயில் 500 கோடி ரூபாய் மத்தியத் துறையில் ஒதுக்கப் பட்டுள்ளது. சுகாதாரம் போன்ற துறைக்கு மொத்தம் நிதி ஒதுக்கியதில் 30 % அல்லது 250 கோடி ரூபாய் ஏன் மத்தியத் துறைக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்றும் எனக்குப் புரிய

வில்லை. திட்டமிடும் நடைமுறையில், மாநில அரசுகளும் மத்தியத் திட்டக்குழுவும், ஒப்புறவுடன் இணைந்து பணியாற்றும் போது, மாநில அரசின் பொறுப்புக்குக் கீழுள்ள துறைகளில் மத்திய அரசின் திட்டங்களும் ஏன் இருக்க வேண்டுமென்று எனக்குத் தெரிய வில்லை. இந்தத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் மாநில அரசுத் திட்டங்களுக்கு மாற்றப்பட வேண்டும். மாநில அரசுத் திட்டங்களாக இருக்கும் பணிகளில் மத்திய அரசுத் திட்டங்கள் என்று எதுவும் இருக்கக் கூடாதென்றும் நான் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூற விழைகிறேன்............ மத்தியத் துறை, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை வளர வளர, காலப்போக்கில் இரட்டை ஆட்சி நிலை மேலும் மோசமாகி யுள்ளது.........தேசிய ஒருமைப்பாடு — தேசிய ஒற்றுமை என்பதற்கு முழுமையான பொருளிருக்க வேண்டுமேயானால், மத்திய நிதியுதவி, அதன் வகையில் மட்டுமின்றிப் பல்வேறு மத்தியத் திட்டங்களில் செயல்படும் முதலீட்டு வகையிலும், நியாயமான அளவிற்கு நிதி பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்."

திட்டமிடுதல் பற்றிய அடிப்படைக் கோளாறுகளைக் கோடிட்டுக் காட்டுகிறது கலைஞரின் மாநில சுயாட்சிக் குரல்.

வல்லுநர்கள் கருத்துக்களும் வழிவகைகளும்

பழம்பெரும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், கேரள மாநில ஆளுநராக இருந்தவருமான திரு. அஜித் பிரசாத் ஜெயின் (AJID PRASAD JAIN) அவர்கள் "திட்டமிடுதலால்" மாநில சுயாட்சி எவ்வகையில் பறிபோயிற்று என்பதனைக் கீழ்க்கண்ட வரிகளில் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்,

> "திட்டமிடுதலைப் பற்றிய அரசமைப்புச் சட்ட விதிகளும் சட்டப் பிரிவுகளும், இல்லாத காரணத்தினால் மாநிலங்களில் கையறுநிலை உருவாகிவிட்டது. மாநிலங்களின் நிதிவருவாய்களிலிருந்து கிடைக்கும் அதிகப்படியான தொகைகளும், ரிசர்வு வங்கியின் அங்கீகாரத்தோடு மாநிலங்கள் வெளியிலிருந்து பெறக்கூடிய கடன் தொகைகளும் சேர்ந்து, திட்டச் செலவினுடைய ஒரு சிறு பகுதிக்காக மட்டுமே பயன்பட்டிருக்கின்றன. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் போதும் மாநிலங்களுடைய திட்டச் செலவின் மொத்தத் தொகையில் 3/5 பங்குத் தொகை, மத்திய அரசிடமிருந்து கடன்களாகவும் மானியங்களாகவும் பெறப்பட்டுள்ளன"[12]

12 "Union-State Relationship" in "The Union and the States" (1972), Edited by S. N Jain. P. 261.

''திட்ட முடிவுகளை எடுக்கும் போது சமஉரிமை பெற்ற பங்காளியைப் போல் மாநிலங்கள் நடத்தப்பட வில்லை. அவை கெஞ்சிக் கேட்கிற கீழ் நிலையிலுள்ளவர்களைப் போலவே ஆக்கப்பட்டு விட்டன.'' 13

மத்திய அரசு மாநில சுயாட்சி உரிமைகளைத் திட்டக்குழு வின் மூலமாகப் பெரும்பாலும் அழித்து விட்டாலும்கூட, மாநிலங்கள் மீண்டும் தன்னுட்சியைப் பெறுவதற்குரிய வழி வகைகளை, திரு. ஏ. பி. ஜெயின் அவர்கள் கீழ்க் கண்ட வரி களில் கூறுகிருர்கள்:

''சுருங்கக் கூறினுல், மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கு மிடையிலான திட்டங்களின் பிரிவினை, அரசமைப்புச் சட் டத்தால் மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கும் வழங்கப் பட்ட அதிகாரப் பிரிவினையையே அனுசரித்துச் செல்ல வேண்டும். அஃதாவது, மத்தியப் பட்டியலில் சொல்லப்பட்ட அதிகாரங்களில் வரும் திட்டங்கள் மத்திய அரசின் செயல் எல்லைக்குள் இருத்தல் வேண்டும். மாநிலப் பட்டியலில் கூறப்பட்ட அதிகார எல்லைக்குள் வரும் திட்டங்களும் பொதுப்பட்டியலில் சொல்லப்பட்ட அதிகார இனங்களில் வரும் திட்டங்களும், மாநில அரசிற்கே தனித்தொதுக்கப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் மாநிலங்களிடமே இருக்க வேண்டுமென்று கருதிய சில அதிகாரங்களில், மத்திய அரசு ஆக்கிரமிப்புச் செய்து கொள்வதற்குரிய ஒரு கருவியாகப் பொதுப் பட்டியலின் 20-ஆம் பிரிவான சமுதாய, பொருளாதாரத் திட்டமிடுதல் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது. மாநிலங்கள் விரும்பி ஏற்காத சில மாநிலத் திட்டங்களை ஏற்றுக் கொள்ளுமாறு பலவந்தப் படுத்துவதற்கு மத்திய அரசின் நிதி அதிகாரங்களை ஒரு கருவியாகப் பயன் படுத்துவதற் கும் அனுமதிக்கக் கூடாது.''14

---

13 Ibid, Opp. Cited, Note 10 P. 262

14 Ibid, Opp. Cited, Note. 10. P. 263

மூன்றும் நிதி ஆணைக் குழுத் தலைவராயிருந்த உயர்திரு. அசோக் சந்தா அவர்கள் திட்டமிடுதல் இனி எவ்வகையில் இயங்க வேண்டு மென்பதைக் கூறும் போது,

"பிராந்தியத் திட்டங்களுக்கும் தேசியத் திட்டத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டினைத்தெளிவு படுத்துவது நல்லது. மாநிலங்களின் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் ஆய்வு செய்த பின்னர், திட்டக் குழுவால் தேசியத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். வட்டாரத் திட்டங்களை அந்தந்த மாநிலங்களே தீட்டிக் கொள்ளும் வகையில், விட்டுவிட வேண்டும். ஒவ்வொரு மாநிலமும், தனக்குள்ள தனித் தேவைகளை ஒட்டியும், சுற்றுச் சார்புகள் மற்றும் மத்திய அரசிடமிருந்து நியாயமாக மாநிலங்கள் எதிர்பார்க்கும் நிதி உதவிப் பங்கு ஆகியவைகளை அனுசரித்தும், மத்திய நிதி உதவிகளைப் பயன் பெறத்தக்க முறையில் உபயோகப்படுத்தக் கூடிய மாநிலங்களது திறமையை அனுசரிக்கும் வகையிலும், (மாநிலத்) திட்டங்கள் தீட்டப்படுவதை மாநிலங்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். மாநிலங்களின்பால் திட்டக் குழு கொண்டிருக்கும் போக்கினை மாற்றிக் கொள்ள வேண்டும். தேசியத் திட்டங்களை உருவாக்குவதில் மாநிலங்களும் பங்கு பெறுகின்றன என்றும் அந்தத் திட்டங்கள் வெற்றி யடைவதற்கு மாநிலங்களும் காரணமா யிருந்தன என்றும், மாநிலங்கள் உணரக் கூடிய வகையில் திட்டக்குழு, தனது தன்மையை மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும். தேசிய முயற்சிகளில் தாங்களும் உரிய பங்கைச் செலுத்துகிறோம் என்ற உணர்வை மாநிலங்களுக்கு ஏற்படுத்துவதற்காக அரசியல், பொருளாதார உறவுகளைச் சரிக்கட்டிக் கொள்ள வேண்டும்; அப்போது தான் தற்போதுள்ள பிரிவினைச் சக்திகள் தடுக்கப்படும். மாநிலங்களுக்கு நாட்டைப் பற்றிய குறிக்கோளும் நெறிமுறையும் உருவாகும்." 15

எனத் தெளிவாக்குகிறார்.

மாநில சுயாட்சி பற்றியும் இராசமன்னார் குழுவின் மத்திய-மாநில உறவு பற்றிய அறிக்கை பற்றியும் ஆய்வு செய்த தமிழக அரசு,

"திட்டக் குழுவானது, மத்திய நிர்வாகத்தின் கட்டுப் பாட்டிலோ அல்லது அரசியல் கட்சி சார்புள்ளதாகவோ இல்லாமல், சுதந்திரமாகச் செயல்படும் ஓர் அமைப்பாக

15 "Financial Aspect of Union - State Relations" in Ibid, Opp. Cited, Note 10. P. 256

இருக்க வேண்டும். இந்த நோக்கத்தினை எய்த, திட்டக் குழுவை நிறுவுவதற்கு வகை செய்யும் சட்டம் நாடாளு மன்றத்தில் இயற்றப்பட்டு, அது சட்டப்படி அமைதல் வேண்டும்.''

''சட்டப்படி அமைக்கப்படும் திட்டக் குழுவில் பொருளாதார, அறிவியல், தொழில் நுட்ப மற்றும் வேளாண்மைத் துறை வல்லுனர்களும் பிறவகைத் தேசியப் பணியைச் சார்ந்த வல் லுனர்களும் மட்டுமே இடம் பெற வேண்டும். இந்திய அரசைச் சேர்ந்த அமைச்சர் எவரும் அதில் இடம் பெற லாகாது. இது தொடர்பாக இயற்றப்பட விருக்கும் சட்டத் தில், திட்ட ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம், பணி நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்படல் வேண்டும். இந்தத் திட்ட ஆணைக் குழுவிற் கென்று தனியே ஒரு செயலகம் இருத்தல் வேண்டும். தற்போதுள்ள திட்ட ஆணைக் குழு கலைக்கப்பட வேண்டும்.''

''திட்ட ஆணைக் குழுவின் பணி, மாநிலங்கள் உருவாக்கும் திட்டங்கள் குறித்து அறிவுரை வழங்குவதாக இருத்தல் வேண்டும்.''

''மாநிலங்களால் அல்லது மாநிலங்களில் தொடங்கப்படும் தொழில் திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு அன்னியச் செலாவணி வழங்குவது தொடர்பாக நிதி ஆணைக்குழு வினால் பரிசீலிக்கப்படுவதற்குப் பரிந்துரைகள் செய்ய வேண் டியதும் இதன் பொறுப்பாகவே இருக்கும். நிதி ஆணைக் குழு, மானியங்களுக்குப் பரிந்துரை செய்கையில் திட்ட ஆணைக் குழுவின் பரிந்துரைகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்.''

''ஒவ்வொரு மாநிலமும் தனக்கென ஒரு திட்ட வாரியத்தை அமைத்துக் கொள்ளலாம்.'' 16

எனக் கருத்துரை வழங்குகிறது.

16 தமிழ்நாடு அரசின் கருத்துரைகள் (1974) பக்கம் 10.

12. மத்திய மானியம் — மீளா நச்சு வட்டம்

"திட்டங்களுக்காகத் தரப்படும் நிதி உதவிகளில், விருப்ப மானியங்கள் மூலமாகத் தரப்படும் தொகைகளே மிகப் பெரும் பங்கை வகிக்கின்றன. அவ்வகை மிகப் பெரிய விருப்ப மானியங்கள் தான் திட்டக் குழுவிடமும் மத்திய அமைச்சகங்களிடமும் ஏராளமான அதிகாரங்களைத் தேக்கி வைத்து விடுகின்றன." 17

— அரசமைப்பு வல்லுனர், அமல்ரே.

சென்ற 24 ஆண்டுகளில், மத்திய-மாநில உறவுகளை மிக அதிகமாகப் பாதிக்கக் கூடிய இரு வகையான நிதி பற்றிய நடைமுறைகள் மேலோங்கி வளர்ச்சி யுற்றிருப்பதை நாம் காணலாம். அவ்விருவகையான நிதி சார்ந்த நடைமுறைகளை அரசியல் அமைப்புச் சட்டம் கூட உருவாக்க வில்லை. எனினும் மத்திய அரசு, அரசியல் சட்ட அமைப்பில் வழங்கப்பட்டுள்ள எல்லா அதிகாரங்களும் போதாது என்று கருதி மாநிலங்களை முழுமையாக அடிமை கொள்வதற்காக, சட்ட நிலையை மீறிய இந்த இரு வகை ஏற்பாடுகளையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மத்திய-மாநில நிதி ஏற்பாடுகளுக்கு முரணாக அரசமைப்புச்சட்டவிதி 282-ஐத் திரித்துப் பயன் படுத்தி மத்திய அரசு, தனக்கு வேண்டிய மாநிலங்களுக்கு, தான் விரும்பும்போது தனது விருப்பமான மிகப் பெரிய தொகைகளை "விருப்ப மானியங்கள்" (Discretionary Grants) என்ற பெயரால் வழங்கி வருகிறது. இதனால் மாநிலங்களின் நிதி நிலைகள் நிலையானவையா யிருப்பதில்லை.

அரசமைப்புச் சட்டவிதி 293-இன் மூலம் மத்திய அரசு மாநிலங்களுக்குக் கொடுக்கக் கூடிய இன்னொரு நிதி ஏற்பாடே "கடன் உதவி" ஆகும்.

---

17 "Inter Governmental Relations in India" (1966) by Amalray, P 120.

“விருப்ப மானியங்கள்” மற்றும் “கடன் உதவி” என்ற இவ்விரு வகையான நிதி சார்ந்த நடைமுறைகளும் “திட்ட மிடுதலால்” ஏற்பட்ட விளைவுகளாகும்.

இந்நூலின் மூன்றும் பகுதியில் 14-ஆம் அத்தியாயத்தில் மாநிலங்களுக்கு நிதி ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசால் ‘உதவி மானியங்கள்’ அளிக்கப்படுவதைப் பற்றிப் பார்த்தோம். உதவி மானியங்களைக் கொடுப்பதற்கு, நிதி ஆணைக் குழுவும் (Finance Commission) அது பற்றிய அரசமைப்பு விதிகளும் உண்டு. ஆனால் “விருப்ப மானியங் களைக்”கொடுப்பதற்குச் சட்ட முகாந்திரம் எதுவும் முறையாக ஏற்படுத்தப்பட வில்லை. மேலும் இவை நிதி ஆணைக்குழுவின் அதிகாரத்திற்குட் பட்டது மல்ல.

ஐந்தாண்டுத் திட்டங்களில் பொதுவாக மத்திய அரசின் உதவியினால் நிறைவேற்றப்படக் கூடிய திட்டங்களுக்கும் மத்திய அரசால் தனித்து மேற்கொள்ளப் படக் கூடிய சில குறிப்பிட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன் படுத்துவதற்காக மத்திய அரசால் மாநிலங்களுக்கு “ விருப்ப மானியங்கள் ” அளிக்கப் படுகின்றன.

ஆனால் அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்ட எந்த சட்டவிதியின் அடிப்படையிலும் அந்த “விருப்ப மானியங்கள்” வழங்கப்படுவ தில்லை. எனவே, மாநிலங்கள் அத்திட்டங்களைக் கட்டாயமாக நிறைவேற்றித் தீர வேண்டிய அவசியமும் இல்லை.

பலவகையான கட்டுப்பாடுகளையும் செயல்முறைச் சிக்கல் களையும் அந்த விருப்பு மானியங்கள் மூலமாக மத்திய அரசு மாநிலங்களின் மேல் திணிக்கின்றது. மத்திய அரசு கொடுக்கும் விருப்ப மானியங்கள் மூலமாகச் செயல் படுத்தப்படும் மாநிலத் திட்டங்களை, மத்திய அரசு மேற்பார்வை யிடுவதாலும் அதன் மூலமாக மாநில அரசுகளின் மேல் ஏராளமான கட்டுப்பாடுகளை அது விதிப்பதாலும் பொதுவாக இவ்வகை விருப்ப மானியங் களை மாநிலங்கள் விரும்புவ தில்லை. ஆனால் மாநிலங்கள் நிதிப் பற்றுக்குறையைக் கொண்டிருக்கும் காரணத்தினால், ஏதோ ஒரு வகையில் சில திட்டங்கள் மாநிலங்களில் நிறைவேறி நடக்கட்டும் என்ற ஆவலினால் உந்தப்பட்டு, மத்திய அரசு கொடுக்கும் வேண்டாத “விருப்ப மானியங்களை” மாநில அரசு கள், கையறு நிலையில் பெற்றுக் கொண்டு, அதன் வழி மத்திய அரசின் மேலாட்சியையும் தம் மீது வலிந்து ஏற்றுக் கொள் கின்றன.

மாநிலத்தின் போருத நிதி மூலங்கள் (Finance Resources) மாநில சுயாட்சியினை நெருக்கிச் சுருக்கிக் கட்டுப்படுத்துகின்ற தென்றால், மத்திய அரசால் வழங்கப்படும் "விருப்ப மானியங்கள்" மாநிலங்களின் கழுத்தில் வலிமையான சுருக்குக் கயிற்றை மாநிலங்களே விரும்பி மாட்டிக்கொள்வதற்குண்டான வழி வகையினைச் செய்து விடுகின்றன. அது பற்றிக் கீழே பார்ப்போம்.

மத்திய அரசின் சட்டத் திரிபும் ஒற்றை ஆட்சி மரபும்

சட்டவிதி 282:- "மத்திய அரசு அல்லது ஒரு மாநிலம் ஒரு பொதுக் காரியத்திற்காக எந்த மானியத்தையும் வழங்கலாம். அந்தப் பொதுக்காரியம் பற்றி நாடாளு மன்றமோ அல்லது மாநிலச் சட்ட மன்றமோ சட்டங்கள் செய்ய முடியாத நிலையில் கூட அவைகளுக்காக மத்திய அரசும், மாநிலங்களும் மானியங்களை வழங்கலாம்."

இந்தச் சட்டவிதி ஒரு மிஞ்சி நிற்கும் சட்டவிதி (Residuary Article) ஆகும். மத்திய-மாநிலங்களுக்கிடையில் நிதித்துறைகளில் ஏற்படக்கூடிய பல வகையான நடைமுறைப் பரிகாரங்களை வழங்குவதற்காக, இந்தச் சட்டவிதி உருவாக்கப்படவில்லை. அப்படி ஒரு கருத்துடன் இந்தச் சட்டவிதி இயற்றப் பட்டிருந்தால், அரசமைப்புச் சட்டத்தில் வரும் மிகச் சிக்கல் வாய்ந்த மத்திய-மாநில நிதி உறவுகளைப் பற்றிய வேறு சட்ட விதிகள் அரசமைப்பில் இடம் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை.

மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் எதிர்பாராமல் ஏற்படக் கூடிய சில வருவாய் மற்றும் செலவினங்களை நேர் செய்து கொள்வதற்காக மட்டுமே இந்தச்சட்டவிதி உருவாக்கப் பட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்படுவதற்கு முன்னால் சில வகையான நிதி மானியங்களை 1947-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை, "உணவு உற்பத்தித் திட்டம்" மற்றும் சில குறிப்பிட்டுச் சொல்லப் படாத திட்டங்களுக்கான மானியங்களை வழங்குவதற்காகவே இந்தச் சட்டவிதி பயன் படுத்தப்பட்டது. ஆனால் தற்போது 282-ஆம் சட்டவிதியின்

நோக்கத்தைத் திரித்து, மத்திய அரசு, ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக இதனை அறுதியிட்ட ஒரு சட்ட விதியாகக் கையாளுகிறது.

அரசியலமைப்புச் சட்டப்படி மத்திய அரசிற்கு வழங்கப்படாத ஓர் உரிமையை இச்சட்டவிதியின் மூலம் மத்திய அரசு இருப்பதாக மாற்றிக் கொண்டு அதனைத் திரித்துச் செயல் படுகிறது. இச்சட்ட விதியை மாற்றிப் பயன்படுத்தி மாநில சுயாட்சியின் ஆணி வேரையே மத்திய அரசு வெட்டி யெறிகின்றது. நமது அரசமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட மத்திய-மாநில நிதி உறவை இச்சட்ட விதியின் திரித்த செயல் முறை இன்னும் சிக்கலாக ஆக்குவதோடு மத்திய அரசிற்கு ஓர் அடிப்படையான நிதி அதிகாரமாகவும் அது பயன்படுகிறது. கூட்டாட்சி நாட்டின் நிதி முறைக்கு எதிரான ஒற்றை ஆட்சி முறையை, இச்சட்ட விதி மூலமாக மத்திய அரசு மாநிலங்களின் மேல் திணித்து விட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

மேற்சொன்ன 282–ஆம் சட்ட விதியின் மூலம் மாநிலங்களுக்கு வழங்கப்படும் மானியங்களை "மத்திய அரசின் அடிமைத்தளை மானியங்கள்" என்று கூடக் கூறலாம். ஏனெனில் எந்த ஒரு நிதி மானியத்தையும் மத்திய அரசு, மாநிலங்களுக்கு வழங்க வேண்டுமெனில், அது பற்றி முதலில் நாடாளுமன்றம் ஆய்வு செய்ய வேண்டும். சான்றாக நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கும் உதவி மானியங்களை மாநிலங்கள் பெறுவதற்கு முன்னர் நாடாளுமன்றம் அனுமதி யளிக்கிறது. ஆனால், இந்தச் சட்டவிதி மூலம் அளிக்கப்படும் விருப்ப மானியங்களுக்கு நாடாளுமன்றச் சட்டமோ அல்லது வேறு வகையான சட்ட அனுமதியோ தேவை யில்லை. மத்திய நிதி நிலை அறிக்கையில் (Central Budget) "விருப்ப மானியம் வழங்கப் பட்டது" எனக் கண்டிருந்தால் கூடப் போதுமானது. மத்திய அரசு இந்த விருப்ப மானியங்களை எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் எப்போது விரும்பினாலும் வாரி வழங்கலாம். எனவே, சட்ட மூலமில்லாத 'விருப்ப மானியங்களை' மத்திய அரசின் 'அடிமைத்தளை மானியங்கள்' என ஏன் நாம் அழைக்கக் கூடாது?

நமது அரசமைப்புச் சட்டத்தில் செய்யப் பட்டிருக்கும் எல்லா நிதி ஏற்பாடுகளையும் அடிப்படையாக வைத்து மத்திய அரசு, மாநிலங்களுக்கு வழங்கக் கூடிய எல்லா நிதியையும்

ஒன்று சேர்த்துக் கணக்கிட்டால் எத்துணைத் தொகை வருமோ, அந்தத் தொகையினைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான தொகைகளை மத்திய அரசு, தான் விரும்பும் மாநிலங்களுக்கு "விருப்ப மானியங்களாகத்" தருகின்றது. ஐந்தாண்டுத் திட்டங்களுக்குத் தேவையான தெனக் காட்டி, சென்ற 24 ஆண்டுகளுக்கு மேலாக மத்திய அரசு நமது அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக, விருப்ப மானியங்கள் தரும் முறையை அமுல் படுத்தி ஒற்றை ஆட்சி முறையை நடைமுறையில் உருவாக்கி வைத்து விட்டது.

ஓரவஞ்சனையும் கொருக்கும்

ஐந்தாண்டுத் திட்டங்களில் மாநிலங்களின் பங்கை நிறைவேற்றுவதற்காக எல்லா "மூலதன மானியங்களையும்" (Capital Grants) "பொதுக் காரியம்" என்ற பெயரால் விருப்ப மானியங்கள் மூலமாகவே மத்திய அரசு மாநிலங்களுக்குத் தருகின்றது என்பதைப் பார்த்தோம். அதற்குரிய பரிந்துரையைச் செய்வது 'திட்டக்குழு'.

ஆனல் "திட்டக்குழு" என்பது "நிதி ஆணைக்குழு"வைப் போல் நீதி தவருக்குழு எனச் சொல்ல முடியாது. அது மத்திய அரசினுடைய ஒரு பகுதியாகும். திட்டக்குழு செய்கின்ற பரிந்துரைகளின் பேரிலேயே மத்திய அரசினுடைய பல அமைச்சகங்களும் இந்த விருப்பு மானியங்களை மாநிலங்களுக்கு அளிக்கின்றன. எனவே மாநிலத்திற்கு மாநிலம் வழங்கப்படும் இந்த விருப்ப மானியங்களில் மத்திய அரசின் ஓரவஞ்சனையும் தொக்கி நிற்கும் என்பது கண்கூடு.

பொதுவாக விருப்ப மானியங்கள் யாவும் பங்கீட்டு மானிய (Matching Grants) வகையைச் சார்ந்தவை. அதாவது எந்த அளவிற்குப் பங்கீட்டு மானியத் தொகை மத்திய அரசால் கொடுக்கப்படுகிறதோ அந்தத் தொகைக்கு இணையாகவோ அல்லது அதன் ஒரு பங்கினையோ மாநிலங்களும் தர வேண்டும். எனவே, விருப்பு மானியங்களைப் பெறக்கூடிய மாநிலங்கள் தன்னுடைய நிதியிலிருந்து ஒரு பகுதித் தொகையை அல்லது சரிசமமான தொகையைக் கொடுத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதனல் வறிய மாநிலங்கள் திட்டத்தின் ஆசையால் உந்தப்பட்டுத் தமது குறைந்த நிதித் தொகையிலிருந்து ஒரு பகுதியைக் கொடுத்து விட்டு, அதனைச் சரிக்கட்டிக் கொள்ள முடியாமல் கடன் படுகிறது.

மத்திய அரசின் கட்டுப்பாடுகள் என்ற 'கொடுக்கோடு' சேர்த்தே விருப்ப மானியங்கள் அளிக்கப்படுகின்றன. எனவே, விருப்ப மானியங்களைப் பெறக் கூடிய மாநில அரசுகளின் மேல் மத்திய அரசு, பல கட்டுப்பாடுகளை விதிப்பதுடன் அத்திட்டத்தைத் தானே மேற்பார்வையிடுவதன் மூலமாக மாநில அரசுகளைத் தன்னுரிமை இழக்க வைக்கின்றது. ஆக, விருப்ப மானியத்துடன் மத்திய அரசின் 'கொடுக்கும்' இணைக்கப் பட்டுள்ளதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இந்த வகை மானியங்கள் ஒரு மாநிலத்திற்கு வழங்கப் படுவற்கு முன்னுல் மாநில அரசிற்கும் திட்டக் குழுவிற்கும் மத்திய இலாக்காக்களும் இடையே விரிவான விவாதங்கள் நடைபெறுகின்றன. அந்த விவாதங்களில் எடுக்கப்படும் முடிவு களுக்கும் மத்தியக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டே மாநிலங்கள் விருப்ப மானியத்தைப் பெறுவதால், விருப்ப மானியங்கள் மாநில சுயாட்சிக்கு மறைமுகமாகக் குந்தகம் விளைவிக்கின்றது. அஃதாவது 'விருப்ப மானியங்கள்' என்ற பிச்சைக் காசிற் காக மாநிலங்கள் அரசியல் சட்டத்தால் அளிக்கப்பட்ட தமது உரிமைகளை மன மறிந்து அடகு வைத்து விடுகின்றன.

நச்சு வட்டம்

ஓர் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு மட்டும் அதாவது குறிப்பிட்ட ஐந்தாண்டுகளுக்காக மட்டும் தனிப்பட்ட விருப்ப மானியங்கள் தரப்படுகின்றன. திட்ட கால முடிவில் அந்த விருப்ப மானியத்தை மாநிலங்கள் செலவழித்து விடுகின்றன. ஆனல், அந்தச் செலவிற்கு மாநிலமே பொறுப்பாகி, கடனுளி யாகி விடுகிறது. இந்தக் கடனைக் காட்டி உதவி மானியம் வேண்டுமென நிதி ஆணைக்குழுவினை அந்த மாநிலம் நாடுகிறது. தானுகவே ஏற்படுத்திக் கொண்ட விரும்பாத ஒரு கடனைத் தீர்ப்பதற்காக (நிதி ஆணைக்குழு நியாயமாகக் கொடுத்து) வேறு வித உதவி மானியத் தொகையை அந்த மாநிலம் உப யோகிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகிறது இவ்வகை யில் வேண்டாத ஒரு திட்டத்திற்கான விருப்ப மானியத்தை மாநிலங்கள் தம் நிதிப் பற்ருக்குறை காரணமாகப் பெற்றுக் கொண்டு, பின்னர் அதனை மத்திய அரசின் மேற்பார்வை யுடனும் அதனுடைய விருப்பத்திற்கு இணங்கவும் செலவழித்து அந்தக் குறிப்பிட்ட திட்டத்தை நிறைவேற்றி விட்டு, செல வழித்த தொகையை ஈடுகட்டிக் கொள்வதற்காக நிதி ஆணைக் குழு வழங்கும் உதவித் தொகையைக் கூட இழந்து விட்டு,

மீளா ஒரு நச்சு வட்டத்திற்குள் சிக்கிக் கொள்ளுகின்றன— வட்டிக்கடை மார்வாடியிடம் ஏழை விவசாயி மீளாமல் சிக்கிக் கொள்வதைப் போல்.

மாநில அதிகார எல்லைக்குள் — மாநிலப் பட்டியலில் கண்டுள்ள — சில அதிகார இனங்களைச் சார்ந்த திட்டங்களுக் காகவே விருப்ப மானியத் தொகைகளை மத்திய அரசு வழங்கு கிறது. அரசமைப்பின் மாநில அதிகாரப் பட்டியல்படி, அத் திட்டங்களைப் போடுவதும் செயல்படுத்துவதும் நிறைவேற்று வதும் முழுக்க முழுக்க மாநில அரசினுடைய அதிகார உரிமை யாகும்.

ஆனால், உண்மையில் நடைபெறுவதென்ன?

மாநில அதிகாரத்திற்குட்பட்ட திட்டத்தை நிறைவேற்று வதற்காக விருப்ப மானியத்தை மத்திய அரசு கொடுக்கும் போதே, பல கட்டுப்பாடுகளையும் கொடுக்கினையும் அதனுடன் சேர்த்து அளித்து விடுகிறது. மானியத் தொகையை வழங்குவ தால் அத் திட்டத்தை மேற்பார்வை யிடுவதற்காகவும் தன் விருப்பத்திற்கு அதனைச் செயல் படுத்துவதற்காகவும் மாநிலங் களின் மேல் மத்திய அரசு கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. மாநில அரசு வேறு வழியின்றித் தன்னையும் அறியாமல் அந்த மத்தியக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு விடுகிறது.

தனது எல்லைக்குட்பட்ட அதிகாரக் கதவை மத்திய அரசின் வருகைக்காக, மாநில அரசே திறந்து வைத்து, அதற்கடிமை யாவதற்காகத் தானே நடை பாவாடையும் விரித்து வைக் கிறது. இப்படி அரசமைப்புச் சட்டத்தாலளிக்கப்பட்ட தனது அதிகாரங்களை - தன்னுரிமைகளை - விருப்ப மானியத்திற் காக மாநிலங்களே விட்டுக் கொடுத்து, மத்திய அரசிற்குத் தம்மைத் தாமே அடிமைப்படுத்திக் கொள்கின்றன.

மகத்தான ஆயுதம்

மேற்சொன்ன வகையில் மாநிலங்கள், தம் கண்களைத் தாமே குத்திக் கொள்வதற்கு மத்திய அரசின் விருப்ப மானியங் கள் பயன் படுகின்றன. இக் கொடுமையைப் பல வல்லுநர் களும் பொருளாதார மேதைகளும் கண்டனம் செய்துள்ளனர்.

சில குறிப்பிட்ட காரியங்களுக்காக மத்திய அரசு விருப்ப மானியங்களைக் கொடுக்கக் கூடாதென்றும், ஒரு மாநிலத்தின் நிதிப் பற்றுக் குறையைத் தீர்க்கக் கூடிய மானியங்களைப் பற்றி நிதி ஆணைக்குழுவே தீர்மானித்து சிபாரிசு செய்ய வேண்டுமென்றும், திட்டச் செலவிற்காக என்று விருப்ப மானியங்கள் தரப்படும் முறையினை முற்றிலும் மாற்றி யமைக்க வேண்டுமென்றும், இந்த நல்ல நோக்கங்கள் நிறைவேறுவதற்காகத் திட்டக்குழுவையே நிர்வாக ஆணைக்குழுவுடன் இணைத்து விட்டால் மாநிலங்களுக்கு ஓரவஞ்சனை ஏற்படாமல் நியாயமான திட்டத் தொகைகளும் மானியங்களும் கிடைக்க ஏதுவாகுமென்றும் மூன்றும் நிதி ஆணைக்குழு வலியுறுத்திப் பரிந்துரை செய்தது.

ஆனல், விருப்ப மானிய முறை ஒழிக்கப்பட்டால் மத்திய அரசினுடைய செல்வாக்கும் எஜமானத் தன்மையும் பழுது பட்டுவிடும் அல்லவா? எனவே, மூன்றும் நிதி ஆணைக்குழுவின் அந்தப் பரிந்துரைகளை, மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

மாநிலங்களை அடிமைப் படுத்தி, அவைகளின் மிடிமையையும் நீங்காத நிதிப் பற்றுக் குறையையும் பயன் படுத்திக் கொண்டு, மாநிலங்களை நிதி அடிமைத்தனம் என்ற நச்சு வட்டத்தினுள்ளிருந்து வெளியேற விடாமல் செய்து, தனது எதேச்சாதிகார ஆதிக்கத்தை மாநிலங்களின் மேல் நிரந்தரமாக நிலை நிறுத்திக் கொள்வதற்கு வகை செய்யும் விருப்ப மானியக் குறுக்கு வழியை மத்திய அரசு கைவிடத் தயாராக இல்லை. நிதித் துறையிலும் சட்டம் இயற்றும் துறையிலும் நிர்வாகத்திலும், மாநிலங்களை இந்தக் குறுக்கு வழி நிதி ஏற்பாட்டின் மூலம் மடக்குவதற்கும், தனது கட்டுப்பாட்டினுள் மாநில அரசுகளை வைத்துக் கொள்வதற்கும், தனது விருப்பப்படி ஆட்டுவிப்பதற்கும் மத்திய அரசு "திட்டமிடுதலையும்" அதற்காக "விருப்ப மானியங்களை" வழங்குதலையும் தனது மகத்தான ஆயுதங்களாகப் பயன் படுத்துகிறது.

பேரறிஞர் அண்ணு அவர்கள் இதனை மாநிலங்களை ஆட்டிப் படைக்கும் "மத்திய அரசின் சாட்டை" எனக் குறிப்பிடுகிருர்.

1967–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 6–ஆம் நாளில் தமிழக அரசின் முதலமைச்சராகப் பொறுப்பெற்றுக் கொண்ட அறிஞர் அண்ணு அவர்கள் திருத்தி அமைத்த தனது முதல் வரவு

செலவுத் திட்டத்தைச் சட்ட மன்றத்தில் தாக்கல் செய்து, அதன் மேல் நடைபெற்ற விவாதத்திற்கு 27—6—1967-ஆம் நாளில் பதில் அளிக்கையில் தனது உரையில் மேற்சொன்ன நிதி ஏற்பாடு மற்றும் விருப்ப மானிய முறைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது,

''மாநில அரசு, மைய அரசுடன் கொண்டுள்ள நிதித் தொடர்பில் மூன்று வகைகள் இருக்கின்றன வென்பதை நினைவில் கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். முதல் வகை, இங்கு மைய அரசு வசூலிக்கும் வரிகளை, பங்கீடு மூலம் அளிப்பது; இரண்டாவது வகை மானியம் (உதவி மானியம்) வழங்குவது; மூன்றுவது வகை திட்ட நிதி ஒதுக்கீடு (விருப்ப மானியங்கள் மூலமாக) செய்வது. நீங்கள் 1950 முதல் 1967 வரையிலான புள்ளி விவரங்களை ஆழ்ந்து பகுத்தாராய்ந்தால், காலம் செல்லச் செல்ல முதல் இரண்டு இனங்களுக்கும் (வரிப்பங்கீடும் உதவி மானியமும்) உள்ள சிறப்புக் குறைந்து, மூன்றுவது இனமான திட்ட ஒதுக்கீடு (விருப்ப மானிய முறை) மட்டும் அதிக முக்கியத்துவம் அல்லது மிகுந்த ஆதிக்கம் அடைந்து வருவது தெரிய வரும்; இது, நிதி ஆணைக் குழுவின் அதிகார வரம்பிற்குள் வருவதில்லை.''

''மானியங்கள் என்ற போர்வையில் மைய அரசு, அதனிடம் சாட்டையை வைத்துள்ளது. ஏனெனில், மைய அரசு அதன் உளத் தேர்வின்படி மானியங்களை வழங்குகிறது. திட்டக்குழு உறுப்பினர்கள் எனப்படுவோரின் விருப்பு வெறுப்பிற்கேற்ற வகையில் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்ற தென்பதைக் கூறிக் கொள்கிறேன். நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகத் தேவைப்படும் பெருமளவுத் தொகை, மற்றொரு குழுவின் விருப்பு வெறுப்பிற் கேற்ப விடப்பட்டுள்ளது. இவற்றை மறு ஆய்வு செய்யும் அவசரத் தேவை எழுந்துள்ளதென்று நான் கருதுகிறேன். இந்தக் குழு (திட்டக்குழு) எந்த ஓர் அதிகாரப் பூர்வமான அமைப்பின் நிர்வாகத்தின்

கீழும் இல்லை. திட்டத் தொகையைப் பொறுத்த வரையில் நிதித் தொடர்புகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். நமக்குச் சேர வேண்டியது, நம்மிடமிருந்து கொள்ளை போகக் கூடாது. மாநில அரசுக்கும் மைய அரசுக்குமுள்ள தொடர்புகளும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.''

என மாநிலங்களின் அடிமை நிலையையும் மத்திய அரசின் ஆண்டான் தன்மையையும் எடுத்து விளக்குகிறார்.

13. கொத்தடிமையாக்கும் மத்தியக் கடன்

"மாநிலங்களுக்குக் கடன் கொடுக்கும் மிகப் பெரிய கடன் கொடுப்பவராக மத்திய அரசு ஆகிவிட்டது. மத்திய அரசின் புதிய நிதி உதவியின்றி, (ஏற்கனவே வாங்கப்பட்ட) கடன்களின் தவணைத் தொகைகளையும், அவற்றின் வட்டியையும் திருப்பிக் கட்டும் நிலையில் எந்த மாநிலமும் இல்லை என்ற (கையறு) நிலை உருவாகி விட்டது. ஆக, நிதியைப் பொறுத்த வரை மத்திய அரசும் மாநிலங்களும் ஒரு நச்சு வட்டத்திற்குள் சிக்கிக் கொண்டன. மாநில சுயாட்சிக்கு ஏதாவது பொருள் இருக்க வேண்டுமானால், இந்த நச்சு வட்டம் உடைத் தெறியப்பட வேண்டும்."[18]

— தமிழக அரசமைப்பு வல்லுனர், கே. சந்தானம்.

அரசமைப்புச் சட்டம் உருவானதற்குப் பின்னர், மாநிலத் தன்னாட்சியை, மாநிலங்களே கொடுத்துக் கொள்வதற்கு, மத்திய அரசால் செய்யப்பட்ட பிரிதொரு வகையேற்பாடே, "மத்தியக் கடன்கள்" ஆகும்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் வழங்கப்படும் விருப்ப மானியங்களின் மூலமாக மத்திய அரசு, மாநிலத் தன்னாட்சியின் ஒரு கண்ணை மாநிலத்தின் கையாலேயே குத்திக்கொள்ள வைக்கிறதெனில், மத்தியக் கடன்களை மாநிலங்களுக்கு வழங்குவதன் மூலம் மாநிலத் தன்னாட்சியின் மற்றொரு கண்ணும் மத்திய அரசால் குத்தப்படுகிறது. மாநிலங்களால் கடன்களை மறுக்கவும் முடிவதில்லை; ஆனால் திருப்பிக் கட்டவும் முடிவதில்லை.

கம்பராமாயணத்தின் "இலங்கை வேந்தன்", தான் இறக்கும் முன்னர், கடன் பட்ட நெஞ்சத்தைப் போல் கலங்கினானோ என்னவோ, நமக்குத் தெரியாது. ஆனால், மத்திய அரசிடமிருந்து கடன் பட்ட மாநில நெஞ்சங்கள், தீராத வேதனையால் துடித்துச் சாகாமல் சாகும் நிலையை, நாம் நாளும் காண்கிறோம்.

---

18 "Crowing demand for Greater Autonomy" in "The Union and the States," (1972) by S N. Jain, P. 82.

உலக ரெக்கார்டு

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்னல், மாநில அரசுகள் மிகப் பெரிய கடன்களை மத்திய அரசிடமிருந்து பெற்றதாகத் தெரியவில்லை. மத்திய அரசும் மாநிலங்களுக்குக் கடன் கொடுத்தலை, தனது அரசுப் பணிகளில் ஒரு கடமையாகக் கருதவில்லை. 1948–ஆம் ஆண்டு முதல் 1951–ஆம் ஆண்டு முடிய, எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து மத்திய அரசால் வழங்கப்பட்ட கடன் தொகை, ஏறத்தாழ 50 கோடி ரூபாய்.

20 ஆண்டுகள் கழித்து, 1971 – 1972–ஆம் ஆண்டு வரை மத்திய அரசிடமிருந்து மாநிலங்கள் பெற்ற கடன் தொகை, ரூபாய் 6510.17 கோடி.

அஃதாவது 20 ஆண்டுகளில், மாநில அரசுகள் 1951–ஆம் ஆண்டு வரை பெற்றிருந்த கடன்களைப் போல் 130மடங்குக்குச் சமமான கடன் தொகையை, மத்திய் அரசிடமிருந்து பெற்றுள்ளன. அகில உலகத்திலிருக்கும் எந்தக் கூட்டாட்சி நாட்டிலுள்ள மாநிலங்களாவது அதன் மத்திய அரசுக்கு இந்திய மாநிலங்களைப் போல்,இத்துணையளவிற்குக் கடன் பட்டிருக்குமா என்பது ஐயத்திற்குரிய ஒன்ருகும்.

கடன் வேண்டுமா? திட்டத்தை ஏற்றுக் கொள்

நிதித்துறையில் மாநிலங்கள் என்றென்றும் தீராப் பற்றுக் குறையினைக் கொண்டியங்குகின்றன. அவை, தமது நியாயமான செலவினங்களையும் சமுதாயப் பணிகளையும் ஏதோ ஒரு வகையில், ஈடுகட்டித் தீர வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப் பட்டிருப்பதையும் நாம் மூன்ரும் பகுதியில் பரிசீலித்தோம். மத்திய அரசால் வழங்கப்படும், கலால் மற்றும் வருமானவரிப் பங்குத் தொகையும் உதவி மானியத் தொகையும் மாநிலங்களுக்குப் போதுவதில்லை. இறுதியில் தமது உயிர் மூச்சான, மாநில சுயாட்சியினையே அடகு வைத்து மத்திய அரசு அளிக்கும் விருப்ப மானியங்களைப் பெற்ருல் கூட நிதிப் பற்றுக் குறையைத் தவிர்க்க முடிவதில்லை. அதற்காகவே மாநிலங்கள் மத்திய அரசிடமிருந்து கடன் பெறுகின்றன.

இந் நிலையில் மீண்டும் மத்திய அரசின் கையினை நம்பிப் பிழைப்பதைத் தவிர மாநிலங்கட்கு வேறு வழி இல்லை. இந்திய மாநிலங்களின் தனித் தன்மை பெற்ற, இந்த இக்

கட்டான நிதிப் பற்றுக்குறைச் சூழ்நிலையை, அதன் சுயாட்சி உரிமைகளைப் பறிப்பதற்காக மத்திய அரசு, மேலும் பயன் படுத்திக் கொள்கின்றது.

மத்திய அரசு, மாநிலங்களின் எந்தச் செலவிற்கு வேண்டு மானாலும் கடன் கொடுத்துவிடாது. மத்திய அரசு, குறிப்பிடு கின்ற சில வகைக் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே கடன் களைக் கொடுக்கும். அக்கடன்களை மாநிலங்கள் ஏற்றுக் கொண்டு, மத்திய அரசு குறிப்பிடும் அத்திட்டங்களைச் சூட் டோடு சூடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்; மத்திய அரசு குறிப்பிடும் திட்டத்தை ஒரு மாநில அரசு விரும்புகிறதோ இல்லையோ, அதைப் பற்றிக் கவலையில்லை. கடன் வேண்டு மென்றால் அந்தக் குறிப்பிட்ட திட்டத்தை மாநிலங்கள் நிறைவேற்ற வேண்டும். அல்லது அந்தக் குறிப்பிட்ட கடனை மாநில அரசு இழந்துவிட வேண்டும்.

கடனை வாங்கிக் கடனைக் கட்டு

1969–ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து, அந்தக் கொடிய முறையில் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. தேசிய வளர்ச்சி மன்றத்தின் தீர்மானத்திற்கு இணங்க மொத்தமாகக் கடன் களைக் கொடுப்பதற்கு, மத்திய அரசு ஒப்புதல் கொடுத்தது. குறிப்பிட்ட சில திட்டங்களுக்காக மட்டும் கடன்கள் கொடுக்கப் படும் முறை தற்போது தளர்த்தப் பட்டுள்ளது. ஆகவே மாநிலங்கள் இப்போது புதியதொரு வழியைக் கடைப்பிடிக் கின்றன. அதுதான் புதிய கடனை வாங்கிப் பழைய கடனைத் திருப்பிக் கட்டும் முறையாகும்.

மத்திய அரசு, திட்ட நிதி வழங்குவதில் இந்த விந்தையான கடன் முறையைப் பல காலம் செயல்படுத்தி வருகிறது. அதன் விளைவாக மாநிலங்கள் மத்திய அரசுக்குக் கட்ட வேண்டிய வட்டி, தற்போது ஒரு கோரமான வடிவத்தை எடுத்துள்ளது. மத்திய அரசின் பலவகைக் கடன்களுக்கும் பல்வேறு வகையான வட்டி விகிதங்கள் விதிக்கப்படுகின்றன. மத்தியக் கடன்களின் தன்மையைப் பொறுத்து, 1% முதல் 7% வரை அவற்றின் வட்டி விகிதங்களும் மாறுபடுகின்றன. வாங்கிய கடன்களுக்குத் தர வேண்டிய வட்டி போக அசலின் தவணைத் தொகைகளுக்காக மாநில அரசுகள் மிகப் பெருந்தொகைகளை ஒவ்வோர் ஆண்டும் செலுத்தி வருகின்றன.

மத்திய அரசு இந்த ஆண்டில் ஒரு கடனை மாநிலங்களுக்குக் கொடுக்கும். அந்தக் கடனின் முழுத் தொகையையோ அல்லது பெரும் பகுதியையோ, அந்த மாநிலத்தால் கட்டப்பட வேண்டிய வேறொரு பழைய கடனின் தவணைத் தொகைக்காகவும் வட்டிக்காகவும் மத்திய அரசு, இந்த ஆண்டே திரும்பப் பெற்றுக் கொள்ளும். அஃதாவது மத்திய அரசால் புதிதாகக் கொடுக்கப்படும் கடன் தொகை, மாநில அரசின் பேரேட்டில் வரவினமாகப் பொறிக்கப்படும். ஆனால், பழைய கடன்களின் அசலுக்காகவோ, வட்டிக்காகவோ புதிதாக வரவினத்தில் காட்டப்பட்ட தொகை உடனே செலவினத்தில் வைக்கப்பட்டு விடும். பின்னர், புதிய கடனுக்கும் சேர்த்து அசலும் வட்டியுமாகத் திருப்பிக் கட்ட வேண்டிய பொறுப்பு மாநிலங்களுக் கேற்படுகிறது. அதனால் புதிய கடனின் உண்மையான பயன் அவற்றிற்குக் கிட்டுவதில்லை. பேரேட்டில் மட்டும்தான் வரவும் செலவும் காண்பிக்கப்பட்டிருக்கும். உண்மையில் புதிய வருவாயும் வருவதில்லை; அதற்குரிய செலவும் செய்யப்படுவதில்லை; ஆனால் புதிய ஒரு சுமை மட்டும் மாநிலங்களின் மேல் ஏறி விடுகிறது.

மாநிலங்களின் இந்த அவலநிலையைத் தமிழக முதல்வர், டாக்டர். கலைஞர் அவர்கள் வெகு அழகாகக் குறிப்பிடுகிறார்,

"நான்காவது ஐந்தாண்டுத் திட்ட கால முழுவதற்கும் சேர்த்து 6441 கோடி ரூபாயை, மத்திய அரசு மாநிலங்களுக்குக் கடனாக வழங்கும். இந்தத் தொகை பெரிதாகத் தெரியும். ஆனால், மத்திய அரசிற்கு இதே ஐந்தாண்டு காலப் பகுதியில் மாநில அரசுகள் திருப்பிச் செலுத்த வேண்டிய (பழைய கடன்களின்) அசலும், வட்டியும், ரூபாய் 5280 கோடி அளவினதாக இருக்கும். எனவே, மத்திய அரசிலிருந்து மாநிலங்களுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலப் பகுதியில் உண்மையில் கிடைக்கக் கூடிய மொத்தக் கடன் ரூபாய் 1,166 கோடி மட்டுமே யாகும்."

"......நான்காம் திட்ட காலத்தில் தமிழ்நாடு அசலும் வட்டியுமாக மத்திய அரசிற்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ஏறத்தாழ 363 கோடி. இது மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு எதிர்பார்க்கக் கூடிய கடன் தொகைகளைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது. அதாவது மத்திய

அரசிற்குத் தமிழ்நாடு திருப்பிச் செலுத்தும் தொகையின் அளவு (மத்திய அரசால் கொடுக்கப்படும் புதிய கடன் தொகையைக் காட்டிலும்) கூடுதலாகவுள்ளது. இம்மாதிரியான, முரண்பாடான நிலை நீடிக்கிற வரை, வளர்ச்சிப் பணிகளுக்கென வழங்கப்படும் மத்திய உதவி என்பது, வெறும் கானல் நீராகவே இருந்து வரும்.''19

மாநிலங்கள், தாம் வாங்கக்கூடிய கடன்களை லாபம் தரக்கூடிய துறைகளில் முதலீடு செய்திருந்தாலோ அல்லது மாநில அரசிற்குக் கட்டுப்பட்ட அமைப்புகளுக்கும் வாரியங்களுக்கும், அத்தொகையைப் பயன்படுத்திக் கடனாகக் கொடுத்திருந்தாலோ, அவைகளிலிருந்து திரும்பி வரும் லாபத் தொகையினையும் அசல் வட்டித் தொகையினையும் சேர்த்து, மத்திய அரசின் கடனினுடைய அசல் வட்டிக்காகத் தரமுடியும். ஆனால் மத்திய அரசிடமிருந்து வாங்கப்படும் கடன்கள் யாவும், அநேகமாக ஆதாயமில்லாத திட்டங்களுக்காக மாநிலங்களால் செலவு செய்யப்படுகின்றன. அவைகளிலிருந்து வட்டியும் முதலும் மாநிலங்களுக்குத் திரும்பக் கிட்டுவதில்லை. எனவே, மத்திய அரசின் கடன்களைப் புதியதொரு கடன் தொகையால் மாநிலங்கள் சரிக்கட்டிக் கொள்வது வழக்கமாகி விட்டது. இவ்வகையில் கடனை வாங்கி அவற்றைப் பயன்படுத்த முடியாமல் மீண்டும் வேறொரு கடனை வாங்கி அதன்மூலம் பழைய கடனைக் கட்டி, இறுதியில் கடனுக்குக் கடனும் வட்டிக்கு வட்டியும் அதன் குட்டியும் சேர்த்து மாநிலங்கள் கட்ட வேண்டிய மொத்தக்கடன் தொகைகள் வானுயர ஓங்கி வளர்ந்து விட்டன. மாநிலங்களின் கடன் சுமை தீர்வதற்குரிய மார்க்கம் எதுவும் இதுவரை காணப்படவில்லை.

---

19 *28—9—73-இல் சென்னை இராசாசி மண்டபத்தில் நடைபெற்ற அரசாங்கக்கடன் பற்றிய அனைத்திந்தியக்கருத்தரங்கில் கலைஞர் ஆற்றிய தலைமையுரையின் ஒரு பகுதி. தமிழரசு 10—10—73 பக்கம் 2-3.*

மூன்றும் பட்டியல்

மாநிலங்களின் கடன்நிலைப் பட்டியல்

1947 முதல் 1950முடிய நிகரக் கடன் தொகை	1951–52-இல் நிகரக் கடன் தொகை	1965–66-இல் நிகரக் கடன் தொகை	1968–69-இல் நிகரக் கடன் தொகை	1970–71-இல் நிகரக் கடன் தொகை	1972–73-இல் நிகரக் கடன் தொகை
	(ரூபாய் கோடிகளில்)				
சுமார் 50 கோடி	240·48	4102·87	5503·63	6282·92	6510·17

இந்திய மாநிலங்கள், சென்ற 20 ஆண்டு காலத்தில், மத்திய அரசிற்குத் தர வேண்டிய கடன்களைப் பொறுத்தவரை எத்தனை பெரிய கடனாளிகளாக ஆக்கப்பட்டு விட்டன என்பதனை மேலே கண்ட பட்டியல் தெளிவாகக் காட்டுகிறது.

தமிழகத்தின் நிலையும் கலைஞரும்

தமிழகத்தைப் பொறுத்த வரையில், 1973-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் தேதி அளித்த நிதிநிலை அறிக்கையின்படி, மத்திய அரசிற்குத் தர வேண்டிய நிகரக் கடன் தொகை 339,13,42,000 ரூபாய்; 31-3-1974-இல் இக்கடன் தொகை 422,22,00000 ரூபாயாக உயர்ந்து விடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழ்நாடு அரசிற்கு இந்திய அரசு கொடுத்த கடன்களுக்கான வட்டி மட்டும் கீழே தரப்பட்டுள்ளது:—

1968—69-ஆம் ஆண்டில்	ரூபாய்	14.75	கோடி
1969—70 ,,	ரூபாய்	15.37	,,
1970—71 ,,	ரூபாய்	12.95	,,
1971—72 ,,	ரூபாய்	21.74	,,
1972—73 ,,	ரூபாய்	19.17	,,
1973—74 ,,	ரூபாய்	19.98	,,

(திட்டமான மதிப்பீடு)

மேற்சொன்ன பட்டியலை ஒரு கணம் கூர்ந்து நோக்கினால், 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 1974-ஆம் ஆண்டு மார்ச்சு முடிய 6 ஆண்டு காலத்தில், மத்திய அரசிற்கு, தமிழகம் செலுத்திய வட்டித் தொகை மட்டும் ஏறத்தாழ 104 கோடி ரூபாய்.

இவை போக மாநில அரசுகள், மக்களிடமிருந்தும் வெளிச் சந்தையிலும் மற்ற வகைகளிலும் கடன்களைப் பெறுகின்றன. இவை அனைத்திற்கும் மாநில அரசுகள், வட்டியும் முதலும் ஆண்டு தோறும் தர வேண்டியுள்ளது. தமிழக அரசின் வருமானம் முழுவதும் அதன் வரிகள் மூலமாகவே வந்து விடுவதில்லை. மத்திய அரசின் வரிப் பங்குகள், மானியங்கள், மேற்சொன்ன கடன்கள் மூலமாகத் தமிழக அரசின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழப் பாதியளவை நிரப்புகின்றது. எனவே, அவைகளுக்குரிய வட்டி போன்ற தனிச் செலவினங்களும் உண்டு.

31—3—1972-ஆம் தேதியில் தமிழக அரசின் மொத்த வருமானம், ரூபாய் 397 கோடியாக இருந்தாலும் அதில், தமிழக அரசால் வசூலிக்கும் வரிகள் மூலமாக ரூபாய் 210 கோடி அளவிற்கே கிடைக்கின்றது. மத்திய அரசிடமிருந்து, வரிகளின் பங்குத் தொகையாக ரூபாய் 75 கோடியும், மத்திய அரசின் மானியமாக ரூபாய் 33 கோடியும், மாநிலத்தின் வரியற்ற வேறு வருவாயாக ரூபாய் 78 கோடியும் கிடைக்கிறது. ஆக, மொத்த வருமானம் ஏறத்தாழ ரூபாய் 400 கோடியில் வரி வருமானத்தின் மூலம், 50 சதவிகிதத் தொகை மட்டும் தான் கிடைக்கிறது. மத்திய அரசின் கடன், மானியங்கள், மற்ற வகைகள் ஆகியவைகளின் மூலமாக மீதி 50 சதவிகிதத் தொகை கிடைக்கிறது.

26—2—1970-ஆம் தேதியில் தமிழக நிதிநிலை அறிக்கையைச் சட்ட மன்றத்தில் தாக்கல் செய்து, தமிழகத்தின் முன்னாள் நிதி அமைச்சரான திரு. மதியழகன் அவர்கள் பேசுகையில், மாநிலங்கள் வாங்கிய கடனை மத்திய அரசிற்குத் திருப்பிச் செலுத்த வேண்டியதற்கு, 20 முதல் 25 ஆண்டுகள், காலத் தவணைகள் தரப்பட வேண்டுமென்று வரையறுக்கப்பட வேண்டும் எனவும், கடன் அளித்தல் கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவை பற்றிய முறைகள் முற்றிலும் சீராக்கப்படும்

நோக்கத்துடன் இந்தப்பிரச்சினைகளை முழுவதும் ஆராய்வதற்கு ஒரு கூட்டாட்சிக் கடன் ஆணைக்குழுவை (Federal Debt Commission) மத்திய அரசு அமைக்க வேண்டிய காலம் வந்து விட்டதெனவும் அவர் வலியுறுத்தினார். ஆனால், மத்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு அளிக்கும் கடன்களை 15 ஆண்டுத் தவணைகளில் திருப்பிக் கட்ட வேண்டு மென எதிர்பார்க்கிறது.

தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்,

> "………(ஐந்தாண்டுத் திட்டத்தில் வாங்கிய கடன்களைப் பதினைந்து ஆண்டுகளுக்குள் கட்ட வேண்டுமென்ற ஏற்பாடு) நாம் செய்கின்ற மூலதன முதலீடுகள், மெல்ல மெல்லத் தான் பலனளிக்கத் தொடங்குகின்றன என்ற உண்மை நிலையை ஒட்டிய ஏற்பாடாக இல்லை. இத்தகைய சமுதாயப் பணிகளுக்கான கடன்கள் சொற்ப வட்டிக்கு — அதாவது, மத்திய அரசு அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத்தாரிட மிருந்து எந்த நிபந்தனைகளில் கடன் பெறுகிறதோ, அதே போன்று மாநிலங்களுக்கு அளிக்கும் கடன்களும் இருக்க வேண்டும். 50 ஆண்டு கால அளவில் திருப்பிச் செலுத்தக் கூடியதாகவும் இக்கடன்கள் இருக்க வேண்டும். இந்தக் கடன்களை ஒட்டி, வசூலிக்கப்படுகிற பணிக் கட்டணம் (வட்டி) $\frac{1}{2}$ % அல்லது $\frac{3}{4}$ % க்கு மேல் போகக் கூடாது."[20]

என வலியுறுத்தினார்.

இக்கோரிக்கைகளின் அடிப்படையில் ஆறும் நிதி ஆணைக் குழுவும், மாநிலங்களின் கடன் தொல்லைகளைக் குறைப்பதற் காகச் சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. சில வகையான கடன்களை 10 ஆண்டு முதல் 30 ஆண்டு காலம் வரை, திருப்பிச் செலுத்தலாம் எனவும் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் முறை களில் சில மாற்றங்களைச் செய்தும், தனது பரிந்துரைகளைச் செய்துள்ளது. ஆறும் நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் படி மாநிலங்களால் கட்டப்பட வேண்டிய 2000 கோடி ரூபாய் கடன் தொகைகளுக்குச் சில சலுகைகளும் தரப் பட்டுள்ளன.

---

20 Ibid, Opp. Cited, Note. 19

மாநிலங்களின் கடன் தொல்லைகளைப் பற்றி அறிஞர் பெருமக்களும் பொருளாதார வல்லுநர்களும் மாநில அரசுகளும் ஒருசேர மத்திய அரசைக் கண்டிக்கின்றனர். அவ்வப்போது, பல நிதி ஆணைக் குழுக்களும், மாநிலங்களின் சுமையைக் குறைக்க வழி வகைகளைப் பரிந்துரைத்துள்ளன. ஆனால் மத்திய அரசு, மாநிலங்களின் அவல நிலையைப் போக்குவதற்கு முயற்சி யேதும் மேற் கொள்ளுவ தில்லை.

சந்தானம் காட்டும் சரியான வழி

திரு. கே. சந்தானம் அவர்கள் மாநிலங்களின் கடன் பற்றிய அவல நிலையைச் சுட்டிக் காட்டி, நிதித் துறையில் மாநில சுயாட்சியினைக் காப்பதற்கான சில வழி வகைகளையும் அவர் கூறுகிறார்,

> ''மாநில சுயாட்சிக்கு ஏதாவது பொருள் இருக்க வேண்டுமெனில், இந்த நச்சு வட்டம் உடைத்தெறியப்பட வேண்டும். உண்மையான தகுதியின் அடிப்படையில் பார்த்தால் அரசமைப்புச் சட்டத்தின் XII-ஆம் பகுதியை (மத்திய-மாநில நிதி உறவுகள் பற்றியது) முற்றிலும் மாற்றியமைக்கப் பட வேண்டும். மத்திய - மாநில நிதி உறவுகள் பற்றிய அரசமைப்பு விதிகளை மாற்றியமைப்பதற்கு இனி வரும் அண்மைக் காலத்தில் அநேகமாக முயற்சி செய்ய மாட்டார்கள் என்ற காரணத்தால் மாநில சுயாட்சியினை உறுதிப் படுத்தும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை நான் ஆலோசனையாகக் கூறுகிறேன். ஒவ்வோர் ஐந்தாண்டு காலப் பகுதிக்கும் தேவையான திட்ட மானியங்களையும் மற்ற மானியங்களையும், தீர்மானம் செய்யும் பொறுப்பினை நிதி ஆணைக் குழுவினுக்கு ஒப்படைத்துவிட வேண்டும். அந்த நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளை, நீதி மன்றத் தீர்ப்பைப் போல் மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்; அப்படி யேற்றுக் கொண்டால், அரசியல் ஆதாயம் கருதி, மாநிலங்களிடையே மத்திய அரசு பாரபட்சம் காட்டுவதற்கு வாய்ப்பேற் படாது. நிதி ஆணைக் குழுவின் உறுப்பினர்களை, மாநிலங்களிடை உறவு மன்றத்தைக் (Inter State Council) கலந்தாலோசித்தே நியமனம் செய்ய வேண்டும். மாநிலங்களின் தற்போதைய கடன்களை யெல்லாம் ஒன்று திரட்டி ரிசர்வு வங்கியின் ஒரு தனிப் பகுதிக்கு அவைகளை மாற்றி

விட வேண்டும், அல்லது அந்தக் கடன்களைப் புதிதாக உருவாக்கப்படும் மாநிலங்களின் வளர்ச்சி வங்கிக்கு (States Development Bank) மாற்றிவிட வேண்டும். எதிர்காலத்தில் கொடுக்கப்படும் கடன்களுக்கு அந்த வங்கியே (இனி ஏற்படுத்தப்படும் மாநிலங்களின் வளர்ச்சி வங்கியே) பொறுப்பானது; முழுக்க முழுக்க வணிகக் கொள்கையின் அடிப்படையில் ஆக்க வேலைகளுக்காக மட்டும் மாநிலங்களுக்கு எதிர் காலக் கடன்கள் அந்த வங்கியால் அளிக்கப்பட வேண்டும். மாநிலக் கடன்களை மேற்சொன்ன வகையில் மாற்றுவதற்கு முன்னால் அவைகளின் ஒருபகுதியினைத்தள்ளுபடி செய்துவிட வேண்டுவது நியாயமானதாகும். ஆக்க வேலையல்லாத செலவினங்களுக்குரிய மூலதனம் மாநிலங்களுக்கு வேண்டுமென விரும்பினால் அவைகளைப் பொது மக்களிடமிருந்து மாநிலங்கள் கடனாக எழுப்ப வேண்டும். மாநிலங்கள் தங்களது நிதி வருவாயிலிருந்து வட்டியினையும், தவணைத் தொகைகளையும், கட்டுவதற் கேற்ற முறையில் இக்கடன்கள் வரையறுக்கப்பட்ட கடன்களாயிருக்க வேண்டும். இந்தவகை யேற்பாடு மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமையினை வழங்குவதோடல்லாமல் மாநிலங்களின் தொடர்ந்த நச்சரிக்கும் கோரிக்கைகளால் மத்திய அரசிற் கேற்படும் இக்கட்டிலிருந்து மத்திய அரசினைக் காக்கவும் வழி செய்யும் ” 21

கொத்தடிமைகள்

மத்திய அரசின் பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையின் காரணமாகப் பல்லாயிரங் கோடி ரூபாய் காகித நோட்டுகளை மத்திய அரசு அச்சடித்து வெளியிடுகின்றது. அவைகளின் ஒரு பகுதியைத்தான் மாநிலங்களுக்குக் கடனாகத் தருகிறது. நோட்டு உற்பத்தியால் பண வீக்கம் ஏற்பட்டு, விலைவாசிகள் உயர்ந்து, மாநிலப் பொருளாதாரம் முடக்க நிலையை அடைகிறது. தவிர அச்சடிக்கப்பட்ட மத்திய நோட்டுக்களுக்கு வட்டியையும் சேர்த்து மாநிலங்கள் கொடுக்க வேண்டும்.

---

21 Ibid, Opp. Cited, Note, 18

மாநில அரசிற்குரிய நிதி மூலங்களைத் தாராமல், மாநிலங்களுக்கு இயற்கையாகவே நிலைத்திருக்கும் பற்றுக்குறையை உண்டாக்க, மிகப் பெரிய வருவாய்களை ஈட்டித் தரக் கூடிய மாநில வரியினங்களையும் மத்திய அரசு, தன் கையகப்படுத்திக் கொண்டு, அவைகளையே மாநிலங்களுக்கு மானியங்கள் எனவும், கடன்கள் எனவும் கொடுத்து அதற்கீடாக மாநில சுயாட்சி உரிமைகளைத்தன் கைவசப்படுத்திக் கொண்டு,வட்டிக் கடை முதலாளியைப் போல் மாநிலங்களின் கடனைத் திருப்பி வாங்குவதற்காக வேறு வகையில் மேலும் கடன்களைக் கொடுத்து, அதற்கு வட்டியை வசூலித்து, பற்றுக்குறை நிதி நிலை அறிக்கையில்(Budgets) துண்டு விழும் தொகைகளுக்காக, கோடிக்கணக்கான காகித நோட்டுகளை அச்சடித்து, அவற்றின் ஒரு பகுதியை மாநிலங்களுக்குக் கடன் என்ற பெயரால் வழங்கி, பொருளாதாரத் துறையில் மாநிலங்கள் தலையெடுக்க முடியாத நிலையினைச் செயற்கையாக உருவாக்கி, மாநிலங்களை ஒட்டாண்டிகளாகச் செய்து, என்றென்றும் தன்னை வலம் வந்து காலடியில் வீழ்ந்து, தங்கள் சீர்கெட்ட பொருளாதாரத்தை அவ்வப்போது சீர் செய்து கொள்ளக் கூடிய கொத்தடிமைகளாக மத்திய அரசு மாநிலங்களைச் செய்து விட்டது.

இது தான் சுதந்திர இந்தியாவிலுள்ள மாநிலங்களின் தற்போதைய நிலை. சென்ற 24 ஆண்டுகளாக மத்திய அரசு தரும் விருப்ப மானியங்களும், கடன்களும் மாநில சுயாட்சியினை மீள முடியாத ஒரு நச்சு வட்டத்திற்குள் ஆழ்த்தி விட்டன. அந்த வட்டத்திற்குள்ளிருந்து விடுபட வழிவகை தெரியாமல் சுதந்திர இந்திய நாட்டின் மாநிலங்கள், அதனுள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து, மென்மேலும் வறுமையில் உழன்று நிதி சுயாட்சியை இழந்து நிற்கின்றன.

இந்த மிடிமைநிலை மாற்றப்பட வேண்டாமா?

"ஆம்! மாற்றப்படத்தான் வேண்டும்" எனில், மாநில சுயாட்சியும் வேண்டும்.

மலர்க மாநில சுயாட்சி.

14. தொழில்கள் (Industries) மாநிலங்களின் கானல் நீர்

"மத்திய அரசின் அதிகார எல்லைக்குள் வரத் தக்க வகையில் சில வகைத் தொழில்களை மட்டும் குறிப்பிட்டு அறுதி செய்து விட்டு மற்றெல்லாத் தொழில்களையும் மாநிலங்களுக்கே விட்டு விட வேண்டும்; மத்திய அதிகாரப் பட்டியலில் மென்மேலும் பல தொழில்களை நாடாளு மன்றம் சேர்த்துக் கொண்டே போவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் எந்த ஒரு தொழிலையும் (எந்த அரசின் பாற் பட்டது என) அறுதியிட்டுச் சொல்லாமல் விடுதல் கூடாது. குறிப்பிட்ட மூலதனத்தை அடிப்படையாக வைத்து மத்திய அரசின் கீழ் வரக் கூடிய தொழில்களை நிர்ணயப் படுத்தும் மாற்று முறை பற்றிக் கூட ஆலோசனை செய்யலாம் உதாரணமாக, பத்துக் கோடி ரூபாய்க்கும் மேல் மூலதனத்தைப் பெற்ற தொழில்களை மத்திய அரசின் தனிப் பொறுப்பின கீழ் விட்டு விடலாம்; மற்ற எல்லாத் தொழில்களையும் மாநில அரசுகளின் அதிகாரத்திற்கே விட்டு விடலாம்." 22

— தமிழக அரசமைப்பு வல்லுநர் கே. சந்தானம்.

சென்ற 24 ஆண்டுகளில், "திட்டமிடுதலால்" வளர்ந்த "தொழில் துறை" மாநிலங்களில் உருவாக்கிய பொருளாதாரச் சிக்கல்களையும், அடிமைத்தனத்தையும் நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களே கூட எண்ணிப் பார்த்திருக்க மாட்டார்கள். ஒருக்கால் அவர்களுக்கு இந்தப் பின் விளைவுகளைப் பற்றித் தெரிந்திருந்தாலும் அவற்றிற்குரிய பரிகாரங்களை அரசமைப்புச் சட்டத்தில் அவர்களால் உருவாக்கி யிருக்க முடியுமா என்பதும் ஐயத்திற் கிடமானதே.

---

22 "Growing Demand for Greater Autonomy" in "The Union and States" (1972) By. S. N. Jain, P. 81

அந்த அளவிற்கு மத்திய அரசு, தொழில் மற்றும் தொழிற்சாலைகளைப் பொறுத்த அளவில், ஏகபோகமான பேராதிக்கத்தைச் செலுத்தி வருகிறது. சென்ற கால் நூற்றுண்டு காலத்தில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட, தொழில் மற்றும் தொழிற்சாலைகள் சார்ந்த சகல உரிமைகளையும், மத்திய அரசே களவாடிக் கொண்டது. அரசாங்கத் தொழில் நிறுவனங்களை ஒரு மாநில அரசு படைக்க வேண்டுமெனில் கூட ஒரு தனி மனிதனைப் போல் மத்திய அரசிற்கு விண்ணப்பம் செய்து, கெஞ்சிக் கூத்தாடி, உரிமங்களைப் (Licenses) பெற வேண்டிய அளவிற்கு, அவை அடிமைப் படுத்தப்பட்டு விட்டன.

மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள "தொழில்கள்"

மாநிலப் பட்டியல் 24-ஆம் பதிவில்,

"மத்தியப் பட்டியலின் 7-ஆவது மற்றும் 52-ஆவது பதிவுகளுக்குட்பட்ட தொழில்கள்" (Industries Subject to Entries 7 & 52 of List I.) என்ற அதிகார இனம் மாநில அரசிற்குச் சொந்தமானது. ஆனால் மாநிலத்தின் "தொழில்கள்" பற்றிய அதிகாரம் மத்தியப் பட்டியலில் இரண்டு அதிகாரங்களால் (7-ஆவது பதிவு மற்றும் 52-ஆவது பதிவு) கட்டுப்படுத்தப்படுகிறது.

மாநில அதிகாரத்திலுள்ள தொழில்கள் மத்திய அரசுக்குப் போவது எப்படி ?

மத்தியப் பட்டியலின், 7-ஆவது பதிவின்படி— "பாதுகாப்பின் பொருட்டோ அல்லது போரை நடத்துவதற்காகவோ தேவையானவை" என்று நாடாளு மன்றச் சட்டத்தினுல் அறிவிக்கப்பட்ட, "தொழில்கள்", யாவும் மத்திய அரசின் அதிகார எல்லைக்குட்பட்டு விடுகின்றன.

இதன் உட்பொருளை ஆய்ந்து பார்த்தால், "நாட்டுப் பாதுகாப்பின் பொருட்டுத் தேவையானது" என்று கூறி, மத்திய அரசு எந்தவிதத் தொழிலை வேண்டுமானுலும் தனது அதிகார எல்லைக்குள் கொண்டு வந்து கொள்ளலா மல்லவா?

நாட்டுப் பாதுகாப்பிற்கு நேரடியாகத் தொடர்பில்லாத பல தொழில்களைக் கூட, மத்தியப் பட்டியலின் 7-ஆம் பதிவிலுள்ள மேற்சொன்ன வாசகத்தைப் பயன்படுத்தி, மத்திய அரசே கைப்பற்றிக் கொள்ளலாம்.

ஆகவே, ''தொழில்கள்'' பற்றிய பொது அதிகாரம் மாநில அரசிற்குத் தரப்பட்டிருந்தாலும், மத்திய அரசால் தனக்கு வேண்டாம் என்று தள்ளப்படும் மிச்சம் மீதித் தொழில்களை மட்டும்தான் மாநிலங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மத்தியப் பட்டியல் 52-ஆம் பதிவுப்படி,—''பொது நலனுக்காக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதற்குத் தகுந்த தென்று நாடாளு மன்றத்தால் அறிவிக்கப்பட்ட தொழில்கள்'' யாவும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குள் வந்து விடும்.

இப்பதிவில் வரும் ''பொது நலன்'' என்ற சொல், மிகமிக விரிந்த பொருளுடையது. அச்சொல்லிற்கு மத்திய அரசின் எண்ணப்படி, எதனை வேண்டு மென்றாலும், எப்படி வேண்டு மென்றாலும் பொருள் கொள்ளலாம்.

''மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதற்குத் தகுந்த தொழில்கள்'' என்ற சொற்றொடர்கள் மத்திய அரசு, தனது கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்று, எந்தெந்தத் தொழில் களை யெல்லாம் விரும்புகிறதோ''அந்தந்தத் தொழில்கள் எல்லாம்'' என்ற பொருளைத் தருகின்றன.

மத்திய அரசின் விருப்பத்தின்படி, சட்டமியற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அமைச்சரவை சார்ந்திருக்கும் ஆளும் கட்சியின் பெரும்பான்மை பலத்தைக் கொண்ட நாடாளு மன்றத்திடமே உள்ளது.

எனவே ''பொது நலன் கருதி'', என்பதை நிர்ணயிப்பதும் மத்திய அமைச்சரவையே; ''மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதற்குத் தகுந்தது'' என்று முடிவு செய்வதும், மத்திய அமைச்சரவையே யாகும்.

அவ்வகைத் தொழில்கள் மத்திய அரசிடம் இருக்க வேண்டு மெனச் சட்டம் செய்யக் கூடிய பொறுப்பு யாரிடமுள்ளது? நாடாளு மன்றத்திடம் தான் உள்ளது. அதாவது மத்திய அரசை நிர்வகிக்கும் அமைச்சரவையைச் சார்த்திருக்கக் கூடிய நாடாளு மன்றத்திடமே சட்டம் செய்யும் பொறுப்பு உள்ளது.

ஆகவே, இந்தியத் துணைக் கண்டத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் எந்தத் தொழிலை வேண்டுமானாலும், இனிமேல் புதிதாக உருவாக்கக் கூடிய எந்தத் தொழிற்சாலையை வேண்டுமானாலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்குத் தகுதியானவை என மத்திய அமைச்சரவையின் முடிவுப்படி நாடாளு மன்றம் அறிவித்து விடலா மல்லவா?

இந்திய நாட்டின் எந்த வகைத் தொழில்களையாவது "மத்திய அரசின் கட்டுக்குள் இருக்கத் தகுந்தது", என மத்திய அமைச்சரவை முடிவு செய்து—அதற்குக் காரணம் "பொது நலன்", என்பதையும் மத்திய அமைச்சரவையே கூறி விட்டு — ஆகவே "அத்தொழில்கள் மத்திய அரசைச் சார்ந்தவை" என்று நாடாளு மன்றச் சட்டத்தின் மூலமாக அறிவித்துக் கொண்டால் அத் "தொழில்கள்" மற்றும் "தொழிற்சாலைகள்" யாவும் மாநில அதிகாரத்திலிருந்து, மத்திய அரசின் அதிகாரத்திற்குப் போய் விடும். மாநிலப் பட்டியலிலுள்ள, "தொழில்கள்" என்ற மாநில அதிகாரமும் வெற்றுச் சொற்களாக ஆகி விடும்.

1951-ஆம் ஆண்டின் தொழில்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம்

அரசமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள், மத்தியப் பட்டியலின் 52-ஆம் பதிவுக் கேற்றபடி, மத்தியச் சட்டமொன்று நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது.

"1951-ஆம் ஆண்டின் தொழில்கள் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம்." (மத்தியச் சட்டம் 65/1951) (Industries-Development and regulation-Act of 1951.) என்பதே அச்சட்டம்.

இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு தொழில்கள் இந்தச் சட்டத்தால் மத்திய அரசினுடைய அதிகாரத்திற்குக் கொண்டு வரப்பட்டன. தொழில் வளர்ச்சித்துறையில் மத்திய அரசினுடைய நெறிமுறை மற்றும் நடவடிக்கைகளை இச்சட்டம் அமுலுக்குக் கொண்டு வருகிறது.

இச்சட்டத்தின் பின்னுள்ள முதலாம் இணைப்பில் (Schedule-I) மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் எந்தெந்தத் தொழில்கள் இயங்க வேண்டும் என்பதைப் பட்டியல் போட்டு சொல்லப் பட்டுள்ளது.

38 தலைப்புகளுக்குக் கீழ் வரும் 163 தொழில்களும், அத் தொழில்களுக்குத் தேவையான உறுப்புக்களையும், துணை—இணைக் கருவிகளைத் தயாரிக்கும் தொழில்களும், அந்தச் சட்டத்தின் இணைப்பில் இடம் பெற்றுள்ளன. அத்தொழில்களுக்கான உரிமம் பெறுவதும் பதிவு செய்வதும் மற்ற அனைத்துச் செயல்முறை நடவடிக்கைகளும், மத்திய அரசால் கட்டுப் படுத்தப் படுகிறது; ஒழுங்குமுறையும் செய்யப் படுகிறது.

மத்திய அரசு, ''மத்திய ஆலோசனைக் கழகத்தையும்'' (Central Advisory Council), ''மத்தியத் தொழில் வளர்ச்சிக் கழகத்தையும்'' (Central Development Council), இச்சட்டத்தின் மூலம் உருவாக்கி ''தொழில் வளர்ச்சி'' மற்றும் ''தொழில் ஒழுங்கு முறை'' ஆகியவைகளைச் செயல் படுத்துகிறது.

தொழில்களுக்குரிய உரிமம் கொடுப்பதற்கும்; தேவை ஏற்பட்டால் வழங்கிய உரிமங்களை ரத்து செய்வதற்கும்; அத்தொழில்களின் மூலதனம், செயல் திட்டம், இடம் உற்பத்திப் பண்டங்கள், இன்னோரன்னவை பற்றிப் புலன் விசாரிப்பதற்கும்; இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு தொழில் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும்; தேவை யேற்பட்டால் மத்திய அரசே அதன் நிர்வாகத்தை எடுத்துக் கொள்வதற்கும்; தொழில் சட்டவிதிகளை, தொழிற்சாலைகள் மீறும் போது அத்தொழிற்சாலைகளுக்கு உரிய தண்டனைகளைக் கொடுப்பதற்கும்; அவற்றை மேற்பார்வை யிடுவதற்கும்; கைத்தொழில்களில் உற்பத்தியாகும் பண்டங்களின் விலைகளை நிர்ணயிப்பதற்கும்; பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகங்களைச் செய்வதற்கும் தேவையான எல்லா அதிகாரங்களையும் இச்சட்டம் மத்திய அரசிற்கு வழங்குகின்றது.

இச்சட்டத்தில் ''தொழில்கள்'' என்பதன் இலக்கணத்தைக் கூறும்போது, ''மாநில அரசுகளால் நடத்தப்படும் தொழில்களும்'' என்று அதில் இடம் பெறுகின்றது. எனவே, மாநில அரசுகள் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் சில தொழில்களைத் தேசியமயமாக்கித் தாமே அவற்றை ஏற்று நடத்துவதற்கும் கூட மத்திய அரசிடமிருந்து அவைகளுக்குரிய உரிமத்தைப் (License) பெற வேண்டும். மற்றத் தொழில்களை நடத்தும் தனி அமைப்புக்களின் மேலும் முதலாளிகளின் மேலும் மத்திய அரசால் விதிக்கப்படும் எல்லாக் கட்டுப்பாடுகள் மாநில அரசுகளுக்குச் சொந்தமான தொழில்களை மாநில அரசுகள் நடத்தும் போதும் விதிக்கப் படுகின்றன.

மாநில அதிகாரப் பட்டியலில் ''தொழில்கள்'' என்ற அழகான சொற்றொடர் கம்பீரமாக இருப்பினும், மாநில அரசுகள் தமக்குரிய தொழில்களைத் தாமே நடத்துவதற்குக்கூடத் தனித்த உரிமையைப் பெற வில்லை.

ஆக மாநிலங்களிலுள்ள தனி அமைப்புக்களால் நடத்தப் படும் தொழில்களும் மத்திய அரசின் கட்டுக்குள் உள்ளன. மாநில அரசே எடுத்து நடத்தக் கூடிய தொழில்களும் மத்திய அரசின் இரும்புக் கட்டுப்பாட்டினுள் சிக்கி உள்ளன. இவை தவிர, மத்திய அரசு விரும்பும்போது வேறு எந்தத் தொழிலை வேண்டுமானாலும் மேற்சொன்ன தொழிற் சட்ட இணைப்பில் சேர்த்துக் கொண்டு அவற்றையும் மத்திய அரசு தனதாக்கிக் கொள்ளலாம்.

அந்தச் சட்டத்தின் இணைப்பில் கண்டுள்ள தொழில்களை நாம் ஒரு கணம் உற்று நோக்கினால், குடிசைத் தொழில்கள் மற்றும் மிகச் சிறிய தொழில்கள் நீங்கலாக இந்தியாவிலுள்ள ஏறத்தாழ எல்லாத் தொழில்களும் அதில் அடங்கி விடுகின்றன. அவைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்காக, மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்ட பலவகைத் தொழில்களின் நீண்ட பட்டியல் இவண் கீழே தரப்படுகிறது.

I. உலோகத் தொழில்கள்

(அ) இரும்பு பற்றியவை

1. இரும்பும், எஃகும் (உலோகம்); 2. இரும்பு உலோகக் கலவைகள்; 3. இரும்பு எஃகு வார்ப்புக்கள்; 4. இரும்பு எஃகுக் கட்டுமானப் பொருள்கள் (Structurals); 5. இரும்பு எஃகுக் குழாய்கள்; 6. தனி எஃகுகள்; 7. இரும்பு மற்றும் எஃகின் பிற பொருள்கள்.

(ஆ) இரும்பல்லாத உலோகங்கள்

8. விலையுயர்ந்த உலோகங்கள், தங்கம், வெள்ளி, அவற்றின் கலவை உட்பட; 9. இரும்பைத் தவிர மற்ற உலோகங்கள் அதன் கலவைகள்; 10. அரைகுறை உற்பத்தியாளர்களும் உற்பத்திகளும்.

II. எரி பொருள்கள்

11. நிலக்கரி, லிக்னைட், கோக், அவற்றில் பெறப்படும் துணைப் பொருள்கள்; 12. உலோக எண்ணெய்கள் (குருடா

யில், மோட்டார் ஸ்பிரிட், டீசல், மண்ணெண்ணெய், செயற்கை எரி பொருள்கள், லூப்ரிகேட்டிவ் எண்ணெய் போன்றவை); 13. எரி வாயுகள் (கரி வாயு, இயற்கை வாயு போன்றவை).

III. கொதிகலன்கள்

14. கொதிகலன்களும், ஆவியுற்பத்தி ஆலைகளும்.

IV. தலைமை எந்திரம்

15. நீராவி எந்திரம்; 16. உள்தகன எஞ்சின்கள்.

V. மின்சாரப் பொருள்கள்

17. மின்சார சாதனங்கள் (மின்சார ஜெனரேட்டர், மாற்றிகள் முதலியன); 18. மின்சார மோட்டார்கள்; 19. மின் விசிறிகள்; 20. மின் விளக்குகள்; 21. மின் அடுப்புகள்; 22. மின் கம்பிகள்; 23. எக்ஸ்ரே சாதனங்கள்; 24. எலெக்டிரானிக் சாதனங்கள்; 25. மின்சாரத்தால் இயக்கப்படும் வீட்டுச் சாமான்கள் அதாவது சலவைப் பெட்டி, ஹீட்டர் போன்றவை; 26. பேட்டரிகள்; 27. உலர்ந்த செல்கள்.

VI. தொலை தொடர்புகள்

28. தொலைபேசி; 29. தந்தி சாதனங்கள்; 30. கம்பியில்லாச் செய்தித் தொடர்புகளுக்குரிய சாதனங்கள்; 31. வானொலி, மைக்செட் வகையறு; 32. டெலிவிசன் (தொலைக்காட்சி); 33. டெலி பிரிண்டர்.

VII. போக்குவரத்துகள்

34. விமானங்கள்; 35. கப்பல்கள், நீராவிக் கப்பல்கள்; 36. இரயில் என்ஜின்கள்; 37. இரயில் உருளைகள்; 38. மோட்டார், கார், பஸ், ஸ்கூட்டர் போன்ற உந்து வண்டிகள்; 39. மிதிவண்டிகள் (Cycle); 40. டிரக் லிப்டர்கள் போன்றவை.

VIII. தொழில் இயந்திரங்கள்

41. நூற்பாலை இயந்திரங்கள்; 42. சணல் ஆலை இயந்திரங்கள்; 43. இரயான் ஆலை இயந்திரங்கள் (செயற்கைப் பட்டு); 44. சர்க்கரை ஆலை இயந்திரங்கள்; 45. தேயிலைத் தொழில் இயந்திரங்கள்; 46. சுரங்க இயந்திரங்கள்;

47. உலோக சம்பந்தப்பட்ட இயந்திரங்கள்; 48. சிமெண்டுத் தொழில் இயந்திரங்கள்; 49. இரசாயன இயந்திரங்கள்; 50. மருந்து தயாரிப்பு இயந்திரங்கள்; 51. காகித ஆலை இயந்திரங்கள்; 52 முதல் 65 வரை: பல தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் இயந்திர உறுப்புக்களும் அதனைச் சார்ந்த 14 வகைத் தொழில்களும்; 66 முதல் 68 வரை: தொழிற் சாலை இயந்திரங்களைச் சார்ந்த மூன்று தொழில்கள்.

IX. மெஷின் டூல்ஸ்

69. மெஷின் டூல்ஸ்.

X. விவசாய இயந்திரங்கள்

70. டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள்; 71. விவசாய சாதனங்கள்.

XI. மண் எடுப்பு சாதனங்கள்

72. புல்டௌசர், ரோலர்கள், டம்பர், ஸ்கிரேப்பர், ரோடு உருளைகள் இவை போன்ற பல.

XII. பல்வகைப் பொறியியல் தொழில்கள்[Engineering Industries]

73. பிளாஸ்டிக் வார்ப்பு; 74. டூல்ஸ் (ஸ்பேனர்ஸ்); 75. ரேசர் பிளேடுகள்.

XIII. வியாபார – வீட்டு – சாதனங்கள்

76. தட்டெழுத்தியந்திரம்; 77. கணக்கெடுக்கும் இயந்திரம்; 78. குளிர்சாதனப் பெட்டி; 79. வேஃகுவம் கிளீனர் (Vaccuam cleaner); 80. தையல் மற்றும் பின்னல் இயந்திரங்கள்; 81. அரிக்கன் விளக்கு.

XIV. மருத்துவ அறுவை சாதனங்கள்

82. அறுவை சிகிச்சை சாதனங்கள்.

XV. தொழில் கருவிகள்

83. தண்ணீர் மீட்டர்கள், நீராவி மீட்டர்கள், மின்சார மீட்டர்கள் போன்றவை; 84. அழுத்தங்கள், வெப்பம், எடை ஆகியவற்றைக் காட்டும் – பதிவு செய்யும் – ஒழுங்குபடுத்தும் – பல சாதனங்கள்; 85. எடை அளவை இயந்திரங்கள்.

XVI. விஞ்ஞானக் கருவிகள்

86. விஞ்ஞானக் கருவிகள்.

XVII. கணக்கு, சர்வே சாதனங்கள்

87. கணக்கு, சர்வே, வரைபட சாதனங்கள்.

XVIII. உரங்கள்

88. இயற்கை உரங்கள் (Inorganic); 89. செயற்கை இரசாயன உரங்கள் (Organic); 90. கலப்பு உரங்கள் (mixed).

XIX. இரசாயனம்

91. செயற்கைக்கனரக ரசாயனத் தொழில்கள் (Inorganic); 92. கரியகச் சேர்க்கைக் கனரக ரசாயனத் தொழில்கள் (Organic); 93. நிழற்பட ரசாயனத் தொழில்கள் மற்றும் நுண் ரசாயனத் தொழில்கள் (fine); 94. செயற்கைப் பிசின் (ரெசின்) மற்றும் பிளாஸ்தர்கள்; 95. செயற்கை ரப்பர்கள்; 96. சாயம், வார்னிஷ், எனுமல்; 97. மனிதனுல் உருவாக்கப்படும் நூல் இழைகள், மற்றும் ரயான்-நைலான் போன்றவை; 98. கோக் என்ற நிலக்கரியின் துணைப் பொருள்கள்; 99. கோல்தார் வடிப்புப் பொருள்கள்; நாப்தலின் போன்ற பொருள்கள்; 100. வெடிகள், வெடி மருந்துகள்; 101. பூச்சிக் கொல்லிகள் போன்ற தொழில்கள்; 102. நெசவாலைத் துணைக் கருவிகள்; 103. தரம் பிரிக்கும் கருவிகள், கஞ்சிப்பசை உள்ளிட்டது; 104. பலவகை ரசாயனங்கள்.

XX. போட்டோகிராப் - மூலப் பொருள் (நெகட்டிவ்)

105. சினிமா பிலிம்; 106. போட்டோ பிலிம்; 107. போட்டோ அச்சடிக்கும் தாள்.

XXI. வண்ணச் சரக்குகள்

108. வண்ணச் சரக்குகள்.

XXII. மருந்துகள்

109. மருந்துகள்.

XXIII. நெசவு ஆலை

110. பருத்தி நூல், பின்னல், நூல் கயிறு; 111. சணல் கயிறு உட்பட, சணல்; 112. கம்பளி, கம்பளிப் பொருள்கள்;

113. பட்டு, பட்டுப் பொருள்கள்; 114. செயற்கை நூலிழைகள், இரசாயன இழைகள்.

XXIV. காகிதப் பொருட்கள்

115. எழுதும், அச்சடிக்கும், கெட்டித்தாள்கள்; 116. செய்தி அச்சடிப்புத்தாள்; 117. காகித அட்டைகள், கெட்டி அட்டைகள்; 118. காகித உறைகள், அதுபோன்ற இதர உறைத்தாள்கள்; 119. காகிதக் கூழ், மரக்கூழ்.

XXV. சர்க்கரை

120. சர்க்கரை.

XXVI. புளிப்புப் பண்டப் பொருள்கள் – தொழில்கள்

121. சாராயம்; 122. புளிப்புப் பொருள் தொழில்கள்.

XXVII. பக்குவப்படுத்தப்பட்ட உணவுத் தொழில்கள்

123, உலர்ந்த பழங்கள், அதன் பொருள்கள்; 124. பால் உணவு; 125. மாவு உணவு; 126. மாவு; 127. பக்குவப் படுத்தப்பட்ட மற்ற உணவுகள்.

XXVIII. தாவர எண்ணெய் வனஸ்பதி

128. தாவர எண்ணெய்கள், (பிழிந்தெடுக்கும் எண்ணெய் உட்பட); 129. வனஸ்பதி.

XXIX. சோப்பு மற்றும் ஒப்பனைத் தயாரிப்புகள்

130. சோப்புகள்; 131. கிளிசரின்; 132. ஒப்பனைப் பொருள்கள் (Cosmetics); 133. வாசனைப் பொருள்கள்; 134. உடல் சிங்காரிப்புப் பொருள்கள் (Toilets).

XXX. ரப்பர் பொருள்கள்

135. டயர்கள், டியூப்கள்; 136. அறுவை மற்றும் மருந்துப் பொருள்கள்; 137. காலணிகள் மற்றும் ரப்பர் பொருள்கள்.

XXXI. தோல்—தோல் பொருள்கள்

138. தோல் - தோல் பொருள்கள்.

XXXII. குளுபசை

139. குளு பசை (Glue), எலும்புப் பசை (Geletine).

XXXIII. கண்ணுடித் தொழில்

140. கண்ணுடிப் பாத்திரங்கள்; 141. கண்ணுடிச் சீட்டுகள், கண்ணுடி பிளேட்டு; 142. கண் கண்ணுடிகள்; 143. கண்ணுடிக் கம்பிளி (Glass wool); 144. ஆய்வுக்கூடப் பாண்டங்கள்; 145. பலவகைக் கண்ணுடிப் பாண்டங்கள்.

XXXIV. மட்பாண்டங்கள்

146. நெருப்பால் பாதிக்கப்படாத செங்கல்; 147. எளிதில் உருகாத மண் கருவிகள்; 148. ஆலை அடுப்புச் செங்கல்; 149. சைனுமண் பண்டங்கள் (பீங்கான் பாத்திரங்கள் மட்பாண்டம் (சைனுமண் சட்டிபானைகள்); 150. சுகாதாரப் பாண்டங்கள்; 151. மின் தடுப்பு மண் பொருள்கள்; 152. ஓடுகள்.

XXXV. சிமெண்டு, ஜிப்சம் (Gypsum) தொழில்கள்:

153. போர்ட்லேண்ட் சிமெண்டு; 154. ஆஸ்பெஸ்டோ சிமெண்டு; 155. மின்சாரம் பாயாத ஜிப்சம் பலகைகள்; 156. ஜிப்சம் பலகைகள்; 157. சுவர் ஜிப்சம் - அட்டைகள் போன்றவை.

XXXVI. மரம்

158. பிளைவுட்; 159. ஹார்டு போர்டு (Hard Board); 160. தீக்குச்சி; 161. மரத் தட்டுமுட்டுச் சாமான்களின் துணைப் பொருள் உள்பட பலவகை மரப் பொருள்கள்.

XXXVII. போர்க் கருவிகளும் படைக்கலன்களும்

162. போர்க் கருவிகளும் படைக்கலன்களும்.

XXXVIII. சிகரட்டுகள்

163. சிகரட்டுகள்.

முதல் விளக்கம்: III, IV, V, VI, VII, VIII, X, XI மற்றும் XIII ஆகிய தலைப்புக்களின் கீழ்வரும் பொருள்களின் துணை உறுப்புக்களைச் செய்யும் தொழில்களுக்கும் அவை பொருந்தும். அதாவது, அந்தந்தத் தலைப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் துணை — இணைப் பொருள்களைத் தயாரிக்கக்கூடிய தொழில்களும் கூட மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டவை.

இரண்டாம் விளக்கம்: XVIII, XIX, XXI மற்றும் XXII ஆகிய தலைப்புக்களின் கீழ்வரும் பொருள்களின் உற்பத்திக்குத் தேவையான பண்டங்கள் சம்பந்தப்பட்ட தொழில்களும் மத்திய அரசின் அதிகாரத்திற்குக் கீழ் வருகின்றன.

மேற்சொன்ன 163 வகையான தொழில்களையும் அவற்றைச் சார்ந்த 'துணை', 'இணைப்' பண்டங்கள் பற்றிய தொழில்களையும் சேர்த்தால், ஏறத்தாழ இந்திய நாட்டின் தொழில்கள் அத்தனையும் மத்திய அரசின் கீழ் வந்து விடுகின்றன. மேற்கண்ட பட்டியலில் இடம் பெற்றிருக்கும் தொழில்களில் மிகச் சாதாரணமான பல தொழில்கள்கூட இடம் பெற்றிருப்பதை நாம் காணலாம். இவைகளில் எதிலும் மாநில அரசிற்கு எவ்வகை அதிகாரமும் கிடையாது.

மத்திய அரசின் கீழ்க் கொண்டு வரப்பட்ட மற்றத் தொழில்கள்

தொழில்களின் சட்டத்தில் கூறப்பட்ட 163 தொழில்களும் அவைகளின் துணை, இணைப் பொருள்களின் தொழில்களும் போக, வேறு பல தொழில்களையும் "பொது நலனுக்"கானவை எனக் கூறி, பல சட்டங்களின் மூலமாக மத்திய அரசு, தன் வசப்படுத்திக் கொண்டு, தனது ஏகபோக அதிகாரத்தை நிலை நாட்டியுள்ளது.

அவையாவன:—

1. 1947-ஆம் ஆண்டின் ரப்பர் சட்டம் (Rubber Act, 1947).
2. 1948-ஆம் ஆண்டின் இந்திய சாராயச் சட்டம் (Indian Alcoholic Act, 1948).
3. 1948-ஆம் ஆண்டில் மத்தியப் பட்டு வாரியச் சட்டம் (Central Silk Board Act, 1948).
4. 1953-ஆம் ஆண்டின் தேயிலைச் சட்டம் (Tea Act. 1953).
5. 1953-ஆம் ஆண்டின் கயிற்றுத் தொழில் சட்டம் (Coir Industries Act-1953).
6. 1958-ஆம் ஆண்டின் அரிசி ஆலைத் தொழில் சட்டம்.

7. 1965-ஆம் ஆண்டின் ஏலக்காய்ச் சட்டம் (The Cardimum Act-1965).

8. 1942-ஆம் ஆண்டின் காப்பிச் சட்டம் (Coffee Act-1942.)

சான்றுக்காக இவை கூறப்பட்டன. மேற்சொன்ன சட்டங்களைப் போல பல தொழில்களைச் சார்ந்த சட்டங்களையும் மத்திய அரசு நிறைவேற்றி, ஏறத்தாழ எல்லாத் தொழில்களையும் தன்னுடைய வல்லாட்சி அதிகாரங்களின் கீழ்க் கொண்டு வந்து விட்டது.

தொழில் முதலீடுகளில் (INVESTMENTS) மத்திய அரசின் ஆதிக்கம்

தொழில்கள், பொதுத்துறையைச் சார்ந்தவையாயும் இருக்கலாம்; தனியார் துறையைச் சார்ந்தவையாயும் இருக்கலாம். ஆனால் தொழில்களின் முதலீட்டுத் தொகைகள், அமைப்பு முறை, முதலீட்டுக் கொள்கை, நிர்வாகம் ஆகியவற்றில் மத்திய அரசின் பேராதிக்கம் இடம் பெறுமல் போகாது. அதனல் தொழில்களின் சர்வ இயக்கமும், மத்திய அரசின் அதிகார வட்டத்திற்குள் வந்து விடுகின்றன. அதற்காக மத்திய அரசு, பல கட்டுப்பாட்டு முறைகளையும் ஏற்பாடுகளையும் பயன் படுத்துகின்றது.

அவையாவன:

1. தொழில்களுக்கான உரிமத்தை(License)வழங்கும் ஏற்பாடு.
2. முதலீட்டுத் துறைகளின்மேல் செலுத்தப்படும் கட்டுப்பாடு.
3. வெளிநாட்டு நிதி மற்றும் தொழில் நுணுக்க ஏற்பாடுகள்.
4. பண்டங்களின் விலைகளின்மேல் செய்யும் கட்டுப்பாடு.
5. பண்டங்களின் விநியோகத்திற்கான கட்டுப்பாடு.
6. மத்திய அரசின் நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் இயங்கக் கூடிய மத்திய அரசின் தொழில் மற்றும் வர்த்தகக் கொள்கைகள்.
7. ரிசர்வு வங்கியின் நிதிக் கொள்கை,
8. ஐந்தாண்டுத் திட்டங்களின் பெரும்பான்மையான மூலதனத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் மத்திய அரசுப் பொறுப்பிலிருக்கும் கனரகத் தொழில்கள்.

மேற்சொன்ன வழிகளில் இந்திய நாட்டின் தொழில்கள் முழுவதும் மத்திய அரசின் சுட்டு விரலசைவிற்கு ஆடக்கூடிய நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசினுடைய முன் அனுமதி பெற வேண்டிய தொழில் திட்டங்கள் (செதல்வாட்குழு அறிக்கைப்படி)

1. ரூபாய் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட நிலையான மூலதனமுடைய நடுத்தரத் தொழில்களை மத்திய நுணுக்க வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் (Directorate General of Technical Development) பதிவு செய்து கொள்ள வேண்டும்.

2. ரூபாய் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட நிலையான மூலதனமுடைய (Fixed assets) அச்சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கக் கூடிய தொழில்களை மத்திய அரசில் பதிவு செய்ய வேண்டும்.

   நிலக்கரி, துணி, ரோலர், மாவு ஆலை, எண்ணெய் விதைகளைப் பிழிதல், வனஸ்பதி, தீக்குச்சிகள் சம்மந்தப்பட்ட தொழில்களுக்கும் அப்படிப் பதிவு செய்ய வேண்டும்.

3. ரூபாய் 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட நிலையான மூலதனமுடைய தொழில்கள் அனைத்தும் மத்திய அரசில் பதிவு செய்து லைசென்ஸ் பெற வேண்டும்.

4. தொழிற்பேட்டைகளை (Industrial estate) அமைப்பதற்குச் சிறு தொழில்கள் வளர்ச்சி ஆணையரின் (Development Commissioner, Small Scale Industries) முன் அனுமதி பெற வேண்டும்.

   மேலும் 1951-ஆம் ஆண்டுத் தொழில்கள் (வளர்ச்சியும் கட்டுப்பாடும்) சட்டத்தின் கீழ், தொழில்களின் வகைக்கு ஏற்றவாறு அனுமதி பெற வேண்டும்.

5. மேற்சொன்னவாறு பதிவு செய்வதற்கோ, லைசென்ஸ் பெறுவதற்கோ விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படுகிற போது உற்பத்தித் திட்டங்கள், மூலப் பொருளின் தேவை, இயந்திர வசதி, மூலதன அளவு, எத்தனை 'ஷிப்டு'கள் வைக்கப்படுகின்றன என்பது, தேவையான வெளிநாட்டுச் செலாவணி, உற்பத்தியாகப் போகிற பண்டத்திற்கு இருக்கப் போகும் கிராக்கி போன்றவை பரிசீலிக்கப் படுகின்றன.

6. தொழிற் கல்வியில் புதிய திட்டங்கள் புகுத்தப்பட்டால் அவை அகில இந்தியத் தொழிற் கல்விக் கவுன்சிலின் (All India Council of Technical Education) பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் முன் அனுமதி பெற வேண்டும்.

தொழில் வளர்ச்சிகளுக்கான உரிமைகளையும் அதிகாரங்களையும் மேற்சொன்ன பல முறைகளால் மத்திய அரசு கட்டுப்படுத்துகின்றது. இந்நிலையை, ஐந்தாண்டுத் திட்டங்கள் இன்னும் மோசமாக்கி, மத்திய அரசின் ஊடுருவலை மேலும் விரிவாக்கி விட்டன. அதனால் மாநிலங்களின் தொழில் அதிகாரங்களும் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் ஐந்தாண்டுத் திட்டங்களில் தொழில்களின் வளர்ச்சிக்குத் தரப்படும் நிதியின் பெரும்பங்கை, மத்திய அரசே பெற்றுக் கொள்கிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக கனரகத் தொழில்களின் வளர்ச்சிக்குக் கொடுக்கும் ஆக்கமும், சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசின் மூலமாக மாநிலங்களுக் களிக்கப்படும் ''நிதி உதவிகளும்'', அந்த உதவிகளுடன் தாரப்படும் நிர்வாக — ஆலோசனைகளும் தொழில் துறையில் மத்திய அரசிடமிருக்கும் மற்ற பெரும் அதிகாரங்களும் சேர்ந்து மாநிலங்களை மத்திய அரசின் உயிரற்ற கைப் பொம்மைகளாக ஆக்கி வைத்துள்ளன. மாநிலங்களுக்குத் தொழில்களைத் தொடங்கத் தேவையான ஊக்கமும், தொழில்களையும் பேணிக் காக்கத் தேவையான அதிகாரங்களும் இல்லாததால் மாநிலங்கள் தங்கள் தொழில் முயற்சிகளையும் இழந்து நிற்கின்றன.

ஒற்றை வரி கொண்ட ஒரு சட்டம்

மாநில அரசினுடைய அதிகாரங்களில் வேறு எந்தத் தொழில்கள் தான் வருகின்றன?

அநேகமாக எந்த முக்கியத் தொழிலும் வருவதில்லை.

உண்மைநிலை இவ்வாறிருக்க, தொழில்களைப் பற்றிய அதிகாரத்தை, நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் மாநிலப் பட்டியலில் எதற்காக இடம் பெறச் செய்தார்கள்?

அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் ''தொழில்கள்'' என்ற அதிகார இனத்தின் மூலமாக மாநிலங்களுக்கும் பல தொழில்களைக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தில்தான் ''தொழில்கள்'' என்ற அதிகார இனத்தை மாநிலப் பட்டியலில் சேர்த்தார்கள்.

ஆனால், அரசியலமைப்புச் சட்டம் பின்னால் அமுல் படுத்தப் பட்டபோது, மத்திய அரசு அரசமைப்புச் சட்டத்தைத் திரிபு படுத்திப் பொருள் கொண்டு, மத்தியப் பட்டியலின் 52-ஆம் பதிவின் துணை கொண்டு ஏறத்தாழ எல்லாத் தொழில்களையுமே தன் வசமாக்கிக் கொண்டது.

நெருக்கிச் சுருக்கப்பட்ட மாநில சுயாட்சியையே நமது அரசியலமைப்புச் சட்டம் மாநிலங்களுக்குத் தந்திருந்தது. அதனையும் மீறிய நமது மத்திய அரசு, எல்லா அதிகாரங்களையும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் தனது வல்லாட்சியை, சென்ற 24 ஆண்டுகளில் மேற்சொன்ன வகையில் மாநிலங்களின்மேல் அமுல் படுத்தயதின் விளைவுதான் மாநில அரசுகளின் தற்போதைய அவலத்திற்குக் காரணமாகும்.

மெத்தச் சிரமப்பட்டு, அரசியலமைப்புச் சட்ட விதிகளின் நுணுக்கத்தை மாற்றிப் பொருள் கொண்டு, அதனை மீறும் வகையில் நாடாளுமன்றச் சட்டங்களை நிறைவேற்றி, அச் சட்டங்களில் எல்லாத் தொழில்களையும் வலியச் சேர்த்து, அப்படிச் சேர்க்கப்பட்ட தற்கான முகாந்திரங்களையும் காரணங்களையும் கூறி, அவைகளை மத்திய அரசு, தன்னுடைய ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்து, பின்னர் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாகவும் தனது பேராதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதைக் காட்டிலும் மத்திய அரசுப் பட்டியல் 52-ஆவது பதிவில் வரக்கூடிய ''பொது நலன் கருதி'' என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தி,

''அகில இந்தியாவில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய எல்லாத் தொழில்களும் இனிமேல் உருவாகும் புதிய தொழில்களும் மத்திய அரசினுடைய அதிகாரத்திற்குக் கீழ் வரக் கூடியவை.''

என்ற ஒரே வரியில் ஒரே ஒரு சட்டத்தை இயற்றிவிட்டால் மாநில அரசுகளின் அதிகாரத்தின் கீழ் எவ்வகைத் தொழில்களும் இல்லாமற் செய்திருக்கலாமே? தொழில்துறையில் மாநிலங்களை முழுமையாகவும் அடிமைப்படுத்தி யிருக்கலாமே?

மத்திய அரசில் இன்னும் ஒரே அரசியல் கட்சி (காங்கிரஸ்) தொடர்ந்து ஆட்சியில் இருக்குமானால் தொழில்களைப் பற்றிய அப்படிப்பட்ட ஒற்றை வரி கொண்ட ஒரு சட்டம் கூட வந்தாலும் வரலாம்.

அயர்லாந்தின் "பாம்புகள்" — நகைச்சுவை!!

மாநிலத்தின் "தொழில்கள்" — அவலச்சுவை??

நமது மாநிலப் பட்டியலில் "தொழில்கள்" எனக் கண்டிருக்கும் பதிவைப் பார்க்கும்போது, ஆங்கில நகைச் சுவைத் துணுக்கொன்று நினைவுக்கு வருகிறது.

பனிப் பகுதிகளையே கொண்ட அயர்லாந்து நாட்டில், பாம்புகள் தோன்றவும் முடியாது. வாழவும் முடியாது. ஆனால், அயர்லாந்தைப் பற்றி நில நூல் புத்தகம் எழுதத் துணிந்த ஆசிரியர் ஒருவர், தனது புத்தகத்தில், "அயர்லாந்தில் பாம்புகள்", என்ற கம்பீரமான தலைப்பிட்டு, ஒரு தனி அத்தியாயத்தையும் சேர்த்திருந்தார்.

"அயர்லாந்தில் பாம்புகளா?" என்ற கேள்விக் குறியோடு அப்புத்தகத்தைப் புரட்டிய ஒருவர் அந்த அத்தியாயத்தை வெகு ஆவலுடனும் வியப்புடனும் கூர்ந்து பார்க்கலானார். ஆனால் அந்த அத்தியாயத்தின் கீழ் ஒரே ஒரு வரி மட்டும் எழுதப் பட்டிருந்தது.

"அயர்லாந்தில் பாம்புகளே இல்லை" என்ற வரியோடு, "அயர்லாந்தில் பாம்புகள்" என்ற அந்த அத்தியாயம் முடிக்கப்பட்டிருந்தது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மாநிலப் பட்டியலில் "தொழில்கள்" என்ற அதிகார இனம், வெகு கம்பீரமாகக் காட்சியளிக்கிறது — "அயர்லாந்தில் பாம்புகள்" என்ற அத்தியாயத்தைப் போல்.

ஆனால், மத்தியப் பட்டியலின் 52-ஆம் பதிவிலுள்ள வாசகங்களும் மத்திய அரசின் சட்டங்களும் ஐந்தாண்டுத் திட்டங்களும் மாநில அதிகாரத்தின் கீழ் "தொழில்களே இல்லை" எனச் சாற்றுகின்றன — "அயர்லாந்தில் பாம்புகளில்லை" என்பதைப் போல.

அயர்லாந்து பற்றி நிலநூல் எழுதிய ஆசிரியர் செய்த பிழை நமக்கு நகைச்சுவையைத் தருகின்றது. ஆனால் அரசமைப்பும் மத்திய அரசும் துணிந்து செய்த வஞ்சக ஏற்பாடுகள் இந்திய மாநிலங்களுக்குத் தீரா அவலத்தைத் தருகின்றன.

கானல் நீர்

கூட்டாட்சித் தத்துவப்படி, மத்திய அரசிற் கிணையான அதிகாரத்தைப் பெற வேண்டிய மாநிலங்கள், மாநில மட்டத்தில் அமைக்கப்படக் கூடிய தொழில்களுக்கான உரிமங்களைப் பெறுவதற்காக, டெல்லிக்கு விண்ணப்பங்களைப் போட்டுவிட்டு, மத்திய அரசின் செயலகத்தையும், மத்திய-தொழில் வளர்ச்சிக் கழக அலுவலகங்களையும் பல்லாண்டுகளாகச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கும் கேவலமான நிலையை யடைந்து விட்டன. மாநிலங்களுடைய அவல நிலைக்கு நமது அரசியலமைப்புச் சட்டம் மட்டும் பொறுப்பானதல்ல.

சென்ற இருபத்து நான்கு ஆண்டுகளில் மத்திய அரசால் உருவாக்கப்பட்ட பல தொழிற்சாலைகளும் பல ஐந்தாண்டுத் திட்டங்களும், மத்திய அரசிலும் மாநிலங்களிலும் அரசோச்சிய அனைத்திந்தியக் காங்கிரஸ் கட்சியும், அக்கட்சியைச் சார்ந்த தேசியத் தலைவர்களும் மாநிலக் குட்டித் தலைவர்களுமே, மாநிலங்களின் இன்றைய இழிநிலைக்கு மூல காரணமாவார்கள்.

தொழில்களைப் பொறுத்த அளவில் மத்திய அரசு தற்போது ஒரு சர்வாதிகார அரசாகவே மாறி விட்டது. எனவே, மாநிலங்களுக்களிக்கப்பட்ட சு யா ட் சி அதிகாரங்களும் உரிமைகளும் வெறும் கானல் நீராகி விட்டது.

மத்திய அரசின் சர்வாதிகாரத் தன்மையை மாற்றி மாநிலங்கள் நியாயமான சுயாட்சி உரிமைகளைப் பெறுவதற்குரிய வழிவகைகளைப் பற்றித் தமிழக அரசு கூறும்போது,

> "1951-ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சியும் ஒழுங்கு முறையும்) சட்டம் (மத்தியச் சட்டம் 65/1951) ரத்து செய்யப்பட வேண்டும். புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கி நடத்தி வருவதற்கும் மாநிலத்திற்குள் புதிய தொழில் நிறுவனத்தைத் தொடங்குவதற்காக உரிமம் வழங்குவதற்கும் மாநிலத்திற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

> ஒரு மாநிலத்தால் உரிமம் வழங்கப்பட்ட அல்லது தொடங்கப் பட்ட ஒரு தொழில் நிறுவனத்திற்கு அன்னியச் செலாவணி தேவைப்படுமானால், தேசியத் திட்ட முன்னுரிமைகள், தேசியத் தேவை மதிப்பீடு, செய்திப் பகிர்வு ஆகியவற்றுக்கு உட்பட்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படும் மொத்த மானிய வடிவில் அவ்வுதவி அளிக்கப்படல் வேண்டும்.''[23]

என்ற கருத்துரையைத் தருகின்றது.

எனவே மாநிலங்களுக்குத் 'தொழில்கள்' வேண்டுமெனில்,

மலர்க, மாநில சுயாட்சி!

---

23 மாநில சுயாட்சி பற்றியும் இராசமன்னார் குழுவின் அறிக்கை பற்றியும் தமிழ் நாடு அரசின் கருத்துரைகள் பக்கம் 10-11.

15. மாநிலங்களின் வேதனையும் விரக்தியும்

"இப்போது மத்திய - மாநில உறவுகள் ஓர் இக்கட்டான நெருக்கடிக்கு வந்திருக்கின்றன. இத்தகராறின் மூல காரணம், நிதி மூலங்கள் ஆகும். அரசமைப்புச் சட்டம் உருவாக்கப் பட்ட காலத்திலிருந்து மாநிலங்கள் அரசியல் துறையைக் காட்டிலும், நிதித் துறையில் தன்னாட்சியுரிமைகளை இழந்து விட்டதென்று உணர்ந்து வந்திருக்கின்றன." 24

— மூன்றும் நிதி ஆணைக்குழுத் தலைவர்
திரு. அசோக் சந்தா.

சென்ற பல இயல்களின் வாயிலாக இந்தியப் பொருளாதாரத்தில் மாநிலங்களின் மிடிமை நிலை பற்றித் தெளிவாக்கினோம். இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை கிடைத்ததே தவிர, இந்திய மாநிலங்களுக்கு நிதிச் சுதந்திரம் வரவில்லை. இன்றைய அரசமைப்புச் சட்டத்தால், மாநில அரசுகளின் நிதிச் சுதந்திரம் டெல்லி அரசின் ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாக்கப்பட்டு விட்டது. அதுமட்டுமா? கடந்த 25 ஆண்டுகளில் டெல்லி அரசின் ஏகபோக நடவடிக்கைகளாலும் நீங்கா நிதி அழுத்தங்களாலும் மாநில அரசுகள் தீரா மிடிமைக்கு ஆளாக்கப்பட்டு விட்டன.

மாநில மக்களின் அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளையும், நல்வாழ்வுத் திட்டங்களையும்; சமூக நலப் பணிகளையும் தவறாது நிறைவேற்றும் பெரும் பொறுப்பு மாநில அரசுகளின் மேல் சுமத்தப்பட்டுள்ளன. ஆனால், அப்பொறுப்பினை நிறைவேற்றத் தேவையான வருவாய் இனங்கள் மட்டும் மாநிலங்களுக்கில்லை; நிதி ஏற்பாடுகளுமில்லை. மாநில மக்களுக்குச் செய்து தீர வேண்டிய பல்வேறு பணிகளை, திட்டங்களை நிறைவேற்றவும் முடியாமல், அவற்றிற்குரிய நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் இயலாமல் இந்திய மாநிலங்கள் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தத்தளிக்கின்றன.

---

24 "The Financial Aspect of Union—State Relations" By A. K. Chande, in "The Union and the States"- 1972 Mr. S. N. JAIN, Page-249.

போதாத நிதி வசதி, தீராத வறுமை, மக்களுக்குச் செய்து தீர வேண்டிய பெரும் பொறுப்பு, மத்திய அரசிடம் மண்டியிட்டுப் பெறும் நிதி உதவிகள், கொத்தடிமையாக்கும் மத்தியக் கடன்கள், இந்த இழி நிலையே இன்றைய மாநிலங்களின் நிதி நிலை.

கொழுத்த வருவாயினை ஈட்டித் தருகின்ற சிறந்த வருவாய் இனங்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டது. மிகச் சிறு தொகைகளைத் தரத்தக்க—நெகிழ்வுத் தன்மையற்ற—வரியினங்களை மட்டும் மாநிலங்கள் பெற்றுக் கொண்டன. இன்றைய அரசமைப்புச் சட்டத்தின் நிதி பற்றிய இப்பாகுபாட்டினால் இந்திய மாநிலங்கள் நிரந்தர நிதிப் பற்றுக்குறையைப் பெற்று விட்டன.

ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு பகுதிச் செலவினங்களுக்காகப் புதிய வருவாய்களை அவ்வப்போது மாநிலங்கள் தேட வேண்டும்; இல்லையேல், மத்திய அரசின் விருப்ப மானியத்திற்காக வாய்பிளந்து காத்திருக்க வேண்டும்; அல்லது மாநிலங்களால் கட்ட முடியாக் கடனை மத்திய அரசிடமிருந்து முட்டி மோதிப் பெறவேண்டும்.

மத்திய நிதி உதவிக்காக ஏங்கித் தவித்து, தன் மானத்தையும், சுயாட்சி உரிமைகளையும் இழந்து விட்டு, நிதி ஆணைக் குழுவின் கருணைக் கண்ணோட்டத்திற்காக மாநிலங்கள் காத்து நிற்க வேண்டும். வரிப் பங்குத் தொகையினையும் உதவி மானியங்களையும் பொய்யான புள்ளி விபரங்களைக் காட்டிப் பெற வேண்டும். இத்துணை பாடுபட்டுப் பெற்ற வரிப் பங்குத் தொகைகளையும் மானியத் தொகைகளையும் மத்திய அரசிடமிருந்து வாங்கிய கடனுக்கு வட்டியாகவோ அல்லது திட்டச் செலவினுக்குச் செலுத்த வேண்டிய பங்காகவோ, திரும்பக் கொடுத்துவிட்டு, மீண்டும் மத்திய அரசு போடும் பிச்சைக்காசுக்காக, மொழியால், இனத்தால், வரலாற்றால் இயற்கையாகத் தரப்பட்ட மாநில சுயாட்சி உரிமைகளை இழந்து நிற்கவேண்டும். இப்படியொரு நச்சு வட்டத்தில் சிக்கி, உழன்றுழன்று அதனின்றும் மீளா நிலையினை மாநிலங்களே வேண்டி விரும்பி ஏற்றுக் கொள்கின்றன.

இவ்வகைத் தீரா மிடிமை பல்லாண்டு காலமாக நீடித்து நிலைத்து விட்டதால் மாநிலத் தன்னாட்சியுரிமைகள் எப்படிப் பறி போயிற்றென்றே தற்போது மாநிலங்களுக்குத் தெரியாமல்

போய்விட்டது. மாநில அரசுகள் என்ற தனி அமைப்புக்களே இந்திய ஆட்சி இயலில் இல்லாத ஒரு நிலையும் உருவாகி விட்டது. மத்திய அரசின் ஒற்றையாட்சி முறையும் பெருமிதமாக நடை போடுகிறது.

தன்னிலை தாழ்ந்து, தன்னாட்சியை இழந்து தவிக்கும் மாநிலங்கள் நிதித் துறையில் சுயமாகச் செயல்பட முடியா நிலைக்கு ஆட்பட்டு விட்டதால் அவ்வரசுகள் பொறுப்பின்றியும், திறன் இழந்தும், செயல் குன்றியும் நடைப்பிணங்கள்போல் இயங்கி வருகின்றன.

மத்திய ஐந்தாண்டுத் திட்டங்களால் மாநில அரசுகள் வெறும் நகராட்சிகளாக ஆக்கப்பட்டு விட்டன. கையறு நிலையில் சிக்கிய மாநிலங்கள் இவ்விழி நிலையை மாற்றியமைத்துக் கொள்ள முடியா நிலையில் துடித்து வெந்து சாகின்றன.

உதவி மானியத் தொகையையும் மத்திய அரசு வரியினப் பங்குகளையும், உளமாரக் கொடுக்கும் நிதி ஆணைக்குழுவினை அதிகாரமற்றதாகவும், ஒரு வலிவற்ற ஆலோசனை நிறுவனமாகவும், மத்திய அரசின் திட்டக்குழு மாற்றி யமைத்து விட்டதைத் தெளிவாகப் புரிந்திருந்தும்கூட, அதனை எதிர்க்க வக்கில்லாமல், வழியில்லாமல் மாநிலங்கள் கையறு நிலையில் கலங்கி நிற்கின்றன.

1958—59-ஆம் ஆண்டு முதல் இன்று வரை மத்திய அரசு போடும் பற்றுக்குறை நிதி நிலை அறிக்கை (பட்ஜட்)யில் நேரடித் தாக்குதல்கள் யாவும் மாநிலங்களின்மேல் விழுந்து வந்துள்ளன. திட்டச் செலவுகளுக்காகப் பல்லாயிரம் கோடிக் காகித நோட்டுகளை மத்திய அரசு அச்சடித்து வெளியிட்டதன் விளைவாக மாநிலங்களின் பொருளாதாரமே அடியோடு சீர்குலைந்து போயிற்று.

மத்திய வரியினங்களின் சதவீதம் உயர உயர மாநிலப் பண்டங்களின் விலையும் உயர்ந்து விடுகின்றன. அவற்றின் நேரடியான விளைவுகளை மாநில அரசுகளே ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அதுமட்டுமல்ல; பண வீக்கத்தின் காரணமாக, மாநில வரியினங்களின் உண்மை மதிப்பீடும் மேலும் குறைந்து போயிற்று.

ஏற்கனவே பற்றுக் குறையைக் கொண்டுள்ள மாநிலங்களில் இருக்கும் வரிகளையே உயர்த்தி, சீர்குலைந்து போன பொருளாதாரத்திற்கு ஈடுகட்டுமா? அல்லது மாநில மக்களின் கொதித்த உணர்ச்சிக்குத் தான் தடை போடுமா?

இவைகளையெல்லாம் ஆய்வு செய்த மாமேதையான அறிஞர் அண்ணா அவர்கள், 1967–ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதினேழாம் நாளில் தமிழகச் சட்டப் பேரவையில் தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தை முன்மொழிந்து உரையாற்றுகையில்,

"...இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில் யாரும் எதிர்பார்த்திராத பல புதிய போக்குகளும் மாற்றங்களும் தற்போது நிகழ்ந்துள்ளன.........இப் புதிய போக்கு; பொருளாதாரத் திட்டம் சம்பந்தப்பட்டதாகும். திட்டத்திற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், ஒதுக்கீடு செய்தல், அதைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக மத்திய அரசு பெற்றுள்ள அதிகாரங்கள் யாவும், மாநிலங்களை மத்திய அரசிடம் உதவிக்காக மன்றுடும் பிச்சைக்காரர்களின் தகுதிக்குக் குறைந்து விட்டன... மாநிலங்கள், தங்களின் விருப்பப்படி நிதி மானியங்களைப் பயன்படுத்தும் முழு உரிமையினைப் பெற வேண்டும். அவ்வகையில் தங்களது வருவாய்களைப் பெருக்க நிதி வாயில்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் மாநிலங்கள் ஒப்புக்கொண்ட அடிப்படையில் திட்டத்தின் (5 ஆண்டு) ஆதாரங்களை ஒதுக்கீடு செய்து, மாநிலங்களின் நிதி வருவாய் மூலங்கள் அதிக அளவிற்கு வலுவாக்கப் பட்டாலன்றி புதிய சமுதாயம் காண வேண்டுமென்ற, மக்களுடைய விருப்பத்தினை மாநில அரசுகள் சமாளிக்க முடியாது."

என மாநிலங்களின் வேதனையையும், விரக்தியையும், முதன் முறையாக வெளிப்படுத்தினர்.

மாநிலங்களது நிதிச் சுதந்திரம் பழுதுபடாமல் இருக்க— மாநில அரசுகள் மக்களுக்காற்ற வேண்டிய பணிகளைப் பொருளாதாரச் சிக்கலின்றி நிறைவேற்ற மலர்க மாநில சுயாட்சி.

கே. எஸ். ஆனந்தம் அவர்கள் எழுதிய
பிற நூல்கள்

மலர்க மாநில சுயாட்சி
[இது ஓர் ஆய்வு நூல்]
(1200 பக்கங்கள்)

விலை ரூ. 45-00

மாநாட்டுச் சலுகை விலை ரூ. 25/-

மாநில சுயாட்சியும்
இந்தி(ய) ஆட்சி மொழியும்
(130 பக்கங்கள்) [அச்சில்]

தங்கம் பதிப்பகம்
கோபிசெட்டிபாளையம்

மறைமலை அச்சகம், புன்செய்ப் புளியம்பட்டி - 638459.